பால பாரதி

புத்தகம் க] [illegible] [பகுதி 2

௨

கார்த்திகை

1924

JL
௯211, N24BB
N24·1·2
160199

The "BALA BHARATI," Sheramadevi, S. I. R.

Vol. 1 No. 2

தபால் எண்—ம. கக—அ/0

வருஷச் சந்தா { உள் நாடு ரூ. ரு—௦ ; வெளிநாடு ரூ. கூ—அ/

புத்தகம் க. பகுதி உ. | கார்த்திகை, கலியப்தம் ரு௦உகூ.

ஆசிரியன்: வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

பாரத்வாஜ ஆசிரமம், சேரமாதேவி.

"பாலபாரதி"—கார்த்திகை

விஷய அட்டவணை

——— (*) ———

	பக்கம்
முகப்புப் படம்—புத்தனும் விருத்தனும்	
புத்தன் துறவு (ஸ்ரீ சுத்தானந்த பாரதி)	௧
முஸ்லீம் பண்டிதரும் ஸநாதன தர்மமும் (ஸ்ரீ வ.வெ.ஸுப்ரஹ்மண்ய ஐயர்)	௨
ஆழ்வார்கள் (ஸ்ரீ சுத்தானந்த பாரதி)	௫
நபோலியனுடைய வீரப்பிரசங்கம்	௧௩
மார்க்க ஒளரேலியன் (ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளை) ...	௧௪
ராஜகோபாலன் கடிதங்கள்	௧௮
யோக ஸாதனம் (உத்தரயோகி ஸ்ரீ அரவிந்த கோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது)	௨௨
கம்ப ராமாயணம் (வ.வெ.ஸுப்ரஹ்மண்ய ஐயர்)	௨௫
குவாலியார் கோட்டை	௩௧
சங்கீதமும் இசை நூல்களும் (ஸ்ரீ ரா. முத்தையர்) ...	௩௫
ஸம்ராட் அசோகன் (ஸ்ரீ மஹேச குமார சர்மா)	௩௮
ஆலோகன அவலோகனம்	௫௨
புஸ்தக விமரிசனம்	௫௯
Reviews of Books	௬௨

மார்கழி சஞ்சிகையில் வர இருக்கும் விஷயங்கள்

——— o ———

ஸம்ராட் அசோகன்—யோக ஸாதனம்—ராஜகோபாலன் கடிதங்கள்—கடலின் அழைப்பு: ஓர் சிறு கதை—ஸூபிஸாதியின் திருவாக்குகள்—வர்க்கிலியன்—வைத்புதம்—கம்ப ராமாயணம் முதலியன.

விக்ஞாபனம்

"பாலபாரதி" கார்த்திகை

அன்பார்ந்த ஐயா,

தங்களுக்குச் சென்ற மாதம் அனுப்பப்பட்ட "பால பாரதி" மாதிரிப் பிரதியைத் தாங்கள் பார்த்ததிலிருந்து அஃது மானிட வாழ்க்கையைச் சீர்திருத்தி மேன்மைப் படுத்த வெளியாகும் ஓர் உயர்ந்த செந்தமிழ் சஞ்சிகை யென்று தாங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள். இனிய தமிழ் நடை எழுதக்கூடிய பல அறிஞர்களும், கல்விமான்களும், மேதாவிகளும் அதற்கு விஷயதானம் செய்துவருவார்கள். தங்களை ஓர் சந்தாதாரராகப் பதிவு செய்துகொள்ளலாமா என்பதற்குத் தங்களுடைய அன்பார்ந்த பதிலை எதிர்பார்க்கிறோம். தாங்கள் சந்தாதாரராக ஆவதுமட்டுமல்லாமல் தங்களுடைய நண்பர்கள் பலரையும் சந்தாதாரராகச்சேரும்படி தூண்டுவீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

சேரமாதேவி,
S. I. R.

காரியஸ்தன்
"பாலபாரதி"

<u>இதை வெட்டித் தபாலில் அனுப்புக.</u>

"பால பாரதி" காரியஸ்தர் அவர்களுக்கு

ஐயா,

தங்கள் மாதப் பத்திரிகைக்கு என்னை ஓர் சந்தாதாரனாகச் சேர்த்துக்கொண்டு பத்திரிகையை மாதாமாதம் அனுப்பிவரக் கோருகிறேன். இதற்காகச் சந்தாவாக

ரூ........ தபால் உண்டியல் (மணி ஆர்டர்) அனுப்பியிருக்கிறேன்.
க்குப் பத்திரிகையை எனக்கு விலை செலுத்தும் தபாலில் (வி.பி.யில்) அனுப்பவும்.

தேதி   கையெழுத்து.

பெயரும் விலாசமும் ______________________

தபால் ஸ்தலம் ______________________

---

* விலை செலுத்தும் தபாலில் அனுப்பச் செய்தால் அனாவசியமாகப் பத்திரிகையை ரிஜிஸ்தர் செய்யவேண்டி இருப்பதால் தயை செய்து தபால் உண்டியலே அனுப்பும்படி நேயர்களைப் பெரிதும் வேண்டிக் கொள்வோம்.

கம்ப ராமாயணம்

(o)

பால காண்டச் சுருக்கம்

(ஸ்ரீ வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் பதிப்பித்தது)

விரிவான முகவுரை, பல பாடபேதங்கள், தெளிபொருள் விளக்கம்,
அகராதி முதலியன அடங்கப்பெற்றது.

உபாத்தியாயர் இல்லாமல்கூடப் படிப்பதற்காகப்
பதம் பிரித்து அச்சிடப்பட்டது.

(*)

கம்பநாடரின்
உருவப்படத்துடன் கூடியது

விலை ரூ. இரண்டு

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

காரியஸ்தன்,

"பால பாரதி",

சேரமாதேவி.

ஓம்

பாலபாரதி

புத்தகம் க.	கார்த்திகை, கலியப்தம் ரு0உகூ.	பகுதி உ.

புத்தன் துறவு

(ஸ்ரீ சுத்தாநந்த பாரதியார் பாடியது)

அயிற் சுவை ஆடல் பாடல் அழகுறு பெண்கள் தாங்கத்
துயிற் சுவை, துகளில் மாதர், தோட்சுவை யணிகள் மின்னும்
மயற் சுவை வெறுமை யென்றே மனத்தினில் வெறுத்தான்: ஞான
வுயர்ச் சுவை யெண்ணுவோர்க்கும் உலகியற் சுவை பாங்காமோ?

* * *

வாடிய மலரும், தூய வாரியிற் புயலின் நிழல்,
வீடிய இலைகள் கண்டே விழியினின் றருவி பாய்ச்சிச்
சேடியர், மனைவி, மக்கள், திருவொடு மின்னு மின்பும்,
நாடக வுலகச் சீர்: போம் நமன்விடு திரைக்குள்! என்றான்.

* * *

கண்ணுற்றான் வயது மூத்துங் காலினை வணங்கி யாடி
மண்ணுற்ற வாழ்க்கை தன்னை வழுத்திடுங் கிழவன் சோர்ந்து,
“விண்ணுற்ற புகழோய்! நீயிவ் வேடமும் நடிப்பாய்,” என்ன
எண்ணுற்றான்; போலிப்பூவின் இருள் மருங் கறிய லுற்றான்.

* * *

“சோகுறும் உலகின் தீதைத் துயருடன் எண்ணி யிந்த
மோகுறு நொய்ய இன்பை முடித்துமே யுலக முய்யத்
தாகமே யானேன்: நீத்துத், தக்கதோர் மருந்தை நாடிப்
போகிறேன், உறங்குங் கண்காள்! புகலுமின் விடை!” யென்பானே.

* * *

பொன் னெலாம் புவியின் மாசு; பொருளெலாம் பொன்றும் மண்ணே;
பெண் ணெலாம் பிணியின் தூது; பிறப்பதும் இறப்பின் நேசன்;
மண் ணெலாம் அகந்தை; இந்த மாயையில் மோதலுற்றால்,
புண் ணலால் வேறொன்றில்லை; போகிறேன் அடவி! என்றான்.

(பாரத சக்தி.)

160199
211, N24B8
N24.1.2

முஸ்லீம் பண்டிதரும் ஸநாதன தர்மமும்

(ஸ்ரீ வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதியது)

முஸ்லீம்கள் ஹிந்து தர்மத்தைக் கேவலமாக மதிக்கிறார்கள் என்பது நாட்டில் பெரும்பாலரின் அபிப்பிராயமாக இருக்கிறது. முஸ்லீம்கள் ஹிந்துக்களைக் காப்பிரிகள் என்று சொல்வதும் அதற்குப் பதிலாக ஹிந்துக்கள் முஸல்மான்களை மிலேச்சர்கள் என்று சொல்லுவதும் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆனால் இஸ்லாம் மதத்தின் தத்துவங்களையும் ஸநாதன தர்மத்தின் தத்துவங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பண்டிதர்களும் உலமாக்களும் ஒருவரையொருவர் மரியாதையோடும் கௌரவத்தோடும் பாவிப்பார்கள் என்பதில் தடையில்லை. தற்காலம் உத்தியோக ஆசையால் தோன்றி வளர்ந்திருக்கிற பரஸ்பர அசூயையும் குரோதமும் இந்தச் சத்தியத்தை மேகம் மூடுவது போல மூடிவிட்டிருக்கிறது. ஹிந்துஸ்தானத்தைப் படையெடுத்து, அதிலுள்ள அநேக ராஜ்யங்களின் சுதந்தரத்தை அழித்து, சிற்சில வேளைகளில் மனிதர் செய்யத்தகாத அக்கிரமங்களைச் செய்த அன்னியர்கள் பெயருக்கு மாத்திரம் இஸ்லாம் தர்மத்தைத் தழுவி, அதன் வெளிப்படையான சம்ஸ்காரங்களைப் பெற்று இருந்தமையாலும், கடவுளுடைய மகா கூடமான சங்கற்பத்தில் இஸ்லாம் தர்மமும் இந்த அன்னியருடைய சைனியத்தின் பின்னணியிலேயேதான் வந்து இந்நாட்டில் பரவத் துவக்கினதாலும், ஹிந்துக்களுக்கு இஸ்லாம் தர்மத்தின்மீது அசூயை பிறப்பது இயற்கையே. பகிர் முகமாகப் பார்க்கையில் பல்வேறு தெய்வங்களை வணக்கஞ் செய்யும் ஹிந்துக்களை லா இலாஹ இல் அல்லாஹு என்ற கம்பீரமான சிங்க நாதத்தை மூலமந்திரமாகக் கொண்ட முகமதியர்கள் கேவலமாக மதிப்பதும் சகஜமே. ஆனால் ஹிந்துக்கள் கஜனி மாமூதையும், கவுரி ஷஹாபுதீனையும், பாபரையும், ஔரங்கஜேபையும் இஸ்லாமிய தர்மத்தின் பிரதிநிதிகளாக பாவிக்கக் கூடாது: மற்று, அதிக்கிரமம் செய்த அன்னிய அரசர்களாகத்தான் அவர்களை எண்ண வேண்டியது. அவர்கள் பங்கில் முஸ்லீம்கள் ஸநாதன தர்மத்தின் மூல தத்துவங்களை ஆராயாமல் அதைக் குறைவாக மதிப்பது அறியாமை என்று உணர வேண்டியது.

இவ்விரு திறத்தவரும் ஒருவரையொருவர் நன்கு மதித்துக் கொள்ள வேண்டுமானால் ஒவ்வொருவரும் மற்றவருடைய வேத சாஸ்திரங்களின் போக்கை அறிந்துகொள்ளவாவது முயல வேண்டும். மனித ஜாதியில் ஒரு பிரதானமான வகுப்பு உண்மை ஞானமில்லாமல் அநேக நூற்றாண்டுகள் ஜீவித்து வர முடியுமா என்றும், அதினும் ஜயம் பெற்று நிற்குமா என்றும் தமக்குள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஹிந்துக்கள் மூட ஆவேசத்தினால் முஸ்லீம்களை அசுத்தமான மாக்கள் என்றும் மிலேச்சர்களென்றும் சொல்லலாம்; முஸல்மான்கள் ஹிந்துக்களைக் காப்பிரிகள் என்று சொல்லி அவமதிக்கலாம். ஆனால் இவ்விருவகைக் கொள்கையினரும் கடவுளின் சரிசமானமான புத்திரர். கடவுளுக்குப் பாரபக்ஷம் கிடையாது. அவனவனுடைய யோக முயற்சிக் கேற்ற வண்ணம் அவனவனுக்கு அத்தனிப் பெருஞ் சுடர் தன்னைத்தான் பிரகாசிப்பித்துக் கொள்ளுகிறது. ஜீவகோடிகள் அனைவரிடத்தும், ஜாதி மத வேற்றுமை பாராட்டாமல், பராசக்தி தாயினும் பன்மடங்கு கொண்ட அன்பு செலுத்தி வருகிறாள் என்பதில் யாரேனும் ஐயப் படுவார்களா? ஆகையால் இதை மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டு முஸல்மான்களும் ஹிந்துக்களும் ஒருவர் மற்றவர்களுடைய பழக்க வழக்கங்களையும், சாஸ்திர வேத புராணங்களையும், இதிகாசங்களையும் ஆராய்ந்து பார்க்கக் கடவர்.

சில முஸ்லீம் மகா பண்டிதர்கள் இவ்வாறு ஹிந்துக்களின் தர்மங்களையும் வழக்க பழக்கங்களையும் ஆராய்ந்து பார்த்துத் தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். முஸல்மான் அரசர் ஹிந்துக்களை இம்சிக்கப் போந்த போது பல ஆலிம்கள் ஸநாதன தர்மத்தின் பெருமைகளை—தங்களுக்குத் தெரிந்த அளவுக்கு—எடுத்துக் காட்டி இம்சிக்காதபடி தடுத்திருக்கிறார்கள். இக் கட்டுரையில் இவ்வாறு முகம்மதிய உலேமா மனச் செம்மை காட்டிய சந்தர்ப்பங்கள் சிலவற்றை எடுத்துப் படிப்போருக்குக் காட்டுவதுடன், சில உலேமாக்கள் ஹிந்து தர்மங்களைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் மொழி பெயர்த்து எழுதுவோம். இதனால் முஸல்மான்களும் தங்கள் ஆலிம்கள் கொண்டாடியிருக்கிற ஸநாதன தர்மத்தைக் கீழாக மதித்தல் தவறென்று நினைத்து அந்த உரிய தர்மத்தை ஆராயத் துவக்குவார்கள் என்றும், ஹிந்துக்களும், முஸ்லீம் கல்விமான்கள் தங்கள் தர்மத்தை ஆராய்ந்து பார்த்து அதை நன்கு மதிக்கிறார்கள் என்று கண்டு, முஸ்லீம்களின் மீது அசூயை இருப்பின் அதை விட்டுவிடுவார்கள் என்றும் நம்புகிறோம்.

ஸிக்கந்தர் லோதி என்று ஓர் அரசன் தில்லியில் ரு00 வருஷங்களுக்கு முன் அரசாண்டு வந்தான். சில வைஷம்மிய புத்தியுள்ள முஸ்லீம் பண்டிதர்கள் ஸ்தானேசுவரத்தில் ஹிந்துக்கள் புண்ணிய தீர்த்த ஸ்நானம் செய்து உற்சவம் கொண்டாடுவதைத் தடுத்து விடவேண்டுமென்று அவனுக்கு யோசனை சொன்னார்கள். ஆனால் அவன் சபையில் மியான் அப்துல்லா அஜோதினி என்ற ஓர் மேதாவி இருந்தான். அவன் ஹிந்துக்களுடைய தர்மங்களைப் பற்றி ஆராய்ந்திருந்ததோடு, அரசன் பிரஜைகளை எவ்வாறு பரிபாலிக்க வேண்டும் என்கிற விஷயத்தைப் பற்றியும் ஆழமாக யோசித்து வைத்திருந்தான். ஆகையால் மேற்சொன்ன உலேமாவின் யோசனையைக் கண்டித்து, ஹிந்துக்களின், உற்சவங்களை ஒரு நாளும் தடுக்கக் கூடாது என்று ஸிக்கந்தருக்குச் சொல்லி அத் திருவிழாவை வழக்கம் போல நடைபெறும்படி செய்தான். இதனால் ஸிக்கந்தரின் அரசாட்சியில் ஹிந்துக்களும் முஸல்மான்களைப் போலவே திருப்தியுடன் வாழ்ந்து அவ்வரசனிடம் ஆழ்ந்த அன்பு செலுத்தி வந்தார்கள்.

தில்லியில் வசித்த பெரிய சட்ட நிபுணனான மௌலானா ஷா அஜீஜ் என்பவன் 'பஷாரத் அஹமதி' யென்ற தனது நூலில் ராமனைப் பற்றி அவமதிப்பாகப் பேசக் கூடாது என்று கூறிவிட்டு, கண்ணப்பிரானைப் பற்றிப் பின் வருமாறு எழுதுகிறான்:

“கன்னையாஜியைப் பற்றி(பகவான் ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றி)நாம் கேவலமாகப் பேசக்கூடாது. ஹிந்துக்களின் சத்திய நூல்களிற் சிறந்ததான பகவத்கீதையினின்று கன்னையாஜி ஆத்மபோதம் நிறைந்த ஓர் பரம குருவாக இருந்தான் என்று ஏற்படுகிறது. அவனுடைய திருக் கோயிலான மதுரை அன்புக்கே ஆயதனம் என்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை.”

லக்னௌவுக்குப் பக்கத்திலிருக்கிற பன்ஸாவிலிருந்த மௌலானா ஷா அப்துல்ரஜாக் என்பவன் அவன் காலத்தில் உத்தமோத்தமமான யோகியாகவும் பக்தனுமாகவும் இருந்தான். இன்றைக்கும் அவனுடைய ஸமாதிக்கு ஆயிரக் கணக்கான முகம்மதியர் சென்று தரிசனம் செய்துகொண்டு

பிரார்த்தனை செலுத்துகிறார்கள். இந்த மகான் மக்கா ஷரீபுக்கு ஹஜ் போகும் பொழுது கண்ணன் பிறந்த திரு நகராகிய மதுரையில் தங்கின தினத்தில், கிருஷ்ண பரமாத்மாவை ஸ்வப்னத்தில் தரிசித்துப் பரமானந்தம் கொண்டதாகத் தனது நண்பரோடு அடிக்கடி சொல்லுவானாம்.

அக்பர்சக்ரவர்த்தியின் சகாவும் சபாபூஷணமுமான அபுல் பஜலை அறியாதார் இல்லை. இவன் பாரஸீக முகம்மதியன். ஆனால் சம்ஸ்கிருத பாஷையை ஆழமாகக் கற்று, அதிலுள்ள வேத சாஸ்திரங்களையும் நன்கு ஆராய்ந்து அவன் ஹிந்து தர்மத்தின் பெருமைகளை நன்றாக உணர்ந்து கொண்டிருந்தான். அவனுடைய அயின்-இ-அக்பரி என்னும் நூலில் ஹிந்து தர்மத்தின் புகழ் அனேக இடங்களில் காணப்படும். அதினின்று ஓரிரண்டு வார்த்தைகள்தாம் ஈண்டு எடுத்துக் காட்ட முடியும். அவை பின்வருமாறு: "ஹிந்து நூல்களில் அனேகம் உயர்ந்த, விலை மதிப்புக் கடங்காத தர்மோபதேசங்கள் காணப்படுகின்றன... தங்கள் பிராணனைக் கூடக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய ஹிந்துக்கள் எப்பொழுதும் சன்னத்தமாயிருக்கிறார்கள். கடவுள் ஒருவனே என்பதே அவர்களுடைய மதம்... தனிப் பெருங்கடவுள் ஒருவனே திரிமூர்த்தியாகிறான் என்று அவர்கள் கூறுவர். இது கிறிஸ்தவர்களின் திரிமூர்த்தி மதம் போன்றதோர் மதம். அவர்களில் இன்னொரு சாரார் பக்தியினாலும், ஆத்ம சுத்தியினாலும் யமநியமங்களாலும் மனிதன் மேன்மையை அடைகிறான் என்பர். ஆனால் எது எவ்வாறு இருப்பினும் இவர்களிடம் காணப்படும் ஒழுக்கமும் தவமும் உலகத்தில் வேறு எங்கும் காண முடியாது."

கஜினி மாமூதின் காலத்தில் பரத கண்டத்துக்கு வந்து இந் நாட்டின் நாகரீகமனைத்தையும் ஆராய்ந்து பார்த்திருக்கும் அல் பரூனி என்பவன் நம்மைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறான்:

"கடவுளைப்பற்றி ஹிந்துக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் இதுவாகும்: அவன் ஏகன்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; சாசுவதன்; எதனாலும் கட்டுப்படாத சுயேச்சா சங்கற்பன்; சர்வ சக்தன்; சர்வஞ்ஞன்; உயிருக்கெல்லாம் உயிராய் நிற்கிறான்; அவனே உயிர்க்கடல்; நேதா; ரக்ஷிதா; உவமைக்கும் அனுபமைக்கும் அதீதமாக நின்று சர்வத்தையும் ஆளுகிறவன்; அவனுக்கு எதையும் ஒப்பிடமுடியாது; அவனையும் எதற்கும் ஒப்பிடுதல் முடியாது!"

மிர்ஜா மஜேர் ஜன்ஜன் என்று ஒரு மகான் இருந்தான். அவனுடைய பாதரக்ஷையை அவன் காலத்துப் பெரிய ஆலிமான காஜி ஸனா-உல்-லா என்பவன் கையில் தூக்கிச் செல்வான் என்றால் அவனுடைய பெருமை ஒருவாறுபடிப் போரால் ஊகிக்கப்படும். அவன் ஓர் கடிதத்தில் ஹிந்துக்களைப் பற்றி எழுதுகிறான். அக்கடிதம் இன்னும் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. அதன் முக்கியமான பாகம் பின் வருமாறு:

"ஹிந்துக்களுக்குள்ளே உள்ள ஓவ்வோர் சமயத்தவரும் கடவுள் ஒருவனே என்று பூரணமாய் உணருகிறார்கள்... அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள் என்பது தவறு. விக்கிரகங்களில் கடவுளை ஆவாகனம் செய்து அவ்வாறு ஆவாகனம் செய்யப்பட்ட கடவுளைத்தான் அவர்கள் வணங்குகிறார்கள்... இதினின்று ஹிந்துதர்மம் தெய்வீகமான ஓர் தர்மம் என்றும், யூத தர்மத்தைப் போலவும் கிறிஸ்தவ தர்மத்தைப் போலவும் தற்பொழுதுதான் (இஸ்லாம் தர்மம் தோன்றிய பிறகு) ரத்து செய்துவிடப் பட்டது என்றும் தெளிவாக ஏற்படுகிறது. நம்முடைய வேத நூல்கள் ஹிந்துக்களைப் பற்றிப் பேசாததால் அவர்கள் காப்பிரிகள் என்று கூறுதல் சரியாகாது. ஈசுவரனுடைய குணங்களை உருவமாக்கி விக்கிரகங்கள் செய்து, அக்குணங்களைத் தாங்கள் பெறுவதற்காக அவ் விக்

கிரகங்களுக்கு முன்னே நின்று அவர்கள் தியானம் செய்கிறார்கள். உண்மையில் முஸ்லீம் ஸுபிகள் சாதனை புரிகின்ற ஜிகர்-இ-ராப்தா என்கிற மார்க்கத்துக்கும் இதற்கும் யாதொரு பேதமுமில்லை. அஸத் தர்மத்தில் வீழ்ந்திருந்த அராபியர்களின் விக்கிரகாராதனைக்கும் ஹிந்துக்களின் விக்கிரகாராதனைக்கும் சம்பந்தமே இல்லை." *

ஆழ்வார்கள்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது)

க

"பொன்னைக்கொண் டுரைகல் மீதே
நிறமெழ வுரைத்தாப்போல
வுன்னைக் கொண் டென் நாவகம்பால்
மாற்றின்றி யுரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண் டென்னுள் வைத்தேன்
என்னையு முன்னி லிட்டேன்
என்னப்பா! என் னிருடீகேசா!
என்னுயிர்க் காவலனே."
(பெரியாழ்வார்)

நம் தமிழ்த் தாயை எத்தனை அன்பர்கள் ஆவேச தூபங்காட்டிப் பாமலர்களால் பூசித்திருக்கின்றனர்! அப்பாமலர்களின் அழகும் மணமும் அளவிடப்படுமோ! தமிழ்நாட்டின் ஒவ்வொரு துளிமண்ணும் கடவுள் தன்மை யடைந்த பெரியோரின் காற்றுகளே! தமிழ் அணங்கே உன் தெய்வீக மண்ணுக்கு வந்தனம்!

நம் தமிழ்த் திருவின் மடியில் வளர்ந்த எண்ணிறந்த அருள் மைந்தருள், தமது வாழ்வையெல்லாம் கடவுட் பணியிலேயே கழித்து, கடவுளே தம் நாவினின்று பேசப்பெற்ற ஆத்ம வீரர் இருதிறத்தர். அவர்களே ஆழ்வார்களும் நாயன்மார்களுமாவர். இவர்கள்மூலமாக ஈசன் பேசி, மக்கள் உய்யும்வழியைக் காட்டினன். இவர்களுள் ஆழ்வார்கள் மாலுக்கே மையல் கொண்டனர். நாயன்மார்கள் அரன்பணி யாற்றினர். இவ்வியாசத்தில் ஆழ்வார்களைப் பற்றியே ஆராய்வோம்.

உ

"இன்றாக நாளையே யாக இனிச்சிறிதும்
நின்றாக நின்னருளென் பாலதே—நன்றாக
நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே
நீ யென்னை யன்றி யிலை."

எல்லாம் அவனே, அவன் திருவுளமே ஆகும், என்று மார்வமென்பதோர் கோயிலமைத்து, மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூவிட்டு, அவன் அன்பிலேயே ஆழ்ந்துகிடப்பவரே ஆழ்வார்கள் எனப் படுவர். இவர்கள் பன்னிருவராவர். அவர்கள் முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகரஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், எனத் திருப்பெயர் புனைந்தவர். இவர்கள் நெஞ்சகத்தினின்று ஊறிய பாவூற்றே நாலாயிரப்பிரபந்தம். அன்பினால் ஊறி தெய்வச் சுவையளிக்கும் இவ்வூற்றின் இனிமையை இயம்பவும்படுமோ! தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே, என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ, கடல்நிறக்கடவுள் எந்தை அரவணை துயிலக்கண்டு, உடலெனக் குருகுமாலோ, என்செய்கேன் உலகத்தீரே, கற்குங் கல்வியெல்லாம் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான் என்றே, என்னும் அமுத அருள்மொழிகள் நமது மனத்தைக் கடவுள்பால் இழுக்கின்றன! நெஞ்சை அன்பால் நிறைக்கின்றன! தமது எல்லாவற்

* மேலே எடுத்தெழுதப்பட்ட முஸ்லீம் ஆலிம்களின் கூற்றுக்களெல்லாம் பண்டிதர் அப்துல் மஜீது என்பார் கொஞ்ச காலத்துக்குமுன் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்ட ஓர் வியாசத்தினின்று எடுக்கப்பட்டன.

றையும் ஈசனுக் கீந்து, தம்மையும் உலகையும் மறந்து, நினைத்தொறும், சொலுந்தொறும், உயிர்க்குந்தொறும், திருமாலையே யெண்ணித் திருமாலும் தாமு மாகவே வாழ்ந்த தெய்வீக மைந்தரை யீன்ற பாரததேவீ! உன் திருவயிறு வாழி!

தனது அருட் குடும்பத்தைச் சேர்ந்த ஆழ்வாராதிகளுக்கு ஈசன் தந்தையாயும், அண்ணலாயும், தனயனாகவும், கணவனாகவும், தலைவனாகவும் விளங்கி அவர்கள் அன்பைக் கொள்ளை கொண்டான். ஆழ்வார்களெல்லாம் அரவணைச் செல்வனைத் தம் உறவினனாக்கிப் பணிந்தனர். சத்யம் ஞான மநந்த கல்யாண குணங்களுடன், வைகுண்டத்தில் விளங்கும் பரவாசுதேவரை இராம, கிருஷ்ண விபவ விக்கிரக ரூபமாய் ஆராதனை செய்து,

உருவைத் தொழுதெண்ணி யுள்ளொளியைக் கண்டு
வுருவிலொரு தேவை யுணர்

என்றபடி அவனுருவையே எண்ணி எண்ணி, ஆனந்த பரவசமாகி, மற்றதை மறந்து அவனுருவையே தன்னுள்ளும் வெளியும் கண்டு, அவனோடு ஒன்றாகி அவன் அன்பிற் கரைந்ததே ஆழ்வாராதிகள் செய்த தவம்.

நம்மாழ்வாரின் அன்பில் அகத்தைச் சற்று செலுத்துவோம். இவர் வேளாள மரபினர். சேனை முதலியாரின் அமிச முள்ளவர். இயற்கையிலேயே பாசத்தினின்று நீங்கியவர். பிறவித் துறவி. பிறந்ததும் திருப்புளிப் பொந்தில் மௌன சமாதியில் பதினாறாண்டளவும் ஆழ்ந்தார். இவருடைய ஜோதியை அயோத்தியினின்று கண்ட மதுரகவியாழ்வார், இவரை யணுகிச் சரண மடைந்து இவருடைய பற்றற்ற தன்மையை வியந்து "செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே யிருக்கும்?" என்றார். "ஜடமான உடலிலுள்ள சூட்சுமமான ஆத்மா எப்படி ஜீவிக்கிறது," என்பது இதன் பொருள். அதற்குச் சடகோபர் "அத்தைத் தின்று அங்கேயிருக்கும்," என்றார். ஆத்மாநந்தத்தையே அனுபவித்துச் சலனமற்று, இருந்த விடத்திலேயே நிலைத்திருக்கும் என்பது இதன் பொருள். என்ன மனவுறுதி! சடகோபரின் மனநிலைப்பின் திறம் என்னே! இதைக் கேட்ட மதுரகவியாழ்வார் சடகோபரை வணங்கித் தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டினார். தான் இப் பதினாறு வருஷங்களாகத் திரட்டி வைத்துக் கொண்டிருந்த பக்தி தெள்ளிய பாவாறாய் வெளிவந்தது. சாம வேதத்தையே தெளிந்த பாவினால் ஆர்த்தார். கண்ணன் திருவுருவை யெண்ணி யெண்ணிக் காதலித்து எங்குங் கண்டு, விழைவுண்ட பத்தினி தன் நாதனை விரும்புமாபோல் மாலினிடம் மையல் பூண்டார். அவனை எண்ணிய விட மெல்லாம் கண்ட வுடனே தன் காதலைக் கானமாக வெளியிட்டார். கடலையும் மண்ணையும் விண்ணையும், காற்றையும் புயலையும், மலையையும் நதியையும் கண்ணனிடம் தூதனுப்பித் தன் காதலைத் தெரிவித்தார். இரவெல்லாம் கண்ணனுக்காகக் காத்திருப்பார்.

ஊரெல்லாந் துஞ்சி யுலகெல்லாம் நள்ளிருளாய்,
நீரெல்லாம் தேறி யோர் நீளிரவாய் நீண்டதால்,
பாரெல்லாம் உண்ட நம் பாம்பணையான் வாரானாப்
யார்எல்லே! வல் வினையேன் ஆவி காப்பார் இனியே

என்று காதலுறுவார்.

யானே யென்னை யறிகிலாத
யானே என்றனதே யென்றிருந்தேன்;
யானே நீ; என்னுடைமையும் நீயே,
வானே யேத்தும் எம் வானவ ரேறே!

என்று அனைத்தும் அவன் மயம் எனத் தன்னையே அவனுக்கு அர்ப்பணித்தார். "கண்ணபிரான் என்னமுதம்," "கலந் தென் னாவி நலங் கொள் நாதன்," "வேட்கை நோய் மெல் லாவி யுள் ளுலர்த்த ஓவாது இராப்பகல் உன்பாலே வீழ்த் தொழிந்தாய்," 'ஆணல்லன், பெண்ணல்லன், அலியுமல்லன், காணலுமாகான், உளனல்லனில்லை யல்லன், பேணுங்கால்பேணுமுருவாவன், அல்லனு மாம்," என்றும் பலவிதமாகத் தன் நாதனை நம்மாழ்வார் துதிக்கும்போது அதே நாதனை நமது ஜீவன் கூவி அழைக்கவில்லையா! நம்மாழ்வார் பாடிய இணையற்ற இனிய பாசுரங்களில் "கண்ணன் கழலினை" என்ற ஒரு சொல்லே உலகின் கவிகளை

வென்று சங்கப் பலகை யேறிய தெனில் அவர் பெருமை புகலவும் படுமோ? அவர் கவிகள் இணையற்றதென்பதைக் காட்டக் கம்பரும் 'ஈயாடுவதோ கருடர்க் கெதிரே; இரவிக் கெதிர் மின்மினி யாடுவதோ; நாயோடுவதோ உறுமிப் புலிமுன்; நரி, கேசரிமுன் நடையாடுவதோ; பெருமானடி சேர் வகுளாபரணன் ஓராயிரமா மறையின் றமிழின் ஒரு சொற் பெறுமோ வுலகின் கவியே,' என்று பாடினர். மதுரகவியாழ்வார் நம்மாழ்வார் வைபவத்தையே பாடி வீடு பெற்றார்.

கணவனாக எம்பெருமானை யெண்ணி விரகங்கொண்டு உருகியவரில் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் முதன்மையானவர். இவர் துளசி வனத்தினின்று விஷ்ணு சித்தர் என்ற பெரியாழ்வாரால் கண்டெடுத்து வளர்க்கப் பெற்றார். நாடோறும் பெரியாழ்வார் திருமாலுக்குத் தொடுத்து வைத்திருக்கும் மாலையைத் தொடுத்ததும் ஆழ்வார் அப்புறம் போயிருக்கும் போது, தான் அணிந்து அழகு பார்த்துக்கொண்டே வந்தார். இதை யறியாத விஷ்ணுசித்தன் அம் மாலையைத் தினந்தோறும் திருமாலுக்குச் சாற்றி வந்தார். ஆயினும் ஒரு நாள் ஆண்டாளின் செயலைக் கண்டு திடுக்கிட்டு அபசாரம் வந்தது என்று கவலையுற்றார். அன்று கனவில் பெருமாள் தோன்றி "அன்ப, பக்தையான ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே எனக்கு இனிது," என்றதும், அவ்வாறே ஆண்டாள் சூடியதை ஆண்டவனுக்குப் போட்டு மகிழ்ந்தார். தான் ஈசனையே மணாளனாக எண்ணி நான் அவனுடைய அழகிற்கு ஒத்திருக்கிறேனோ ஒவ்வாதிருக்கிறேனோ என்று மாலை சூடித் தன்னையே கண்ணாடியிற் கண்டு சோதித்துக் கொள்வாளாம் ஆண்டாள். ஈசனுடைய திருவடிவிற் கேற்றபடி தானும் மனதுடலில் அழகு நிரம்பியிருக்க வேண்டுமென்று எண்ணினள். இப்படி யெண்ணி யெண்ணி, அண்ட நாயகன் மீது அடங்காக் காதல் பூண்டாள். ஆண்டாளுக்கு மணப்பருவம் வந்தது. தான் ஸ்ரீரங்கநாதரையே மணந்துகொள்ளப் போவதாகக் கூறினள். கனவிலும் நினைவிலும் அவர் திருவுருவையே கண்டாள். தான் குளிக்கக் காலை எழும் போதெல்லாம் தான் நந்தகோகுலத்தில் கோபியருடன் இருப்பதாக எண்ணி, 'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம், கார் மேனிச்செங்கண், கதிர் மதியம்போல் முகத்தான், நாராயணனே நமக்கே பறைதருவான்! பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய், என்று உள்ளங் கசிந்துருகப் பாடுவாள். 'எற்றைக்கும் ஏழ் பிறவிக்கும் உன்னோடு உற்றோமே யாவோ முனக்கே நாமாட்செய்வோம். மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம் பாவாய்!' என்று கண்ணன் திருப்பணிக்கே தன்னை யீந்து மகிழ்வாள். அவனுக்கே ஆட்செய்த தெய்வப் பெண்டிர் உதித்த தமிழ் நாடே! தற்போது உன் பெண்டிருள் ஒரு தேசப் பணி செய்யும் ஆண்டாள் இல்லையோ!

இப்படி அணி அரங்கத் தம்மானுக்கே தீர்ந்த காதலுடைய ஆண்டாள் "ஏ நாரணனே! உன்னை மாமி தன் மகனாகப் பெற்றால் எமக்கு வாதை தவிருமே! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே!" என்பாள்.

கூட்டிலிருந்து கிளியெப் போதும்
கோவிந்தா! கோவிந்தா என்றழைக்கும்
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்
உலகளந்தா னென்றுயரக் கூவும்
நாட்டில் தலைப்பழி யெய்தி யுங்கள்
நன்மையிழந்து தலை யிடாதே
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
துவராபதிக் கென்னை யுய்த்திடுமின்,

என்று இந்த ஊன் கூட்டில் அடைபட்ட அவள் ஜீவாத்மாவான கிளி பரமாத்மாவாகிய அரங்கனை யடைய ஆத்திரப் படுவதைப் பார்மின்! ஏ தமிழ் நாடே! சுதந்திர மடைதற்கு உன் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் இவ்வித ஆத்திரத்தை யூட்டுவாயாக! சோறூட்டும் போதும் சுதந்திர தேவீ! என்று கூவ மக்களின் வீராவேசத்தைப் பெருக்குவாயாக! எனது ஆராவமுதன் வாயிலூறிய நீர்தான் கொணர்ந்து, 'புலராமே பருகி இளைப்பு நீக்கீர் என்று அனைவரிடமும், உரைக்கும் ஆண்டாளின் அன்பை ஐயன் அகங்குளிர அறிந்தான். கனவில் தன்னோடு மணக்கும் கோலத்தை வெளியிட்டான். ஆண்டாள் கனவில் அரங்கநாதன் தன் கரத்தைப் பிடித்துத் தீயை வலம் வந்து மணக்கக் கண்டு,

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத,
முத்துடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்,
மைத்துனன்நம்பி மதுசூதனன்வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ நான்,

என்று தான் கண்ட மணக்கோலத்தைப் பலவிதமாகத் தன் தோழிகளிடம் சொல்லுவாள். இந்த ஒப்பற்ற அன்பை உளத்துட் கொண்டு அழகிய மணவாளர் பெரியாழ்வார் கனவில் நாம் ஆண்டாளை நாளையே மணப்போம் என்று தன் கோயிற் சேவகர் மூலம் ஆண்டாளை அழைத்துவர முத்துப் பல்லக்கும் விருதுகளும் மேளதாளங்களும் விடுத்தார். ஆண்டாள் அரங்கன் சந்நிதி சேர்ந்தாள். அரவணைமீது துயிலும் செல்வனுக்கு நாயகியாக அவன் பக்கம் சென்றாள். ஒரு ஜோதி தோன்றியது. நாதன் இவ்வன்புருவைத் தன் அருள் ஒளிக்குள் கரையச் செய்தான். என்னே ஆண்டாளின் பக்தி! ஆண்டாள் உதித்த தமிழ்நாட்டுப் பெண்களே உங்களுக்குச் சுதந்திரம் பெற இத் தகைய தாகம் உண்டாகட்டும்!

ரு

குலசேகர ஆழ்வாரின் அன்புப் பெருக்கை எண்ணுந்தொறும் அது நமது ஆவியுடன் கலக்கிறது. 'தூலினையிடையார் திறத்தே நிற்கும்,' 'உண்டியே யுணவே யுகந்தோடிடும்,' 'மெய்யில் வாழ்க்கையை மெய் யெனக் கொள்ளு மிவ் வையகத் தொடு கூடுவதில்லை யான்; ஐயனே! அரங்கா! என்றழைக்கின்றேன்' என்று, பெண் போகத்தையும் பொரு ளாசையையும் துறந்து, பரிசுத்தமாகி, மனம் உருகி, அல்லும் பகலும் இராமனுடைய விக்கிரகத்தையே தியானித்து மகிழ்வார். ஒரு நாள் நமது ஆழ்வார் இராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் கரதூஷணாதி யுத்த வரலாற்றைப் பரவசத்துடன் கேட்டுக்கொண்டே யிருந்தார். அப்போது பௌராணிகர்,

சதுர்தச ஸஹஸ்ராணி, ராக்ஷஸாம் பீம கர்மணாம்
ஏகச்ச ராமோ த்ஹர்மாத்மா யத்ஹம் யுத்த்ஹம்
[ப்ஹவிஷ்யதி,

என்னும் சுலோகத்தைப் படிக்கக் கேட்ட ஆழ்வார், 'ஆ எனது இறைவனான இராமன் ஏகனாய்ப் பதினாலாயிரம் இராக்ஷஸருக் கெதிரேயோ நிற்கிறான்! யுத்தம் எங்கு இளைக்கிறதோ என்று சொல்லுகிறீர்! பாரும், உடனே எனது சைனியங்களைத் திரட்டிக் கொண்டு அவருக்கு உதவி செய்கிறேன், என்று தன் சைனியங்களைத் திரட்டிக்கொண்டு வந்து விட்டார். பிறகு இராமர் ஜெயம் பெற்றார் என்று கேட்ட வுடனேயே அவருடைய ஆவேசம் தணிந்தது. இப்படித் தன் மனதை முழுதும் கடவுளுக்கே ஈந்த குலசேகரர் உதித்த தமிழ் நாடு, இப்போது உறங்குவதைப் பாருங்கள்!

'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்,
மீளாத காதல் நோயாளன்போல், மாயத்தால்,
மீளாத்துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா நீ!
ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே.'

உலக மாயை தன்னை வாட்டுவதெல்லாம் தன் வினை செற்று பந்த நிவிர்த்தி யாவதற்கே என்று உணர்ந்தார். மருத்துவன் வாளால் அறுப்பதெல்லாம் தன் புண்ணாறிச் சுகம் பெறவேயன்றோ! கடவுளின் சங்கல்பத்தால் நாம் செய்த தீவினைக்குத்தண்டனை வரினும் அதைப் பொறுத்து, பந்தவினைக்கு மருத்துவனாகிய ஈசனை என்றும் மறவாது இருக்கவேண்டிய உண்மையை எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்! அதுபோலவே நம் நாடு சுதந்திரம் அடையும் வழியில் எத்துணை இடுக்கண் நேரினும் அவை யெல்லாம் நமது வாழ்வைப் புனிதப் படுத்தவே, என்ற தைரியத்தை இக் கவியின் மூலம் ஆழ்வார் உரைக்கிறார். தாய் நாட்டீர்! இப் பாட்டினின்று உங்களுக்குத் தேசப் பணியில் ஓர் ஆவேசம் பிறக்கட்டும்!.

திருமங்கையாழ்வார் கள்வர் தலைவன். தன் ஆடல் மாவில் ஏறிக்கொண்டு சோழ ராஜனுடைய சேனைத் தலைவனாகப் போகும்போது, குமுதவல்லி என்ற வைணவியைக் காதலித்தார். குமுதவல்லி, தினம் ஆயிரம் வைணவர் வீதம் ஒரு வருடத்திற்குத் ததியாராதனம் செய்து, வைணவ மதத்திற் சேர்ந்தால் அவரை மணப்பதாகச் சொன்னாள். திருமங்கையும் அப்படியே செய்யச் செய்யத் தன்செல்வம் முற்றும் சென்றுவிட்டது. சோழ ராஜனுக்குத் தரவேண்டிய கப்பமும் தர முடியாமற் போனதால், சோழன் அவரைச் சிறையி லிட்டான்.

தனது அன்பருக்கே அனைத்தும் ஈந்து அற்ற அன்பருக்கு உதவி செய்யத் திருமால் மனம் வைத்தார். ஆழ்வாரின் கனவில் தோன்றி "அன்ப! நீ அரசன் கடனைத் தீர்க்க வேண்டிய பொருள் அருகே ஆற்றங் கரையில் தோண்டினால் அகப்படும்; உன் அடிமையைத் தீர்த்துக்கொண்டு என் திருத் தொண்டு புரிவாய். சிறைக்கும் அஞ்சாது செய்யவை செய்வோருக்குத் தேவன் நிச்சயமாகக் கை கொடுக்கிறான்," என்றார். அப்படியே ஆழ்வார் பொருளைக் கொண்டு அரசனிடம் கொடுக்கவே அரசன் அதிசயித்து ஆழ்வார் அடிமலர் சிரந்தாங்கி 'அப்பனே தெய்வம் தங்களுக்குக் கொடுத்த பொருளைக் கொண்டு தெய்வப் பணியே செய்வாயாக,' என அனுப்பினான். அப் பொருளைக் கொண்டு ஆழ்வார் நாள்தோறும் எண்ணிறந்த தருமங்கள் செய்து எல்லாவற்றையும் செலவழித்தார். செலவழித்தும் கொடுத்த கை நிற்காது, மீண்டும் அறப் பணி செய்யவெண்ணி உலகில் சம் தேவைக்குமேல் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஏழைகளுக்குத் தருமம்செய்துவந்தார்.

ஒரு நாள் ஆழ்வார் தன் சோர நேசருடன் வழிப் பறிக்காகக் காட்டில் பதுங்கிக்கொண்டிருந்தார். அப்போது விலையுயர்ந்த அணிகளுடன் ஒரு பிரபு தன் பத்தினியுடன் அங்கு சென்று கொண்டிருந்தார். திருமங்கை யாழ்வார் அவர்களுடைய அணிகளை யெல்லாம் அபகரித்தார். அவர்களும் மகிழ்வுடன் அனைத்தையும் ஈந்தனர். முடிவில் பத்தினியின் காலிலிருந்த அணி கழற்ற வரவில்லை. அதைத் தன் பல்லினாற் கடித்து எடுத்துக் கொள்ளவும் விடுத்தாள். எல்லா அணிகளையும் ஒரு மூட்டையாகக் கட்டித் தூக்க முயன்றார். எவ்வளவு முயன்றும் மூட்டையை அசைக்கவும் முடியவில்லை. திருமங்கையாழ்வார், சந்தேகித்து பிரபுவைக் கூர்ந்து நோக்கி, "நீர் ஏதோ மந்திரம் போட்டிருக்கிறீர்," என்றார் பிரபுவும் ஆம் எனவே, அது என்ன மந்திரம், என்று ஆழ்வார் கேட்டார். சொல்லுகிறேன் என்று பிரபு தனித்து அழைத்துச்சென்று தன் உருவை மாற்றிக்காண்பித்தார். ஆ, மாலும் திருமகளுமே இவர்கள்! அன்பனின் தளிர்க்கைகள் தன்மேனியைத் தீண்டும் சுகத்தை நுகர வந்தனர் போலும்! அவர்கள் என்ன மந்திரத்தை உபதேசித்தார்கள்! "அன்பனே இப் பொருளடங்கிய மூட்டையே மனிதனைப் பஞ்ச மஹா பாதகமும் செய்யத் தூண்டும் பந்த மூட்டை. இதன் ஆசையை மனிதன் தன நெஞ்சத்தடத்தினின்று எளிதாகப் பெயர்க்க முடிவதில்லை. அதைப் பெயர்ப்பதற்கு நமோ நாராயணாய, என்பதே ஆற்றல் அளிக்கும் அருமந்திரம். இதை விடாது ஓதுவாயாக என்று உபதேசித்து மறைந்தனர். ஆழ்வார் எம்பெருமான் திருவருளை எண்ணி யெண்ணிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஓதியோதித் திருவரங்கம் சேர்ந்து, என் ஐயனே இதுவரையில் உய்வழி யுணராது மாதர்கலவியில் வாடி வருந்தி முடிவில் உன் திருவருட் பெருமையால் நாராயணா என்னும் நாமத்தைக் கண்டுகொண்டேன். மானேர் விழி மடவர் மயக்கிற்பட்டு மா நிலத்து, நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன். உனது அருளால்,

பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில்;
பொருளின்ப மெனவிரண்டும்
இறுத்தேன்; ஐம்புலன்கட்
கடனாயின வாயிலொட்டி
யறுத்தேன்; ஆர்வச் செற்றமவை
தன்னை மனத்தகற்றி
வெறுத்தேன்; நின்னடைந்தேன்
திரு விண்ணகர் மேவியவா!

என்று பலவாறு பாடினார். அன்றுமுதல் அரங்கனாலயத் திருப்பணியை மேற்கொண்டார். தங்கத்தால் செய்யப் பட்ட ஒரு பௌத்த விக்கிரகத்தை நாகையினின்று கொண்டுவந்து அதனால் அரங்கனாலயத்தில் ஒரு மதில் கட்டுவித்தார். இவர் பாடல்களில் பாகவதக்கருத்துகள் அடங்கியுள்ளன. யசோதை பாலகனையே தன் பாக்களால் மாலைசூட்டினார். இவர் பா நயத்தை வியந்து இவருக்கு நாலு கவிப் பெருமாள் என்றும் இவருடைய பாத் தொகுதிக்குப் பெரிய திருமொழியென்று பெயரிட்டனர்.

எ

விப்ர நாராயணர் என்ற இயற் பெயர் பூண்ட தொண்டரடிப்பொடி யாழ்வார் ஒரு திரு நந்தவனம் நிறுவி, அழகிய மணவாளருக்குப் புஷ்ப கைங்கரியம் செய்து வந்தார். பரிசுத்த பிரம்மசாரியாய வாழும் நாட்களில், ஒரு காலம் தன் மதிக் கேட்டால், நந்தவனத்திற்கு வந்து தன்னை மயக்கிய தேவா தேவி

யென்னும் தாசியின் வலையிற் சிக்கித் தன் பொருளை யெல்லாம் இழந்தார். பொருள் வற்றியதும் தாசிக்கும் தன்னிடம் அன்பற்றது. நமது அன்பருக்கு மட்டும் காதல் மாறவில்லை. அரங்க நாதர் தன் அன்பனுடைய மாயையை விலக்கி மெய்ப் பொருளை யுணர்த்த, ஒரு சூட்சி செய்தார். அரங்க நாதர் ஆழ்வாரின் தூதாகத் தாசியிடம் சென்று ஒரு பொன் வட்டிலைத் தந்து மறைந்தார். பிறகு தாசி ஆழ்வாருக்கு அன்பு காட்டினள். மறுகாலை அரங்கநாதரின் பொன் வட்டிலைக் காணோமென்று அனைவரும் தேடினர். முடிவில் தாசி வீட்டில் ஆழ்வார் கொடுத்திருப்பதாக வெளிப்பட்டது. நமது ஆழ்வாரையும் தாசியையும் சோழ ராஜனிடம் கொண்டு சென்றனர். திருமாலுக் கடிமை செய்யும் தான் ஒரு பெண்ணின் அடிமை யானதை பகீரென ஆழ்வார் எண்ணினர். திருமாலும் நடந்தது தன் மூலம்தான் என்பதை விளக்கி அன்பனைத் தப்புவித்து ஆட் கொண்டார். அதே பெருமான் நம் நாட்டாரை மாயையினின்று தப்புவிப்பாராக! இது முதல் விப்ர நாராயணர் தொண்டருக்குத் தாஸனாய், அவர்கள் அடிப் பொடியைச் சிரமேற கொண்டு பூசித்து, பச்சை மாமுகில் மேனியும் பவள வாயும் செங்கண்ணுமிலகும் அச்சுதனைத் தன் பிறவிப் பிணி தீர்க்குமாறு வேண்டிப் பாடிக் காலங் கழித்தார்.

சூதனாய்க் கள்வனாகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்கணென்னும்
வலையுட் பட் டழுந்துவேனை
போதரே யென்று சொல்லிப்
புந்தியிற் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகனூர் அரங்கமன்றே,

என்று தன் பிழைகளை யெண்ணித் தன்னை யாட் கொண்டருளிய திருவருளை வியந்து வெகு உருக்கமாகப் பாடிச் சாயுஜ்ய மடைந்தார்.

௮

திருமழிசை யாழ்வார் சிவவாக்கியர் என்று பெயர் பெற்று, முதலில் சைவ அருக பௌத்த மதங்களி லிருந்து, முடிவில் வைணவரானார். இவர் பெரிய தியான யோகி. சித்துகள் வல்லவர். காமியமான வரங்கள் ஈசனிடத்தும் விரும்பார். ஒரு சமயம் இவர் தவம் செய்யும்போது சிவபெருமான் முன்வந்து இவருடைய தவத்தை மெச்சி வரம் கேட்கும்படி சொன்னார். கர்ம வசத்தால் நடப்பன நடக்கும்: இன்று சாவாரை நாளை சாகும்படி செய்ய வல்லவர் ஒருவருமில்லை: ஆதலால் ஊசி வழியே நூல் வரும்படி வரந் தாரீர் என்று சொல்லிப் பரிகவித்தார். சிவன் கோபத்தால் புயலை வருவித்தார். அதை யெல்லாம் மன வுறுதியாலே வென்றார்.

அப்பர் போன்று தான் புவியரசரைச் சற்றும் மதியாது, இவ் வண்டத்திற்கே அரசனான எம்பெருமானையே தன் தலைமையாகக் கொண்டார். ஒரு முறை பல்லவ ராஜன் தான் யோகம் பயில வேண்டு மென்று விரும்பினன். அதற்காக ஆழ்வாரின் சீடரான கணிகண்ணனிடம் உன் குருவை இங்கே அழைத்து வா என்றான். சீடன் அவர் அரசன் முன் வரமாட்டார் என்றான். எத்துணை முயன்றும் ஆழவார் அவன்முன் வரவில்லை. அவரை யொன்றும் செய்யவும் முடியாது. ஆதலின் அவனுடைய கோபத்தைக் கணிகண்ணன் மீது தாக்கி ஏ கணிகண்ணா, என்மீது பாடு என்றான். கணிகண்ணன் மறுத்தான். உடனே அரசன் கணிகண்ணனை நோக்கி அப்படியாயின் எனது அரசை விட்டு வெளியே செல் என்றான். கணிகண்ணன் குருநாதரிடம் இதைச் சொன்னான். குரு நாதர் அவ்வூர் விஷ்ணு ஆலயத்திற் பள்ளி கொண்டிருக்கும் பெருமானை நோக்கி,

கணி கண்ணன் போகின்றான், காமரு பூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன், நீயு முன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்,

என்று பாடித் தானும் சீடனும் நகர் துறந்தனர். திருமாலும் அன்பர்களுடன் ஆலயம் விடுத்துச் சென்றார். அரசனுக்கு ஈசன் அருள் குறையவே, நீர் வளம் வரண்டது. ஆறுகளிலும் கிணறு குளங்களிலும் தண்ணீர் வற்றி இருளும் நாட்டில் பரவிற்று. அரசன் செருக்கொழிந்து தான் செய்த பிழையை வருந்தி ஆழ்வாரிடம் சென்று வணங்கி மன்னிப்புக் கேட்டு, அவரை மறுபடி தன் ஊருக்கு வரும்படி கேட்டான். ஆழ்வார்

சரண மடைந்தவனைக் காக்கும் பொருட்டு மறுபடி அவன் ஊருக்குச் சென்று,

கணி கண்ணன் போக் கொழிந்தான், காமரு பூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக் கொழிந்தேன், நீ யுன்றன்
பைந்நாகப் பாய் படுத்துக் கொள்

என்றதும் கடவுள் மறுபடியும் கோவிலி லமர்ந்தார்.

அனைத்தும் முன் போலச் செழித்து விளங்கின. தமிழ் வாக்கிற்கு உள்ள மதிப்பை என்னென்று வியப்பது! தமிழரே அத் தகைய தமிழைப் போற்றுமின்!

ஒரு முறை திருமழிசையாழ்வார் இக் குறும்பை நீக்கி என்னை ஈசனுக்க வல்லையோ! "என் உட் கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று பாடித் தானே திருமாலெனத் தோன்றி ஒரு யாகத்தில் அவிர்ப் பாகத்தைப் பெற்று அங்குள்ள அகந்தை பூண்ட அந்தணர் செருக்கை அறுத்தார். இவர் மிகவும் தைரியமான கவி. திருச் சந்த விருத்தம் நான் முகன் திருவந்தாதி முதலியவற்றைப் பாடியுள்ளார்

எனக் காவார் யாரொருவரே யெம் பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால்—புனைக்காயா
வண்ணனே! உன்னைப் பிறரறியார். என் மதிக்கு
விண்ணெல்லா முண்டோ விலை

என்ற இவர் பாசுரம் எவ்வளவு சுதந்திர வுணர்ச்சியை தருகிறது!

௯

பெரியாழ்வார் எம்பெருமான் திருவருளால் சகல கலைகளையும் அடையப் பெற்று வல்லப தேவன் என்னும் பாண்டியனுக்கு வைணவ மதத்தை உபதேசித்துத் தன்னோடு வாதத்திற்கு வந்த புலவர்களை யெல்லாம் வென்றவர். மறுமையின் தேவையை இம்மையில் தேடத் தெளிவான வழியை உபதேசித்ததால் பாண்டியன் இவரைச் சரணமடைந்து இவரை யானை மீது ஊர் கோலம் செய்வித்தான். தன் அன்பன் பெருமை யடைந்த காட்சியைத் திருமால் தன் தேவியுடன் கருடாரூடராய் வானின்று பார்த்துக் கொண்டே கூட வந்தார். தன் கண்ணுக்கு மட்டும் புலப்படும் திருமாலின் அழகைக் கண்டு திருஷ்டிவைத்துவிடுவார்களென்று ஆழ்வார் அஞ்சிப் பெருமாளுக்குப் பல்லாண்டு பாடத் தொடங்கினார். யானையின் மணிகளையே தாளங்களாகக் கொண்டு உருக்கமுடன் பாடப் பெற்ற இப் பல்லாண்டு ஒவ்வொரு வைணவரின் நாவிலும் இனித்திருக்கிறது. அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு," என்னும் வாக்கியத்தால் கடவுள் என்றும் இணை பிரியாது நம்மோடு சேர்ந்திருக்கிறார், ஆதலின் மக்கள் தெய்வத் தன்மையோடு கூடியவர் என்ற பொருள் கிடைக்கிறது. "எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கிவந்து வழி வழி யாட் செய்கின்றோம்" என்று எவ்வளவு உருக்கத்துடன் பாடுகிறார்! தமிழரே! வாஸுதேவனும் கருடாரூடனாய்க் கேட்க வந்த தமிழின் சுவையை யறிந்து தமிழை வளருமின்!

௰

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் இம் மூவரும் ஒரு காலத்தவர். பொய்கை யாழ்வார் இயற்கைக் காட்சிகளில் ஈசனைக் கண்டுவப்பர். 'வையந் தகளியாய், வார் கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக, சுடராழி யானடிக்கே சூடினேன் சொன்மாலை,' 'நாடினும் நின்னடியே நாடுவன்: நாடோறும், பாடினும் நின்புகழே பாடுவேன்,' 'வானாகித் தீயாய், மறிகடலாய், மாருதமாய், தேனாகிப் பாலாம் திருமாலே,' என்று எப்போதும் திருமாலின் பெயரையும் உருவையும் எண்ணி உருகுவார். பூதத் தாழ்வாரோ அன்பே தகளியாய், ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை யிடுதிரியாய் நாரணர்க்கு ஞானச் சுடர் விளக் கேற்றினார். ஓத்தின் பொருண் முடிபு மித்தனையே மாதவன் பேர் ஏத்தும் திறமறிமின், ஏழையர்காள், என்று கல்வியின் பயனை யுரைத்தார்! தற்காலத்துத் தெய்வமற்ற பள்ளிப் படிப்பு கல்வியாகுமோ! சகோதரர்காள்! உண்மையான ஆத்யாத்ம வித்தை பயிலுமின்! பேயாழ்வாரோ, 'தானே தனக்கு மவன் தன்னுருவே யெவ்வுருவும் எண்டிசையுந் தானாய், மறையாய், மறைப் பொருளாய், என் உள்ளத்தினுள்ளே யுளான்' என்று மனதில் கடவுளைக் கண்டார்.

இவ்வாழ்வார்கள் மூவரும் ஒரு இரவில் ஒரு குறுகிய திண்ணையில் இருப்பதற் கிடமின்றி நிற்கும் போது இவர்களுக் கிடையே திருமால் வந்து நெருக்கினார். விளக்கேற்றிப் பார்க்கும் போது திருமால் இவர்கள் முன்னே தோன்றினார்! கடவுள் மூச்சினும் சமீபத்தில் தான் ஒவ்வொருவர் முன்னும் இருக்கிறார் என்பதைக் காட்டவே திருமால் இவர்கள் நடுவே புகுந்தார். நம்மிடையேஈசன் எப்போதும் இருக்கிறான் என்றஉணர்ச்சியுடன் நமது கடமைகளைச் சரிவர செய் துய்வோமாக!.

௰௧

திருப்பாணாழ்வார் திருக்குலத்தவர். எப்போதும் யாழில் எம்பெருமான் திரு நாமத்தைப் பாடிக்கொண்டிருப்பார். சமரச வுணர்ச்சி மிகுந்த நம் பாரத நாட்டில் இடையே வந்த கொடிய வழக்கமாகிய தீண்டாமையென்னும் தீதால் நமது ஆழ்வார் கோவில்முன் செல்ல இயலவில்லை. அந்தணர் தன்னை எவ்வளவு வெறுக்கினும் அவர்களுக்குத் தான் அன்பு பூண்டே வந்தார்.காலை மணிக்கே எழுந்து அந்தணர் குளித்துவிட்டு வரும் பாதையெல்லாம் தன் கையால் சுத்தஞ் செய்வார். இப்படிச் செய்யும்போது ஒரு நாள் அந்தணர் அவரை நொய்யப் புடைத்துக் கொள்ளிடக் கரைக்கு விரட்டிவிட்டனர். அவ்விடம் சென்றும் கோவிந்த நாம சங்கீர்த்தனமே செய்து கொண்டிருந்தார். அரங்கநாதனுக்கு அந்தணர் செய்த இக் கொடுமை சகிக்க முடியவில்லை. அவர் உடலெல்லாம் உதிரம் பெருகிற்று. அனைவரும் அதிசயித்தனர். அர்ச்சகரின் கனவில் கருணையம்பெருமான் தோன்றி, திருப்பாணன் என் மெய்யன்பன்! அவனை நீங்கள் அடித்ததனால் என் உடலில் இரத்தம் வந்தது! பஞ்சமரிடத்திலும் நான் இருக்கிறேன்! நீங்கள் செய்த குற்றத்திற்காக, பாணாழ்வானை முதுகிற் சுமந்து உடனே என் சந்நிதி சேருமின்! என்றார். தமது குற்றத்திற்கு வருந்தி, அந்தணர் அங்ஙனமே செய்தனர். பெரியாழ்வார்கூட அன்பரை மும்முறை வணங்கினர். திருப்பாணாழ்வாரோ தனக்கும் காட்சி கொடுத்த அரங்கனைக் கண்டு, ஆனந்த மிகுந்து, பாரமாய பழவினைப் பற்றறுத்து என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்; வைத்ததன்றி என்னுட் புகுந்தான், என்று பாடிப்பாடிப்பரவசமாகிக்கடவுளுடன் ஐக்கியமானார். சகோதரர்களே! அன்றோடு தீண்டாமையை ஒழிக்கத் திருமாலின் உத்தரவு பிறந்துவிட்டது. பின்பு வந்த வைணவ மதாசாரியரான உடையவரும் திருக்குலத்தாருக்கு அன்பு செலுத்தி அவர்களைத் திருநாராயணபுரம் கோவிலுள் புகுந்து தொழும்படி விடவில்லையா? மேலும் கனகன், சோகமேளா, நந்தன் இவர்கள் உதித்த நாட்டிலும் இன்னும் தீண்டாமையிருப்பது நமது மதத்திற்குப் பெருங்கேடன்றோ? சகோதரரே, நமது சமூகத்தினின்று இவ் வழுக்குகளைத் துறத்தி எல்லோரும் சமநிலை எய்திச் சுதந்திர தேவியைத் தொழுவோமாக.!

௰௨

இத் தகைய அன்பு படைத்த ஆழ்வாராதிகளின் ஜாதியும் அன்புச் சாதியே. அன்பிற்கு ஜாதியும்,மதமும், நிறமும்,பிரிவும்,பிறவும் உளவோ? அன்பின் வடிவே ஆன்மா. இராமானுஜருக்கு எல்லா ஜாதியினரும் கைங்கரியம் செய்தனர். அவர் கச்சியப்ப முதலியாரின் உச்சிட்டத்தைப் புனிதமென உண்ண எண்ணினார். பெரியாழ்வார் பஞ்சம குலத்திற் பிறந்த பாணாழ்வாரைத் தொழுதார். மதுர கவியாழ்வார் வேளாளரான சடகோபரைப் பணிந்து குருவாக ஏற்றுக்கொண்டார். ஆகவே நாம் எல்லாரும் சமரசப் படுவதற்கு அன்பே காரணம்! நாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்டிச் சிறிய குற்றங்களை மன்னித்துப் பெரிய தேசசேவையில் ஒருவரையொருவர் மன முருகி நேசித்து வரின், மக்களை யெல்லாம் நடமாடும் கோயில்கள் என்ற உணர்ச்சியுடன் பேணிவரின், நம் நாட்டில் ஒற்றுமை சமரஸம் சகோதரத்வமும் ஏற்பட்டு நாம் எடுத்த வினையை முடித்தல் முடியும்.

எந்த வகுப்பினரும் என்சமூகக் கையென்ற
சொந்தநாட் டன்பே சுகம்,

எட்டுநால் கோடியுளும் ஈசனைக் கண்டுவப்போ
னெட்டாப் படியொன்று மில்,

பைப்பணமும் போன்ற பரும வுடலுயிரை
மெய்க்கடவுள் மெய்த்தொண்டிற் பெய்,

என்ற உண்மைகளை ஆழ்வாராதிகள் அனுபோகத்திற் காட்டினர். வேத ரகசியங்களை அனைவரும் உணரும்படி தமிழில் வெளியிட்டனர். அத் தமிழில் உரைத்த வேதத்திற்குப் பெருமான் இரங்கவில்லையோ!

ஆழ்வார்கள் அவதரித்த காலங்களில் நமது பாரத நாடு செல்வம், கல்வி, தொழில் முதலியவற்றில் சிறந்து விளங்கிற்று. அறவுணர்ச்சி நாட்டில் இருந்தது. மன்னர் நீதியுடன் ஆண்டனர். அரசாங்கத்தைப் பற்றி யாதொரு குறையும் ஜனங்களுக்கில்லை. நாடு சுதந்திரம் பெற்று விளங்கிற்று. தர்மம் தலை சிறந்து பஞ்ச மென்பதும் ஏழ்மை யென்பதும் இன்றி மக்கள் எல்விதத்திலும் சுகமா யிருந்தனர். ஆத்யாத்ம வாழ்வு வாழ்ந்தனர்! தற்போதோ, நம் நாடு பல அயலார் புகுந்ததினால் வறுமை யுற்று, அடிமைப்பட்டு செல்வ மிழந்து, சுயேச்சை யிழந்து, இருளில் துன்புறுகிறது. தற்காலத்தில் வயிற்றுக் கவலையே ஆயுளைத் தின்கிறது. ஆத்மதியானத்தில் புத்தி செல்வதில்லை. அடிமைத் தனமும், வறுமையும் தீர உழைப்பதே நமது தர்மம்.

நாட்டின் அடிமையும் நல்குரவும் நீக்கிடலே
வீட்டைத் தருமே விரும்பி

ஆதலின் ஆழ்வாராதிகள் ஆருயிர்ப் பணியும் ஆண்டவன் பணியும் செய்யத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் கொடுத்தாற் போல,நம் நாடாகிய ஆலயப்பணிக்கும், நம் நாட்டில் வறுமையால் வருந்தும் ஏழைகளின் பணிக்கும், நம்மை ஊட்டி வளர்க்கும் பாரத அன்னையின் பணிக்கும் நம் முடல் பொருள் ஆவியை யீந்து திருத் தொண்டில் ஆழ்வாராகி எல்லோரும் பாரத மாதாவின் அருளாள்வா ராகுமின்!

நபோலியனுடைய வீரப் பிரசங்கம்

[வாக்மிக ளில்லாத நாடாவாது யுகமாவது இராது என்று உறுதியாகச் சொல்லிவிடலாம். ஆனால் நம் நாட்டில் பெரிய வாசாலர்களின் பேச்சுக்களை எழுதி வெளிப்படுத்தியதில்லை. முன்னாட்களில் கிரேக்கிலும் ரோமிலும், இக் காலத்தில் ஐரோப்பாவின் இதர நாடுகளிலும் அமெரிக்காவிலும், வாக்மிகளின் பிரசங்கங்கள் எழுதப்பட்டும் வந்திருக்கின்றன. நம் நாட்டில் இப் பொழுது தோன்றியிருக்கிற புதிய கிளர்ச்சியானது இவ்யுகத்தைப் பிரசங்க யுக மாக்கியிருக்கிறது என்று சொல்லுவது பொருந்தும். ஆகையால் இக் காலத்தில் ஜனங்களைப் பேச்சினால் வசியப் படுத்த விரும்புகிறவர்களுக்கு உதாரணமாக இருப்பதற்காகப் பெயர்போன பிரசங்கங்களை மொழிபெயர்த்து அப்போதைக் கப்போது வெளிப்படுத்த விரும்பியுள்ளோம். இம் மாதத்தில் வெளிப்படுத்தும் இப் பிரசங்கமானது, இத்தாலியப் போரில் மோந்தெநோத்து, மோந்தோவி என்கிற இடங்களில் வெற்றி பெற்ற பிறகு நப்போலியன் தன் சிப்பாயிகளை உற்சாகப்படுத்துவதற்காகச் செய்ததாகும். இப் பிரசங்கம் செய்த போது அவனுக்கு வயது ௨௬]

—(0)—

வீரர்களே! பதினைந்து நாட்களில் நீங்கள் ஆறு போர்களில் வென்றுவிட்டீர்கள்; இருபத்தொரு துவஜங்களையும், ஐம்பத்தைந்து பீரங்கிகளையும் கைப்பற்றிவிட்டீர்கள்; அனேகம் கோட்டைகளைப் பிடித்துவிட்டீர்கள்; பியெது மோந்தின் மிகச் செழிப்பான பிரதேசங்களைக் கைக்கொண்டுவிட்டீர்கள்! ௧௫,000 சத்துருக்களைச் சிறை செய்துவிட்டீர்கள்; ௧0,000 பேர்களுக்கு அதிகமாகக் கொன்றும் காயப்படுத்தியும் இருக்கிறீர்கள்! இது வரையில் நீங்கள் பயனில்லாப் பாறைகளுக்காகப் போர் புரிந்தீர்கள். உங்கள் தீரம்தான் அவற்றிற்கு ஒளி தருகின்றதேயன்றி அவை உங்கள் நாட்டிற்கு எவ்வளவும் பயன் படாதனவாயிருக்கின்றன. ஆனால் இன்று, ஊலாந்தா சைனியமும், ரைன்நதி சைனியமும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிற லாபத்துக்கு இணையான லாபத்தை நீங்கள் நம் நாட்டுக்குச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறீர்

கள். யாதொரு சாதனமுமின்றிப் போர் முனைக்கு வந்தும் நீங்கள் சகலத்தையும் சம்பாதித்துக் கொண்டுவிட்டீர்கள். பீரங்கிகளில்லாமல் போர்களில் வென்றீர்கள்; பாலங்களின்றி நதிகளைக் கடந்தீர்கள்; பாதரக்ஷைகளின்றிக் கடுநடை நடந்தீர்கள்; பிராந்தி யில்லாமலும், பன் முறைகளில் ரொட்டி யில்லாமலும் கூடப் பாசறை யிருந்தீர்கள்! குடியரசுத் தளங்களால், சுதந்திர வீரர்களால்தான் நீங்கள் சகித்தவையெல்லாம் சகித்திருக்க முடியும். வீரர்களே, இந்த வெற்றிகளுக்காகக் காட்டப்படும் நன்றி உங்களுக்கே காட்டப்படட்டும்! செய்ந் நன்றி மறவாத நமது நாடு பெறப் போகும் க்ஷேமமெல்லாம் நீங்கள் கொடுத்த தானமே யாகும்.

துலோன் துறைமுகத்தில் நீங்கள் பெற்ற வெற்றி ளஎகூ-ம் வருஷத்தின் மறவொணா யுத்தத்தின் சூசகமாயிருந்தது: இன்று நீங்கள் பெற்றிருக்கிற ஜயம் அதையும்விட ஆச்சரியமான, ஜாஜ்ஜ்வல்லியமான வெற்றிகளுக்கு அங்குரார்ப்பணமாக இருக்கின்றது. உங்களைத் திண்ணக்கத்தோடு தாக்கின இரண்டு சைனியங்களும் உங்கள் முன்னின்று நடுங்கிக் கொண்டு ஓடிவிட்டன. உங்கள் கஷ்டங்களைக் கண்டு நகைத்த, உங்கள் சத்துருக்களின் வெற்றிகளைக் கண்டு ரகசியமாகச் சந்தோஷித்து வந்த, திருவிலிகள் இன்று ஏமாறிப்போய் நடு நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வீரர்களே! முடிக்க வேண்டிய காரியம் கொஞ்சமேனும் பாக்கியாக இருக்கிறவரையில் இது வரையில் நீங்கள் பெற்ற வெற்றிகளை ஓர் காரியமாக மதிக்கக்கூடாது. உங்களில் சிலருக்கு மனம் சலித்து விட்டது என்று, அப்பனீன் மலையையும் ஆல்ப் மலையையும் கடந்து சிலர் வீட்டுக்குத் திரும்ப எண்ணத் துவக்கி யிருக்கிறீர்கள் என்று, கேள்வியுறுகிறேன். அதை ஒரு நாளும் நான் நம்பமாட்டேன். மோந்தெனோத்திலும் மோந்தோவியிலும் வென்றவீரர் பிரெஞ்சு ஜனங்களின் புகழை இன்னும் பரப்புவதற்குப் பறந்து கொண்டு, கிளர்ச்சி கொண் டன்றோ இருக்கிறார்கள்!

மார்க்க ஔரேலியன்

—— (o) ——

(ஸ்ரீமான் போ. திருகூடசுந்தரம் பிள்ளை எழுதுவது)

ஐரோப்பாக் கண்டத்தில் இத்தாலியா என்று ஒரு தேசம் இருக்கிறது. அதில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து அரசு புரிந்த சக்ரவர்த்திகளுடைய சாம்ராஜ்யம் இன்று நடைபெறும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் போல் மிக விசாலமானதாயும், பெரிதும் வலிமையுடையதாயும் இருந்தது. அதன் வட எல்லை உலாந்தா முதல் ஹங்காரியா உக்ரானியா வரையில் இருந்தது; கீழ் எல்லை பாரசீகத்தையும் எகிப்தையும் அராபியாவையும் தொட்டது. எகிப்தினின்று மொரோக்கோவரையில் உள்ள வட ஆபிரிக்காப் பிரதேசங்களெல்லாம் அச் சாம்ராஜ்யத்தின் தெற்கெல்லையாக விளங்கின. அதன் மேற் கெல்லை அத்லாந்திக் சமுத்திரமேயாகும். அது மாத்திரமில்லை: இங்கிலாந்துகூட அவ் வேகாதிபத்தியத்தில் ஓர் மாகாணமாகவே இருந்தது. மத்தியதரைக் கடலை ரோமர்கள் தங்கள் வீட்டு வாரி என்றே சொல்லிக்கொள்ளுவார்கள். அத்தனை விசாலம் அவர்களுடைய ஏகாதிபத்தியம்; அத்தனை செருக்கு அவர்களுடைய இருதயத்தில். ரோம

ஜாதியார் வீரத்திலும், நீதியிலும், ராஜதந்திர முறையிலும் சிறந்திருந்தார்கள். அத்தகைய ராஜ்யத்தோடு அக் காலத்தில் நம் பாண்டி நாட்டிலிருந்த மன்னர்கள் பல விதத்தில் சிநேக பாவத்தோடு வாழ்ந்து வந்தனர்.

அந்தச் சாம்ராஜ்யத்திற்குத் தலைநகர் ரோமாபுரி. அதில் செங்கோல் ஓச்சிய சக்ரவர்த்திகளுள் நமது கதாநாயகனான மார்க்க ஔரேலியனே தலைசிறந்தவன். அவன் பல சமயங்களில் எழுதி வைத்திருந்த ஞாபகக்குறிப்புகளே இப்பொழுது "மணிமொழிகள்" என்னும் பெயரால் வழங்கிவருகின்றன. அவைகளில் உயர்ந்த ஞானமும், ஒழுக்கபோதமும், ஆன்ம உறுதியும் நிறைந் திருக்கின்றன என்று அவற்றை வாசிப்போர் எளிதில் அறிந்துகொள்வார்கள். சக்ரவர்த்தி மார்க்க ஔரேலியன் உயர் ஞானத்தைச் சிந்தித்ததோடு நில்லாது அதன்படியே ஒழுகியும்வந்தவன். உலகில் பெரியோரின் உயர்ந்த ஒழுக்க நடை என்றும் நமக்கு உறுதி பயக்கும். அப் பெரியோரும் அரசராய், அளவற்றசெல்வமும், அகன்ற ராஜ்யமும், அவற்றால் உண்டாகும் சுகானுபவங்களும் தங்களுக்கிருந்தும், அவைகளில் மனப்பற் றின்றி தாமரையிலைத் தண்ணீர்போல் வாழ்ந்திருப்பின், அத்தகையவரின் சரிதையால் நாம் பெறும் நன்மையை அளவிட முடியாது. ஆகையின் மார்க்க ஔரேலிய சக்ரவர்த்தியின் சரித்திரமும் மொழிகளும் நம்மால் பெரிதும் போற்றத்தக்கன.

அச் சக்ரவர்த்தியின் சரிதையை ஈண்டெடுத்துச்சிறிது எழுதுவேன். அவன் ரோமாபுரியில் கிறிஸ்து பிறந்த பின் கஉகம் ஆண்டில் பிறந்தவன். அவன் தந்தை அன்னிய வேரன் என்பவன் அந்நகரின் தலைமைநீதியாய் இருந்தான். மார்க்கன் பிறந்து ௩ மாதத்திற்குள் அவன் இறந்துவிட்டனன். தந்தையின் சகோதரியின் கணவனாகிய அந்தோனீன பியன் என்பவன் அப்பொழுது ரோம ராஜ்யத்திற்குச் சக்ரவர்த்தி. இவனுக்கு இரண்டு அபிமான புத்திரர் உண்டு; அவர்களில் நமது மார்க்க ஔரேலியன் ஒருவன். ஆகையால் மார்க்கன் சிறந்த கல்வியும் அரசர்க்குரிய வித்தைகளும் கற்பிக்கப்பட்டனன். மார்க்கன் தனக்குக் கடவுள் அருளால் வாய்த்த தந்தை தாய், அபிமானபிதா, ஆசிரியர் அனைவரும் வெகு நல்லவர் என்றும், அவர்களால் தான் அடைந்த பயன் அளவற்றது என்றும், அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துவதாகவும் கூறியுள்ளான். அவனுக்குக் கல்வி போதித்த ஆசிரியர்களெல்லாம் அக்காலத்தில் மிகச் சிறந்தவர்கள். அவர்களில் அவனால் பெரிதும் போற்றப்பட்டவன் ருஸ்திகன் என்பவன்; அவன் மார்க்கன் சக்ரவர்த்தி யான பின்னும் அவனுக்கு மதிமந்திரியாய் இருந்தான். இவ்வளவு சிறந்த ஆசிரியர்களையும், இவ்வளவு சிறந்த மாணவனையும் காண்டல் அரிது என மேனாட்டு அறிவாளிகள் கூறுகின்றனர்.

மார்க்கன் முதலில் கவிபாடுதலும், பிரசங்கமும் கற்றான். ஆனால் வயது பதினொன்று வந்தவுடன் அவைகளில் வெறுப்புற்றுத் தத்துவ சாஸ்திரங் கற்பதில் நாட்டங்கொண்டான். தத்துவசாஸ்திரிகளைப்போல் சாதாரணமான உடை உடுத்தி, ஊண் மிகச் சுருக்கி, படிப்பில் அதிகச் சிரமமெடுத்துக் கொண்டான். அதனால் அவனுடைய தேக சுகமும் சிறிது குறைந்திருந்தது. பின்னர் அரசர்க்கு அவசியந் தெரிய வேண்டிய சட்டக் கல்வியையும் ஆயுதப்பயிற்சியையும் மேற்கொண்டான்.

உரு-வது வயதில் மார்க்கன் தன் அத்தை புருஷனும் அபிமான பிதாவுமான சக்ரவர்த்தி அந்தோனீன பியனின் புத்திரியாகிய பௌஸ்தீனா என்னும் அரசிளங் குமரியை மணந்தான். சக்ரவர்த்தி அவனுக்குக் கேஸர் என்னும் நாமஞ்சூட்டி, ராஜ்ய நிர்வாக காரியங்களிற் பலவற்றை அவ

விடம் ஒப்புவித்தான். சக்ரவர்த்தியின் மரணகால பரியந்தம் இருவரும் மன ஒற்றுமை மாறாமல் நட்புடன் வாழ்ந்து வந்தனர்.

கி. பி. கசுக—ம் வருஷத்தில் பியன் இறந்துவிடவே, மந்திர ஆலோசனை சபையார் மார்க்கனைச் சக்ரவர்த்தி பதவியை ஏற்று ராஜ்யபாரத்தை வகிக்கும்படி கேட்டனர். ஆனால் முன் சொன்னபடி பியனுக்கு வேரன் என்று இன்னொரு அபிமான புத்திரன் இருந்தபடியால், அவ்வேரனும் தன்னோடு கூடவே சிங்காதன மேற வேண்டுமென்று மார்க்கன் வற்புறுத்தி, கடைசியாக மந்திராலோசனை சபையைத் தனக்கு இணங்கும்படி செய்துவிட்டான். ஆகவே இருவரும் சம உரிமையுடன் சக்ரவர்த்திகளாக இருந்துகொண்டு ராஜ்யத்தை ஆள-ஆரம்பித்தனர். வேரன் போகாதுரனாகவும் பெருநோக் கற்றவனாகவும் இருந்தும் மார்க்கன் அவனுடைய குற்றங்களைப் பாராட்டாமல் அவனுடைய தவறுகளால் வரும் தீமைகளைப் பொறுமையோடும் சாமர்த்தியத்தோடும் விலக்கிக் கொண்டு அவனோடு சுமுகமாகவே இருந்து வந்தான். சுமார் அ-வருஷங்களுக்கு இவ்வாறு நடந்து வந்தது. ஒன்பதாவது வருஷத்தில் வேரன் இறந்தான். அதன்பிறகு மார்க்கன் ஏக சக்ரவர்த்தியாக நின்று ராஜ்யபாரம் நடத்திவந்தான்.

கசுக-ம் வருஷத்தில் ராஜ்யபாரம் வகிக்க ஆரம்பித்த நாள்முதல் அவனுடைய ஆயுள் இறுதிவரை மார்க்கன் தன் விருப்பத்திற்கு மாறாகத் தனது காலத்தை யுத்தங்களிலேயே கழிக்கும்படி நேர்ந்தது. கஎரு-ம் வருஷத்தில் ஆவீதிய காஸ்ஸியன் என்னும் தளபதி பொருவன் ஆசியாவில் சக்ரவர்த்திக்கு எதிராகக் கலகம் செய்தான். ஆனால் அவனைச் சக்ரவர்த்தியின் அதிகாரிகளில் சிலர் கொன்றுவிட்டனர். அதைக் கேட்டவுடன் மார்க்கன் மிகத் துக்கித்தான். "அவனை க்ஷமிப்பதனால் வரக்கூடிய ஆனந்தம் கைநழுவிப் போனமை பற்றி வருந்துகிறேன்," என்று சொன்னான். இத்தகைய நல்லெண்ணத்தோடு மாத்திரம் நில்லாமல் மார்க்கன் அக் காஸ்ஸியனின் குடும்பத்தாரையும் மிகப் பட்சமாகவே நடத்தித் தன் அருளுடைமையை விளக்கிச் சிறந்தான்.

கி. பி. கஎரு-ம் வருஷத்தில் வெளியூருக்குப் போர்நிமித்தமாகச் சென்றிருந்த காலத்தில், மார்க்கன் தன் அருமை மனைவியை இழந்து விட்டனன். அவன் அவளிடம் அதிகமான அன்பு வைத்திருந்தான். அவளைப் "பணிவுடையவள், ஆடம்பரமற்றவள், அன்புடையவள்," என்று புகழ்ந்துரைத்திருக்கின்றனன். ஆகவே அவள் பிரிவாற்றாமல் மிக்க கிலேசமுற்றான். தன் தந்தை பியன் தன்னை அரச நிர்வாகத்தில் சேர்த்துக்கொண்டது போல் தானும் மறுவருஷத்தில் தன் மகன் கொம்மோதன் என்பவனைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். இத்தகைய ஒழுக்கசீலனான மார்க்கனுக்குப் பிறந்தும், அவனோடு சேர்ந்து வாழ்ந்தும், கொம்மோதன் தந்தை இறந்தபின் துன்மார்க்கனாய் விட்டான். ஆனால் சிறுவயதில், அதாவது க௯-வது வயதில், தந்தை மரணத்தால் தனியே விடப்பட்டதனால் அவன் அவ்விதம் துன்மார்க்கனாயிருக்கக்கூடும். மேலும் சன்மார்க்கருக்குத் துன்மார்க்கர் பிறப்பதையும் அனுபவத்தில் பார்த்திருக்கிறோமன்றோ?

மார்க்க ஒளரேலியன் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவன் அல்லன். அக் காலத்தில் ரோம ராஜ்யத்தில் பெரும்பான்மையோருடைய மதம்வேறு. அப்பொழுதுதான் கிறிஸ்தவ மதம் சிறிது சிறிதாய்ப் பரவிக்கொண்டிருந்தது. ஆனால் பொது ஜனங்கள் அதை வெறுத்துக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தனர். அரசரும் பிறரும் அவர்களால் உண்மை ஞானத்திற்கும், பொது வாழ்விற்கும், ராஜ்யத்திற்கும் பெருங் கேடே விளையுமென்று உண்மையாய் நம்பியிருந்தனர். இந்நிலைமையில் மார்க்கனும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும்படி கட்டளையிட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் ஆசிரியர்களில் சிலர் அவன் அவ்விதம் செய்தனன் என்றும், சிலர் அவன் அவ்விதம் செய்யவில்லை என்றும் கூறுகின்றனர். இவ்விடத்தில் நாம் அதைப்பற்றி விவகரித்து நிர்ணயித் தெழுதவேண்டியதில்லை. ஒன்று மட்டுஞ் சொல்லலாம். கிறிஸ்து நாதரின் ஹிதோபதேசம் முழுவதும் அவனுக்குத் தெரிந்திருந்தால், அவன் கிறிஸ்தவருக்கு யாதொரு கேடுஞ் செய்ய ஒருப்பட்டிரான் என்பது நிச்சயம். ஏனெனில் பகைவரை மன்னித்தலையே தலைசிறந்த தர்மமெனக் கிறிஸ்து நாதர் கூறியதுபோல் இவனும் கூறி அவ்விதமே நடந்துவந்தவன்.

மார்க்கன் கி. பி. கஅ௦-ம் வருஷத்தில் அதாவது தன் ஐம்பத்தொன்பதாவது வயதில் பாசறையிலேயே இறந்தான். அப்பொழுது அவன் புத்திரன் அவனுடன் இருந்தான். அவனுடைய பிரேதம் ரோமாபுரிக்குக் கொண்டுவரப்பட்டு வெகு விமரிசைகளோடு அடக்கஞ் செய்யப்பட்டது. கொம்மோதன் அவனுடைய ஞாபகார்த்தமாக ரோமாபுரியில் ஒரு கோபுரங் கட்டி அதன் மீது அவன் சிலையை நிறுத்திவைத்தான். பிரஜைகள் அனைவரும் அவனைத் தங்கள் கிரக தேவதைகளில் ஒன்றாக மதித்து வீடுகளில் அவனுடைய விக்கிரக மொன்றை வைத்துப் பூசித்து வரலாயினர்.

மார்க்க ஒளரேலியனுடைய புகழைப் பாடாதார் இல்லை. ஒருவனை அவனோடு கூடவே இருந்தவர் புகழ்வதும் அவனுடைய பகைவர் புகழ்வதும் துர்லபம். ஆனால் இவனை உடன் வாழ்ந்தவர், பகைவர் உள்படச் சகலரும் புகழ்ந்தனர் என்றால் இவனுடைய மேன்மையை என்னென்று சொல்வது? மேலும் உலகமானது யாரையும் பரிபூரண புருஷன் என்று ஒப்புக்கொள்வதில்லை. ஒவ்வொருவன் மீதும் ஏதாவது ஒரு குற்றத்தை ஏற்றியே வைக்கிறது. அரசர்கள் ஜீவந்தர்களாக இருக்கும் வரையில் பிரஜைகள் அவர்களிடத்துத் தேவபக்தி செலுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் இறந்தவுடன் அவர்களுடைய குற்றங்களைப் பற்றிக் கூசாமல் வாதிக்கிறார்கள். ஆயினும் உலகம் அன்று முதல் இன்று வரையில் மார்க்கனைக் கோதிலாப் பெருங் குணத்தானாக மதித்துவருகிறது. மார்க்கனுடைய விக்கிரகம் இங்கிலாந்து முதலான தூரதேசங்களிலும் வணங்கப்பட்ட தென்றால் மார்க்கனுடைய சிறப்பை யாவரே அளவிடக் கூடும்?

இத் தகைய பெருந்தகையின் உடல் வாழ்வு இத் தன்மையதாக, இவனுடைய ஆன்ம வாழ்வின் அருமையைச் சிறிது கவனிப்போம். இவனுடைய ஆன்ம வாழ்வை அறிவதற்கு நமக்கு ஆதாரமாக வுள்ளன அவனுடைய "மணிமொழிகளே." இம் மணிமொழிகள் தினந்தோறும் தனக்குத் தோன்றிய பொழுதும் ஆறுதல் வேண்டிய பொழுதும் அநேகமாகப் போர்க்குச் சென்றிருந்த காலத்தில் பாசறையில் வைத்துத் தன் பார்வைக் கென்றே எழுதப் பட்டவை. ஆகலின் அவைகளின் வாசக நடை சிறப்புற்றிருக்கவில்லை. ஆனால் அவைகளில் அவனுடைய அறமும் பூண்ட நெஞ்சம் தெளிந்த நீர்போல் பிரகாசிக்கின்றது. அவைகளில் அவனுடைய கொள்கையையும், அதன்படி நடக்க அவன் பட்ட கஷ்டங்களையும், அக்கஷ்டங்களை அவன் நீக்கிக் கொண்ட வழிகளையும் பிறவற்றையும் பரக்கக் காணலாம்.

ஆயினும் அவனுடைய மொழிகள் எவ்விதத்தில் நமக்கு நன்மை பயக்கும்? உலகில் எத்தனையோ பெரியோர்கள் நீதி நெறியைப் பல வழிகளில் விளக்கி யிருக்கின்றனர். ஆனால் வெகு சிலருடைய மொழிகளே கேட்பாரைப்பிணித்துக் கேட்டவையின்படி செய்யத் தூண்டக்கூடியவைகளா யிருக்கின்றன. அத்தகைய மொழிகளே,

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்,"

என்று நமது நாட்டுத் திருவள்ளுவ நாயனுர் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். அத்தகைய குணமுடையன மார்க்க ஒளரேலிய னுடைய மணிமொழிகள்.

இம் மகானுடைய மணிமொழிகளை நமது நேயர் அனுபவிப்பதற்காகப் "பாலபாரதியில்" அப்போதைக் கப்போது வெளிப்படுத்தி வர இருக்கிறோம்.

ராஜகோபாலன் கடிதங்கள்

௫

பிரிய நண்ப,

நான் ஊருக்குத் திரும்புமுன் உனக்குக் கடிதம் எழுத வேண்டாம் என்றே இருந்தேன். ஆனுல் ஒரு சம்பவம் உனக்கு இக் கடிதம் எழுதும்படி செய்கிறது.

இம் முகவுரையிலிருந்து ஏதாவது ஓர் பெரும் போரோ, அல்லது களவோ, அல்லது வேறு பெரிய விவகாரமோ நடந்துவிட்டது என்று பயந்துபோய் விடவேண்டாம். விஷயம் ஒரு சிறிய, மிகச் சிறிய குடும்பத்தைப் பற்றியது. அதுவும் தினம் நடை பெறுகிற காரியமே. ஆனுல் எனக்கு அது புதிதாகப் பட்டது. நீயும் என்னைப் போலவே வளர்ந்தவனுகையால் உனக்கும் அது புதிதாகவேதான் தோன்றும்.

ஆனுல் என்ன எழுதிவிட்டேன்? நான் மேலே எழுதிய தோரணையைப் பற்றி நானே சற்று நிதானித்துப் பார்க்கும்போது, என் மனது எவ்வளவு சிறுமையுற்றதாக இருக்கிறது என்று நினைத்து வருந்தும்படியாக இருக்கிறது. சம்பவம் என்று படித்ததும் பயந்து போய் விடாதே—அற்பமான ஓர் குடும்பத்தைப் பற்றின விவகாரம்தான் என்று வெகு லேசாகச் சொல்லிவிட்டேன். பெரியதொரு ராஜ்ஜியத்தைப் பற்றிய விஷயத்தைத் தானே சம்பவம் என்று சிறப்பித்துச் சொல்லலாகும்? பெரிய குடும்பங்களில் நிகழ்கின்ற விசேஷங்கள்தாமோ சம்பவம் என்ற பெயருக்கு உரியவை? சிறிய குடும்பங்களில் நடக்கின்ற காரியங்கள் எதும் சம்பவிக்கிறதில்லையோ? தனவான்கள் அல்லது வித்துவான்கள் அல்லது வீரர்கள் செய்யும் காரியங்களும் நினைக்கும் நினைவுகளும்தாம் சரித்திராசிரியராலும் சாமானியர்களாலும் விவகரிக்கப்படத் தக்கனவோ? இல்லை! மகாத்மா யேசு சொல்லுவது போல, ஒரு பைசாவுக்கு வாங்கும் குருவிகூட அவன் அறியாமல் தரையில் வீழாது! ஏழைக் குடும்பங்களில் நிகழும் நிகழ்ச்சிகள் நமக்கு அலக்ஷியமாக—நமது மாடுகள் குதிரைகளுக்கு நேரும் நிகழ்ச்சிகளைவிடக் கேவலமாக—தோற்றுகின்றன. ஆனுல் சூரிய நாராயணனுடைய கண்முன்னே, பார்க்கு மிடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணத்தின் திருச் சன்னிதானத்தில், சாமானியருடைய வாழ்க்கைக்கும் செல்வருடைய வாழ்வுக்கும் யாதொரு பேதமு மில்லை. பேத மேதேனும் இருக்குமேல் உயர்வு சமானியருடைய வாழ்க்கைக்கே உரியதாகும். ஏனெனில் அவர்கள்தாம் நெஞ்சார, நிஷ்களங்கமாய், பாசாங்கில்லாமல் வாழ்கிறார்கள். மற்றோர்—இவர்களுடைய வாழ்க்கையைப்பற்றிப் பேசாதிருத்தலே அவர்களுக்கு க்ஷேமதரமாகும்.

ஏதோ புஸ்தகத்துக்கு முகவுரை எழுதுவதுபோல எழுதிவிட்டேன். மன்னித்துவிடு. நடந்த சங்கதியை போக்கியமாகச் சொல்லிவிடுகிறேன். என்னுடைய மரத்தடியில்—அது என்னுடைய மரமாகப் போய் விட்டது!—உட்கார்ந்து கொண்டு நேற்றுச் சாயங்காலம் வானத்தின் பூ நீலத்தைக் கண் குளிர அனுபவித்துக் கொண்டும், அணி வகுத்ததுபோல் சென்று கொண்டிருந்த மேகக் கூட்டங்களைக் கவனித்துக்கொண்டும் நீல வானத்தில் வெண் மேகத்தின் குஞ்சோ என நினைக்கும்படி மங்கிக் காட்டிய சந்திர கண்டத்தை ஆராய்ந்து கொண்டும் இருக்கும் போது அடுத்த காட்டினின்று குழலின் ஓசை தென்றலின்மீது மிதந்துகொண்டு வந்து என்னைப் பகற்கனவினின்றும் தட்டி எழுப்பிற்று. விழித்துக் கொண்டதும் அக் குழலோசை வந்த திக்கின்புறம் திரும்பினேன். பெரிய ராகவிஸ்தாரம் ஒன்றுமில்லை. சாதாரணமான தெம்மாங்குதான். ஆனுல் அத் தெம்மாங்கை வாசித்துக்கொண்டிருந்த பையன் அனுபவித்த ஸ்வானுபவம் சரப சாஸ்திரிக்குக்கூட இராது என்று எனக்குத் தோற்றிற்று. கமகம், தானம், முதலிய ஜிகிணு வேலைகள் அவனுடைய கானத்திலில்லை. இயற்கையான நிச்சுவாஸ உச்சுவாஸத்துடனேயே அவன் ஸ்வரங்களை யெல்லாம் ஊதினுன். பிரகிருதியிலுள்ள ஆனந்தத்தை யெல்லாம் தான் வாங்கிக் கொண்டு, அதைக் கோணு மாணலாக இன்றி நேராக, ஸ்வச்சமாக, பிரகிருதியினிடமே திருப்பி ஒப்பித்து, அதை அவள் மனமுவந்து ஏற்றுக் கொள்வதைக் கண்டு ஆனந்த பரவச மடைந்தான்போலத் தோற்றினுன் அப் பையன் என் கண்களுக்கு! ஆகையால் என் மனம் மற்றுள்ள நினைவுகளை யெல்லாம் விட்டு அவனிடத்தும் அவன் கானத்தினிடத்துமே சென்றது.

இவ்வாறு நேரம் போவதுகூடத் தெரியாமல் தநைகதியானமாக நான் நின்று கொண்டிருக்கையில், பையன் தன் புள்ளாங்குழலை அப்படியே விட்டெறிந்துவிட்டு மரத்தினின்று ஒரே குதியாய்க் குதித்து, பேய் பிடித்தவன்போல மேற்கு நோக்கி ஓடினுன்.

அம்மா போனபிறகு எனக்கு இயற்கையாக வந்துவிட்ட அஸ்வாரஸ்யத்தினுல் நான் இருந்த இடத்தை விட்டு எழுந்திராமலே என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருந்தேன். போன பையன் அங்கே சண்டை செய்துகொண்டிருந்த இரண்டு பையன்களில் ஒருவன் புறம் சேர்ந்துகொண்டு மற்றவனோடு போர் செய்யத் தொடங்கினுன். தூரத்திலேயேதான் நடந்தாலும் போரின் போக்கை நான் நன்றாகக் கவனித்தேன். ஆகிருதியிலும் பலத்திலும் நம்முடைய பையன் சிறியவனே. மற்றவன் பலிஷ்டன்; அவன் வயதுக்கு அவன் வளர்ச்சி அதிகமாக உள்ளவனுயிருந்தான். சிறிய பையனுக்காக நம்மவன் பரிந்துகொண்டு வருவதைக் கண்டு கோபாவேசங்கொண்டு அவன் இவனை மூர்க்கத்தனமாகத் தாக்கினுன். ஆனுல் நம்முடைய பையன் குத்துக்களை யெல்லாம் இலக்குப்பார்த்துத் தேக்கிக் கொண்டே வந்தான். எதிரியின் குத்து இவனை இந்த நிமிஷத்திலேயே வீழ்த்திவிடும்போல் இருக்கும். கீழே விழுந்துதான் விடுவான் என்று பயத்தோடு பார்த்திருக்கையில் நம் சிறுவன் தன் உடலை வெகு சாமர்த்தியமாகச் சாய்த்துக்கொடுத்து அக் குத்தினின்று தப்பிக் கொண்டுவிடுவான். இவன் பரபரப்பில்லாமல் இலக்குப் பார்த்துத் தப்பி வர வர எதிரிக்குக் கோபமும் ஆவேசமும் ஜாஸ்தியாகிக்கொண்டே வந்தது. கடைசியில் துடிதுடிப்பு அதிகமாகி இலக்கில்லாமல் குத்தத் துவக்கி விட்டான். அதுதான் சமயம் என்று பார்த்திருந்த நமது பையன் தன் பலத்தை யெல்லாம் சேர்த்து எதிரியைத் தாக்கினுன். இரண்டு மூன்று நிமிஷத்திற்கெல்லாம் எதிரி நன்ருகப் புடைக்கப்பட்டுக் கீழே விழுந்து விட்டான்.

அங்கே கூடியிருந்த பிள்ளைகளெல்லாம் நமது பையனைச் சூழ்ந்துகொண்டு அவனுடைய தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் மெச்சினுர்கள். கீழே விழுந்த பையன் மெல்ல எழுந்திருந்து அவ் விடத்தை விட்டுப் போய்விட்டான். அவனைக் கீழே தள்ளி வென்று விட்ட பிறகு நமது வீரன் அவனிடம் இரக்கம் காட்டிச் சமாதானம் செய்துகொண்டிருந்தானுல் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்திருக்கும். ஆனுல் தமிழ்நாடு தன் புராதன குணங்களான மறமிழுக்கா மானத்தையும் மானமிழுக்கா மறத்தையும் இழந்து கீழ்மையுற்றிருக்கிற இந் நாளிலா ஓர் மாடு மேய்க்கும் பையன்,

> போராண்மை என்ப தறுகண்; ஒன்றுற்றக்கால்
> ஊராண்மை, மற்று, அதன் எஃகு,

என்ற ஆன்றோர் வாக்கைப் பின்பற்றி நடக்கப் போகிறுன்?

ஆனுல் இவ்வளவு தீரங் காட்டின பையனைப் பக்கத்தில் போய்ப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை தூண்ட நான் என்னிடத்தைவிட்டு மற்றப் பிள்ளைகளும் அவனும் கூடிக்கொண்டிருந்த காட்டிற்குச் சென்றேன். அங்கே அவன் பெயர் சுடலைமுத்து என்று தெரிந்து கொண்டேன். சுடலைமுத்துதான் அங்குள்ள பிள்ளைகளுக் கெல்லாம் தலைவன். வயதில் அனேகரை விடச் சிறியவனுயிருந்தும், அவன் முகத்தில் அதிகார லட்சுமி பிரசன்னமாக இருந்தாள். அப் பிள்ளைகளுக்குள் யாரையும் தன் ஆணைப்படி நடக்கும்படி செய்யவேண்டிய வசியசக்தியும் திட்பமும் அவனிடத்தில் காணப்பட்டன. அவனுடைய நடை உடை பாவனைகளெல்லாம் ஸ்வபாவீகமாக இருந்தன. பிள்ளைகளும் அவனுடைய வார்த்தைகளுக்குச் சந்தோஷமாகக் கீழ்ப்படிந்ததைப் பார்த்தேன்.

சண்டை எதற்காக நடந்தது என்று பிள்ளைகளைக் கேட்டேன். அதற்கு அவர்கள், தோல்வியுண்ட முரட்டுப் பையன் அவனுக்குச் சற்றேனும் இணையில்லாத ஓர் பிள்ளையை எப்பொழுதும் வருத்துவா னென்றும், அவ்வாறு வருத்தக் கூடாது என்று சுடலைமுத்து அடிக்கடி அவனிடம் சொல்லியும் அவன் அவனை அலக்ஷியமாகத் தூக்கி யெறிந்து பேசுவான் என்றும், நேற்று அந்தச் சிறு பையனை அவன் நிஷ்காரணமாகப் புடைத்தான் என்றும், அதைக் கண்டு நம் சுடலைமுத்து ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் அவனைத் தாக்கி, அவனிடம் நன்றாக அடி வாங்கியும் கடைசியில் அவனை வீழ்த்திவிட்டான் என்றும் கூறினார்கள். 'என்ன, அப்பா, அடி பலமாக விழுந்ததோ?' என்று நான் அவனை வினவினேன். 'இதெல்லாம் எம் மாத்திரம், சாமி? இனிமேல் மருதை இந்த முத்து வழிக்கு வாமாட்டான். அதுக்காக இன்னும்கூட நான் அடி வாங்கத் தயார்'ங்க' என்று சொன்னான்.

அதற்குள்ளும் பிள்ளைகள் விளையாடிவிட்டு வீட்டுக்குப் போகலாம் என்று சொல்ல, நம் சுடலைமுத்து மத்தியானம் ஒன்றுமே நடக்கவில்லை போலக் குதூகலமாக அவர்களுடன் சேர்ந்து விளையாடத் தொடங்கினான். மாக் குரங்கு, கிளித் தட்டு, பலீன் சடுகுடு,முதலிய விளையாட்டுக்கள் விளையாடப்பட்டன. விளையாட்டில் தகராறுகள் வந்தால் எல்லோரும் நம் சுடலைமுத்திடம் தான் மத்தியஸ்தம் சொல்லுவார்கள். அவனும் பாரபக்ஷமில்லாமல் பொதுவாகத் தீர்ப்புச் சொல்லுவான். அவனுடைய தீர்மானத்தை அவர்கள் அரசனது ஆணையைப் போலப் பாவித்து மறுபேச்சுப் பேசாமல் அதன்படி நடப்பார்கள்.

அஸ்தமிக்கும் சமயமாயிற்று.எல்லோரும் அவரவர்களுடைய மாடுகளை ஓட்டிக் கொண்டு ஊர் நோக்கிப் புறப்பட்டார்கள். சுடலைமுத்தை நெருங்கியது முதல் எனக்கு அவன் மீது ஓர் பிரேமை உண்டானதால் நான் அவனோடு பேசிகொண்டே சென்றேன். அவனுடைய சுருண்ட தலைமயிரும், கட்டமைந்த சரீரமும் நிஷ்களங்கமான தோற்றமும், என்னை அறியாமலே என் மனதை ஆகருஷித்தன. தன் மந்தையை வேறொரு பையன் வசம் ஓட்டிவிட்டு அன்று அவன் மாடு மேய்க்கிற பையன் போல மெல்ல ஊர்ந்துகொண்டு செல்லாமல் வேகமாகவே சென்றான். நானும் அவன் வீடு வரையிலும் சென்றேன். அப்படியே நான் நேரே செல்லக் கால் எடுத்து வைக்கையில் சுடலைமுத்து 'வீட்டுக் குள்ளே வந்து'ட்டுப் போவணும், எசமான்,' என்று சொல்லி என்னை அழைத்தான். நானும் அவன் வீட்டினுள் பிரவேசித்தேன்.

வீட்டு வாயிற் படியிலேயே ஒரு பெண் அவனுக்காக வெகு நேரம் காத்திருந்தவள்போல் நின்றுகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும், 'பாட்டியாருக்குக் காய்ச்சல் விட்டுப் போய்த்திருச்சா, சின்னம்மா? முன்னமே வந்த'ரணம் என்னிருந்தேன், ஆனா' கொஞ்சம் நேரமாய்த்திருச்சு,' என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்றான். வீடு சிறிய, மிகச் சிறிய வீடு. ஒரு பட்டகசாலையும் ஒரு அறையும்தான். ஆனால் எல்லாம் நன்றாகக் கூட்டிப் பெருக்கி வாரப்பட்டிருந்தது. ஒரு ஐப்பு, அழுக்கு இல்லை. சின்னம்மா எவ்வளவு நன்றாக வளர்க்கப்பட்டு வந்திருக்கிறாள் என்று அந்தப் பட்டகசாலையின் தோற்றமும் அதிலுள்ள ஒவ்வொரு சாமானும் எனக்குக் கூறின. எல்லாம் அது அது இருக்க வேண்டிய இடத்தில் இருந்தது. எனக்கு ஒரு சாமான் இடம் மாறியிருந்தால் பிடிக்காது என்று உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை. அப்பேர்ப்பட்ட எனக்குக் கூடக் குற்றம் சொல்லக் கூடிய விஷயம் ஒன்று மில்லையானால் சின்னம்மாளின் பயிற்சியை என்ன என்று உரைக்கலாம்.?

இவர்கள் பாட்டியார் பட்டகசாலையில் ஓர் ஓரத்தில் ஓர் பாயில் உட்கார்ந்திருந்தாள். மிகவும் மெலிந்திருந்தாள். உள்ளே வந்ததும் சுடலைமுத்து பாட்டியிடம் வந்து, "அம்மாயி, உடம்பு எப்படியிருக்கிறது? எங்கே பார்க்கலாம், சூடு விட்டுப் போய்த்திருச்சு. நாளைக்குக் காய்ச்சல் வாரதிருக்க'ணும். மத்தியானம் கஞ்சி காய்ச்சிக் கொடுத்தாளா சின்னம்மா? நானும் நேரத்திலே வந்திட'ணும் இன்னிருந்தேன்: அதுக்குள்ளியும் நேரமாய்த்திருச்சு," என்று சொல்லிக் கொண்டே கிழவியின் கையைப்பிடித்துப் பார்த்துவிட்டுக் காலையும் மிருதுவாகப் பிடிக்கத் துவக்கினான். அவனுடைய வார்த்தைகளிலும செய்கையிலும் அன்பு ததும்பிற்று. அவன் கண்களினின்று பெருகும் அன்பினாலேயே அந்தக் கிழவிக்கு இருந்த நோயைவிட ஆயிரம் மடங்கு கொடிய நோயும் ஸ்வஸ்தமாகிவிடும் போல எனக்குத் தோன்றியது! மத்தியானமெல்லாம் புள்ளாங்குழல் வாசித்துக்கொண்டும், முரட்டு விளையாட்டுகள் விளையாடிக்கொண்டும், அரை மணிநேரம் முரட்டுப்பையன் ஒருவனோடு கடுமையாகக் குத்துச் சண்டை செய்தும் இருந்த ஓர் பையன், வீட்டிற்கு வந்ததும் எவ்வாறு மாறித் தங்கச்சியிடமும் பாட்டியாரிடமும் அன்பே உருவமாக ஆகிவிட்டான் என்று பார்க்கையில் எனக்கு ஓர் நூதன உலகம் திறந்து விட்டதுபோ லாகிவிட்டது. உலகத்தில் ஏழைகள் வீட்டில் உள்ள அன்பும் அன்னியோன்யமும் அன்றோ ஜாதியின் வன்மையைக் காத்துவைத்துத் தருகிறது!

இதையெல்லாம் பற்றி நினைக்க அப்பொழுது எனக்கு நேரமில்லை. சுடலைமுத்து பேச்சை நிறுத்தியதும் கிழவி, "என்ன, தம்பி, ஐயா நிக்கிரா'க, கவனிக்காமே என்னவோ செய்தி'ட்டிருக்கே? ஒரு மணையைப் போட்டு ஒக்காரச்சொல்லு," என்று சொல்லி, "இத்தனை தூரம் நம்ம வீட்டுக்கு எங்கே வந்தாங்க'?" என்று கேட்டாள். பையனும், "ஆமாம், அம்மாயி, மறந்துபோய்'த்தேன்," என்று சொல்லிக்கொண்டு ஓர் பலகையைக் கொணர்ந்து போட்டு என்னை உட்காரச் சொல்லி ஆசார உபசாரங்கள் செய்து, "இவ'ங்க' ஒரு மாசமா' நான் மாடு மேய்க்கிற காட்டுக்கு அடுத்த காட்டிலே காலம்பர முதல் பொழுது சாயும் தன்னையும் ஏதோ வருத்தமா ஒக்காந்துகிட்டே இருப்பாங்க. நானும் ரெம்ப நாளா அவங்க' ஆரு என்னு கேக்கணும் என்னிருந்தேன். ஆனால் அவங்க', ஆரோ,நாம்ம ஆரோ,கேட்டா' ஏதாச்சும் ·கோவிச்சுக்கிட்டா என்ன செய்யறது என்னு சும்மா இருந்துட்டேன். இன்னைக்கு அவங்களே நம்ம காட்டுக்கு வந்து, நாங்களெல்லாம் விளையாட'றதைப் பார்த்துக்கினிருந்தி'ட்டு, என்னோடு பிரியமா'ப் பேசிக்கினே இத்தனை தூரம் வந்திட்டாங்க. அப்படியே வீட்டுக்கு போ'றவங்களை நம் மூட்டுக் குள்ளே வந்திட்டுப் போவச் சொன்னேன் அதுங்குள்ளியும் உனக்கு யெப்படி யிருக்குது என்கிற விசாரத்திலே அவங்களை மறந்துபோய்த்தேன். சாமி,என்னை மன்னிச்சுக்கணும். இவங்கதான் எங்க அம்மாயி. எங்கம்மா எறந்ததுகூட எங்களுக்குத் தெரியாது. இவங்களே எனக்கும் என் தங்கச்சிக்கும் தாயாக இருந்து காப்பாத்தி வ'ராங்க'. அவ'ங்களுக்கு எழெட்டு நாளாய்க் காய்ச்சல் ஓயாமல் அடிச்சுக்கிட்டே இருந்தது. அதனால்தான் நீங்க நிக்கிறதுகூடத் தெரியாமே அவங்களையேகவனிச்சிட்டிருந்திட்டேன்," என்று சொல்லி நிறுத்தினான்.

நானும் அவர்களுடைய பரஸ்பர அன்பாகிற பாற்கடலில் மிதந்துகொண்டும் திளைத்துக்கொண்டும் சற்று நேரம் இருந்துவிட்டு நேரமாகிவிட்டதால் புறப்பட்டேன். புறப்பட்டதும்கிழவி, 'இந்தத்தாயில்லாப் பிள்ளையையும் லச்சியஞ் சேஞ்சு இத்தனை தூரம் வந்தீங்களே, நீங்க நல்லாருக்'கணும்,' என்று சொல்லிவிட்டு, 'என்ன தம்பி,எசமானைச் சும்மா அனுப்பறே: அங்கே என்ன இருக்கு பாரு. அதோ அந்தப் பெட்டியிலே வெத்திலை பாக்கிருக்கும்,எடுத்துக்குடு,' என்றுசுடலைமுத்தைப் பார்த்துச் சொன்னாள். அவனும் அவளிடமிருந்த பெட்டியிலிருந்து வெற்றிலைஎடுத்துஎன்னிடம் கொடுத்தான். நான் பெற்றுக்கொண்டு, அந்தச் சிறு குடும்பத்திலிருக்கிற அன்பையும் அவர்களிடம் இயற்கையாக வளர்ந்திருக்கிற மரியாதையையும் சந்தோஷத்துடன் சிந்தித்துப் பார்த்துக்கொண்டே வீடு போய்ச் சேர்ந்தேன்.

---

* இக்கடித வரிசையை நான் நான்கு வருஷங்களுக்கு முன் பிரசுரித்த காலத்தில் இன்று பிரசுரமாகும் கடிதம் கைக்கு அகப்படாமலிருந்ததால் நினைவுக்கு வந்த அளவுக்கு இக் கடிதத்தின் விஷயத்தைக் பிரசுரித்தேன். நல்ல வேளையாய் இன்று மூலக்கடிதமே அகப்பட்டுவிட்டதால் இதையே இப்பொழுது வெளிப்படுத்துகிறேன். — பதிப்பாசிரியன்.

யோக ஸாதனம்

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது)

சக்தி அல்லது உறுதியைப்பற்றி இன்று உபதேசிப்பதாயிருக்கிறேன். உறுதியே யோகத்திற்கு அடிப்படை. உச்சந்தலைக்குக் கொஞ்சம் மேலாக உள்ள ஸஹஸ்ரதளத்தில் (க) சக்தி வீற்றிருக்கிறாள். அங்கிருந்தே அவள் எல்லாவற்றையும் நடத்துகிறாள். இந்த ஸ்தானத்திற்குக் கொஞ்சம் கீழாக, மூளையின் இருப்பிடத்துக்குச் சற்று மேலே உயர்தர புத்தி இருக்கிறது; இதற்குக்கீழே மூளையின் நடுப்பாகத்தில் தார்க்கிகபுத்தி அல்லது கீழ்த்தர புத்தி இருக்கிறது. தார்க்கிக புத்திக்குக் கீழாக மூளையின் அடிப்பாகத்தில் மனதுடன் போக்கு வரத்து செய்வதற்காக உள்ள கரணம்இருக்கிறது—இதற்கே கிரகணசக்தி (உ) என்று பெயர். ஞானம், புத்தி, கிரகணசக்தி ஆகிய மூன்றும் மூளையின் மூன்று பாகங்கள். இவைகள் ஸூக்ஷ்ம சரீரத்தினின்று இயங்குகின்றன; இவ்வகள் தங்கள் தங்களுக்கேற்ற ஸ்தூலமாகிய மூளையின் பகுதிகளுடன் இணைக்கப் பட்டிருக்கின்றன.

இதயத்திற்குச் சற்று மேலே, மார்புக்குள் மனது அமைந்திருக்கிறது.இது ஐந்து இந்திரியங்கள் அடங்கிய உணர்ச்சிக் கரணம். மனதிற்குக் கீழாக இதயத்திலிருந்து, இதயத்திற்கும் உந்திக்கும் நடுவில் உள்ள இடம் வரைக்கும் சித்தமாகும். இதனின்று உந்திவரையும் அதற்குக் கீழாயும் ஸூக்ஷ்ம பிராணன் இருக்கிறது. மேற் சொன்னவைகளனைத்தும் ஸூக்ஷ்ம சரீரத்தில் இருக்கின்றன; ஆயினும் இவை மேற் சொல்லிய ஒவ்வொரு இடத்திலும் ஸ்தூல சரீரத்துடன் இணைக்கப் பட்டிருக்கின்றன. ஸ்தூல சரீரத்திற்கூட இரண்டு தொழிற்சாலைகள் உண்டு: ஒரு ஸ்தூல பிராணன் அல்லது நாடி யந்திரம்; மற்றொன்று அன்னம் அல்லது ஜட சரீரம்.

உறுதி அல்லது தபஸ்-சக்தி என்பது சரீரத்திற்கு எஜமானனாகிய ஈசுவரனுடைய கருவி. இது முன்சொல்லப்பட்ட கரணங்களனைத்தின் வழியாகவும் இயங்குகிறது. ஞானம், எண்ணங்கள், கருத்துக்கள் முதலியவைகளின் பொருட்டு புத்தியின் வழியாயும், புலன்களின் பொருட்டு மனதின் வழியாயும், ஆவேசங்களின் பொருட்டுச் சித்தத்தின் வழியாயும், போகாதிகளின் பொருட்டுப் பிராணனின் வழியாயும் உறுதி இயங்கித் தொழில் புரிகிறது. அந்தந்த கரணங்களின் வாயிலாகவும் அதன் அதன் திறமைக்குத் தக்கவாறு தபஸ்-சக்தி பரிபூரணமாக இயங்கும் பொழுது, அதன் இயக்க-நோக்கம் தவறாது ஸித்தியைப் பெறும். குற்றம், குறை, அசக்தி முதலியவைகளுக்கு இரண்டு காரணங்கள் உண்டு.கரணங்களுக்குள்ளாகக் குழப்பம் ஏற்படுவது முதற்காரணமாகும்.உணர்ச்சிகளிலும் ஆவேசங்களிலும் எண்ணங்களிலும் பிராணன் தலையிடுவதனால் மனிதன் அடிமையாகி ஸ்வசக்தியை இழந்துவிடுகிறான்—அதாவது பிராணனுக்கு அடிமையாய்விடுகிறான்;ஆசைகள் அவனை ஆட்கொள்கின்றன. சித்தமானது புலன்களிலும், எண்ணத்திலும் புகுந்து தலையிடுவதனால், புலன்களும், எண்ணங்களும் ஆவேசங்களினால், பொய்யாக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒருவனுடைய புத்தியினிடத்துக் காதலுணர்ச்சி தலையிட்டால், அவன் தான் காதலிப்பவரின் இயலை அறியமாட்டாதவனாய்விடுகிறான்; தான் காதலிப்பவர் சம்பந்தமான விஷயங்களின் சரி, தப்பு, தாரதம்மியம், கர்த்தவ்யம் (௩), அகர்த்தவ்யம் முதலியவைகள் அவன் கண்ணுக்குப் புலப்படாது போய்விடுகின்றன. கடைசியாக, இவன் ஆவேசங்கள், காமம், வெகுளி, மயக்கம், பகை, முதலியவைகளுக்குத் தாஸனாய் விடுகிறான். மனது ஒருவனுடைய புத்தியைத் தாக்கினால் அவன் தன்னுடைய புலனுணர்ச்சிகளை மெய்க் கருத்துகளென நம்பி விடுகிறான். பார்த்ததற்கும் கேட்டதற்கும் தீர்ப்புச் சொல்வதற்குப் பதிலாகப் பார்த்ததைக் கொண்டும் கேட்டதைக் கொண்டும் இவன் தீர்ப்புச் சொல்லுகிறான். மேலும் விசாரபுத்தி, கற்பனா சக்தி, ஞாபக சக்தி, தார்க்கிக சக்தி முதலியன ஞான சக்தியின் இயக்கத்தில் தலையிடுமாகில் ஒருவனுக்கு உயர்தர ஞானம் கிட்டாது; மேலும் இவன் முடிவற்ற ஸந்தேகச் சுழலில் அலைய நேரிடும். கடைசியாக புத்தியானது உறுதியின் இயக்கத்திற் தலையிட்டாற்கூட ஒருவன் சிற்றறிவின் (௪) எல்லைகளுக்குள்ளாகக் கட்டுப்பட்டு நிற்க நேரிடும்—சிறுகச் சிறுக ஸர்வ சக்திமானாவதற்குப் பதிலாக அந்தத்தையுடைய ஞானத்தின் சக்தியினால் கட்டுண்டு கிடக்க வேண்டியிருக்கும். ஒன்றுக்காகச் செய்யப்பட்ட இயந்திரம் அல்லது கருவி வேறு எதற்காகவாவது பிரயோகஞ் செய்யப் பட்டால் அது அவ்வேலையைச் சரியாகச் செய்யாது; அப்படி ஒரு வேலை செய்தாலுங்கூட, அது செய்து முடித்த காரியமானது இருக்க வேண்டியபடி இராது—தர்ம ஸங்கரம் நேரிடும். நான் இப்பொழுது விவரித்துள்ள நிலையானது ஞானத்தை அடைவதற்கு முன்னால் உள்ள மனிதனுடைய சாதாரண நிலை. இவையனைத்தும் தர்ம ஸங்கரம்; செய்கையிற் குழப்பம்; சரிவர நடக்காத நிர்வாகம்; திறமையற்ற, அறிவில்லாத அரசாட்சி. இதனால் உண்மை மந்திரியாகிய தபஸ்-சக்தி கீழ்த்தர உத்தியோகஸ்தர்களின் சொற்படி கேட்டு நடக்கும்படி யாய்விடுகிறது. கீழ்த்தர உத்தியோகஸ்தர்களனைவரும்சுயநன்மைக்காகப் பாடுபடுகிறவர்கள்; ஒருத்தர் வேலையில் ஒருத்தர் தலையிடுகிறவர்கள்; ஈசுவரனுக்குக் கேடு விளைவிப்பதற்காகவும் தங்கள் தங்கள் சொந்த லாபத்திற்காகவும் ஒருவர்க்கொருவர் வஞ்சனையாக நடந்துகொள்ளும் குணமுடையவர்கள். இவர்களுடைய நடத்தையினால் எஜமானன் தன்னுடைய எஜமானத்வத்தை இழந்து, ஈசனாய் இருக்கவேண்டியதற்குப் பதிலாக அநீசனாய் விடுகிறான். தன் வேலைக்காரர்களின் கையில் ஏமாந்து நிற்கும் ஒரு திக்கற்ற பொம்மை போல் எஜமானன் நடந்து கொள்ள வேண்டியதாய்விடுகிறது.

எஜமானன் ஏன் இவ்வாறு விட்டுக் கொடுக்கிறான்?—அஞ்ஞானம் என்னும் ஒரே காரணத்தினால்தான். மந்திரியும், உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களின் கீழ்த் தொங்கி நடக்கும் இலட்சக் கணக்கானவர்களும் என்ன செய்கிறார்களென்றாவது அல்லது இவன் விஷயமாக என்ன தீங்கிழைக்கிறார்களென்றாவது இவனுக்குத் தெரியாது. தன்னுடைய சொந்த நிலையையும், நிலையையும், அதிகாரத்தையும், தெரிந்துகொள்ளாததினால் ஏற்பட்டதே இந்த அஞ்ஞான நிலை. தன் அரசின் ஒரு பகுதியாகிய தேகத்திடத்து இவன் கண்ணும் கருத்துமாயிருக்க வாரம்பித்தான். பிறகு "இதுவே என் இராஜ்ஜியம்" என்று எண்ணலானான். இதனால் இவன் தேகத்தின் இயக்கங்களுக்குக் கருவி யாய்விட்டான்—கடைசியாக உடல் சொன்னபடி கேட்க வேண்டியதாய்விட்டது இவ்வாறே நாடி யந்திரத்திற்கும், புலனுணர்ச்சிக்கும், ஆவேகத்திற்கும், மன இயக்கத்திற்கும் இணங்கி ஒவ்வொன்றினுடனும் ஐக்கியப்பட்டு உட்படலானான். தான் இவைகளினின்று வேறென்பதையும், இவைகளைவிடத் தான் சிறந்தவனென்பதையும், பலவானென்பதையும் மறந்துவிட்டான். இப்பொழுது இவன் செய்யவேண்டியதென்னவென்றால் அதிகார உரிமையைக் கைக்கொண்டு, தான் ஈசன், இராஜன், எஜமானன், பகவான் என்பதைத் தன்னுடைய நினைவிற்குக் கொண்டு

வரவேண்டும்; தான் ஸர்வ சக்திமான் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். உறுதியே இவனுடைய மகா பலவானான மந்திரி. உறுதிக்குத் துணையாயிருந்து உறுதிக்கு வழியைக் காட்டிக் கொடுக்கவேண்டும். பிறகு உறுதி நல்ல அரசாட்சியை ஏற்படுத்தி, ஒவ்வொரு உத்தியோகஸ்தனும் அவனவன் கடமைமைகளை ஒழுங்காய்ச் செய்யும்படி வற்புறுத்தும். இவைகளனைத்தும் உடனே நடந்துவிடாது—ஒழுங்கு பட்டு, நடத்தையில் வந்து சேர நாள் பிடிக்கும். உத்தியோகஸ்தர்கள் ஏனோதானோ என்று தொழில் புரிவதற்கும், ஒழுங்கின்றித்தாறுமாருய் நடந்துகொள்வதற்குமே வழக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனதுபற்றி அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நடத்துவதற்கு முதலில் இணங்கி வரமாட்டார்கள்; ஒரு வேளை இணங்கினுற் கூட ஒழுங்காய் நடந்துகொள்ள மிகவும் கஷ்டப்படுவார்கள். ஒழுங்காய் வேலைகள் நடத்த எப்படித்தொடங்குவதென்றுகூட அவர்களுக்குத் தெரியாது—பல நாளைய தோஷம் ஒரு நாளில் தொலையாது. உதாரணமாக நீ உன்னுடைய உறுதியை எவ்வாறு முதலில் பிரயோகஞ் செய்துபார்ப்பாய் என்பதைச் சொல்லுகிறேன், கேள்: முதலில் பிராணன்வழியாக உறுதியைப் பிரயோகஞ் செய்து பார்ப்பாய்—அதாவது இச்சை, விருப்பம், ஆசை முதலியவை மூலமாய் உறுதியைப் பிரயோகஞ் செய்ய முயல்வாய்; இல்லாவிட்டால் சித்தத்தின் மூலமாய், அல்லது ஆவேகம், வேட்கை, ஆவல் முதலியவைகளின் வழியாகப் பிரயோகஞ் செய்ய முயல்வாய்; அல்லது மனதின்வழியாகச் சேஷ்டை, போராட்டம் உழைப்பு முதலியவைகளால் நீ எதை அடக்கி ஆள முயல்கிறாயோ அதனுடன் சண்டை யிட்டுப் பார்ப்பாய்; அல்லது புத்தியின் மூலமாக, "இது இவ்வாறு நடக்கட்டும்," "அது அவ்வண்ணம் நேரட்டும்," என நினைத்து, உன தெண்ணங்களுக்கிணங்கி எல்லாம் நடைபெறவேண்டுமென எண்ணமிடுவாய்; இவ்வகை எண்ணங்களுக்கெதிர் நடையான எண்ணங்களை அடக்கி வழிக்குக் கொண்டு வர முயல்வாய். தபஸ்-சக்தியைத் திரும்ப அடையும் பொருட்டு மேற் சொல்லிய உபாயங்களனைத்தும் யோக ஸாதனங்களால் கையாளப்படுகின்றன. பிராணனையும் தேகத்தையும் ஹடயோகி அடக்கித்தன்வழிக்குக் கொண்டு வர முயல்கிறான். இதயம், புத்தி, மனஸ் முதலியவைகளை இராஜயோகி தன் வழிக்குக் கொண்டுவர முயல்கிறான். மேற் சொல்லியவைகளில் எது ஒன்றும் உத்தம வழியாகாது. கடைசியாகச் சொன்ன மார்க்கம்கூட நடுத்தரமானதே; இம் மார்க்கத்தில் தீராத போர் வந்து கிட்டும்; அடிக்கடி தோல்வியும், களைப்பும், ஆசாபங்கமும் உண்டாகும். இவைகளனைத்திற்கும் மாருக, ஆவேகம், வேட்கை, விருப்பம், முயற்சி முதலியன கலவாது, நேரே ஸஹஸ்ரதளத்தினின்று உறுதிச்சக்தி இயங்கினால், நாம் தூய (ரு) பரிபூரணத்வத்தையும் ஸித்தியையும் பெறக்கூடும். ஒவ்வொரு கருவிக்கும் அதற்கென் றேற்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தொழில் உண்டு; அவ்வாறே உறுதிக்கும் அதற்கென்று விதிக்கப்பட்ட கடமையும் உண்டு. உறுதி அல்லது தபஸ்-சக்தி எப்பொழுதும் ஈசுவரனுக்கு அடங்கி நடக்கும்; அது தானாகவும் தனக்குள்ளாகவும் இயங்கும் இயல்புடைத்து. அது மற்றெல்லாக் காணங்களையும் உபயோகப்படுத்துகிறது; ஏனைய காணங்கள் அதை உபயோகிக்கக்கூடாது.

ஞானத்தின் பொருட்டு உறுதியானது புத்தியை உபயோகிக்கிறது — கட்டளையின் பொருட்டன்று; புலனுணர்ச்சிகளுக்காக மனதை உபயோகஞ் செய்கிறது—ஞானம் அல்லது கட்டளையின் பொருட்டன்று; ஆவேகங்களுக்காக இதயத்தை உபயோகிக்கிறது—புலன், ஞானம், கட்டளை முதலியவைகளின் பொருட்டன்று பிராணனைப் போகாதிகளுக்காகப் பிரயோஜனப்படுத்துகிறது—வேறெதற்காகவும் அன்று; சலனம்

72 ೧211,N24B8 N24.1.2

கர்மம் முதலியவற்றிற்காக உடலைப் பயன்படச் செய்கிறது—ஞானம், புலன், சக்தி, போகம் முதலியவைகளை நிர்ணயிக்க அல்லது கட்டுப்படுத்த உடலை உறுதி உபயோகிக்காது. உறுதிச் சக்தி தனியாய் ஒதுங்கி யிருந்து மேற்சொல்லப் பட்ட காணங்களனைத்தையும் கட்டளையிட்டு, இட்ட கட்டளைப்படி அவைகளை நடக்கச் செய்ய வேண்டும். இவைகளனைத்தும் கேவலம் ஒரு யந்திரத்தின் பகுதிகளே; புருஷன் யந்திரி அல்லது யந்திரத்தை நடத்தும் தலைவன்; உறுதி அவனிடம் உள்ள யந்திரத்தை ஓட்டி நடத்தும் சக்தி அல்லது வைத்யுதமாகும்.

இதுவே உண்மையான ஞானம். இதை எவ்வாறு பழக்கத்தில் கொண்டு வருவதென்பதைப் பிறகு சொல்கிறேன். இது கேவலம் உபதேசத்திற்குமட்டிலும் உரியதன்று—இது அப்பியாசத்திற்கு உரிய விஷயம். நிலைபெயராத ஒரு சிறிதளவு தைரியத்தை (சு) யாவது உடையவன் உறுதியின் துணையினால் யந்திரத்தைத் தன் சொந்த ஆளுகையின் கீழ்க் கொண்டு வரச் சிறிது சிறிதாகப் பழகிக் கொள்ளலாம். இதைச் செய்து கொள்ள ஞானம் அவசியம்; யந்திரத்தின் இயல், அவன் ஓட்டி நடத்தும் சக்தியின் இயல், தன்சொந்த இயல் முதலியவற்றை இவன் நன்கு தெரிந்து கொள்ளுதல் அவசியம். தொடங்கும் பொழுதே பூரண ஞானம் அவசியமில்லை யாயினும், ஆரம்பத்திற்கு வேண்டிய சிறிதளவு ஞானத்தையாகிலும் பெற்றாகவேண்டும். இதையே நான் உங்களுக்கு உபதேசிக்க முயலுகிறேன். யந்திரத்தின் பல பகுதிகளைக் குறித்தும், அவைகளின் இயல், செயல் முதலியவைகளைக் குறித்தும், உறுதியின் இயலைக் குறித்தும், ஈசுவரனுடைய தன்மையைக் குறித்தும் முற்றிலும் இதன் பிறகு விளக்கிக் காட்டுவதாக இருக்கிறேன்.

(க) ஸஹஸ்ரதளம்—ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை எனப்படும் மனிதனிடமுள்ள மகோன்னத நாடி சக்கரம். (உ) கிரகணசக்தி—புத்தியின் ஒருபகுதியாகிய அறிந்து தெளியும்சக்தி. (ந) கர்த்தவ்யம்—செய்ய வேண்டிய காரியம்; அகர்த்தவ்யம்—செய்யக் கூடாத காரியம். (ச) சிற்றறிவு—அந்தம் அல்லது எல்லையில் அடங்கிய ஞானம்; "அனந்த ஞானம்" என்பது தமிழில் பேரறிவாகும். (ரு) பரிபூரணத்துவம்—முழுமை; ஸித்தி—முயற்சிப்பேறு. (சு) தைரியம்—என்பது இங்கு அறிவு, தெளிவு, உறுதி, அமைதி, திண்மைமுதலிய அனைத்தையும் ஒருங்கே குறிக்கின்றது. சாதாரணமாகத் தமிழில் தைரியம் என்பது திண்மை என்னும் ஒரு பொருளையே குறிக்கின்றது.

160199

கம்ப ராமாயணம்

—(o)—

(ஸ்ரீமான் வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதுவது)

ந. ராமாயணத்தின் ரசனைச்சுவை

ராவணவதத்தையே ராமாயணத்தின் வஸ்துவாக வால்மீகி பகவான் அமைத்தது போலவே கம்பனும் அமைத்திருக்கிறான் என்று சென்ற மாதத்தில் வெளிவந்த பகுதியில் கூறினோம். இவ் வஸ்துவின் ஒருமையைக் கம்பன் மறப்பதேயில்லை. முக்கியமான கட்டங்களி லெல்லாம் அவன் தனக்கும் படிப்போருக்கும் அதை நினைவுறுத்திக்கொண்டே செல்லுகிறான். பால காண்டத்தில் ராமனால் அடிபட்டுத்தாடகை விழும் போது அவள்,

.... தலை நள் தோறும்,
முடிஉடை அரக்கற்கு அந் நாள்
முந்தி உற்பாதமாகப்
படியிடை அற்று வீழ்ந்த
வெற்றி அம் பதாகை ஒத்தாள்,

என்று வஸ்துவை உபமானத்தின் வாயிலாகக் காட்டுகிறான். அவ்விதமே மந்தரையின் சூழ்ச்சியினால் கைகேயியின் மனம் கலைந்து மாறியபோது,

.... இமையோர்
மாயையும், அவர் பெற்ற நல்வரம் உண்மையாலும்,
ஆய அந்தணர் இயற்றிய அருந் தவத்தாலும்,
....
அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்

தூக்கவேதான் நல் அருள் துறந்தனள் அத் 'தூய்மொழி.' கடைசியாக ராவணன் போர்க்களத்தே பட்டு வீழ்ந்து கிடக்கையில் மந்தோதரி வந்து புலம்பும்போது, கம்பன் அவள் வாயில் இம் முத்தாய்ப்பை வைத்துவிடுகிறான். அஃதாவது:

காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேர் அழகும் அவர்தம் கற்பும்,
ஏந்து புயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பநகை இழந்த மூக்கும்,
வேந்தர் பிரான் தயரதனார் பணியினால்
வெங் கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடை முறையே புரந்தரனார்
பெருந் தவமாய்ப் போயிற்று, அம்மா!

அச்சம்பவங்கள் அனைத்தும் பளிங்குக் கற்கள் போல நின்று ராவண வதமாகிய மண்டபத்தைக் கட்டவே கருவியாக நிற்கின்றன என்பது கவியின் அபிப்பிராயம். எனெனில் ராவண வதம் இன்றி இந்திரன் சுயராஜ்ஜியத்தை அடைவது எங்ஙனம்?

இந்த வஸ்து ஒருமை உணர்ச்சி அயோத்தியா காண்டத்தி லிருந்துதான் உண்டாகிறது என்று ரசனை என்ற பகுதியில் கூறினேம்.

அயோத்தியா காண்டத்தினின்று கதை யானது மத்த கஜத்தின் நடையோடு, கங்காப் பிரவாகத்தின் கமனத்தோடு, ராவண வதம் வரை செல்லுகிறது. உபாக்கியானங்களுக்காக வேனும், மத்திராலோசனைக்காக வேனும் கதை நிற்கிறதே என்றால், அது இயற்கையை யொட்டியே அவ்வாறு நிற்கின்றது. வனராஜனான கஜேந்திரனும் அங்கங்கே ஆகாரத்துக்காக நிற்கிறான். அங்கங்கே இளைப்பாறுகிறான். கங்காநதியும் சமதடத்தில் வேகம் குறைகிறது. யமுனை முதலிய உபநதிகளின் நீரை ஏற்றுக்கொள்ளுகையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக் கண்டோர் வியக்கச் செல்லுகிறது. கிளை நதிகளையும் கால்வாய்களையும் நிரப்பிக் கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனால் ஆலசியமெல்லாம் அடுத்த கட்டத்தில் இரண்டு பங்கு வேகமாகச்செல்லுவதற்காகத்தான். கடைசியில் சமுத்திர ராஜனோடு கலப்பதற்கு முன் கங்காதேவியின் அழகையும் காம்பீர்யத்தையும் வாயால் வர்ணித்துச்சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானந்திக்கத் தரும் காட்சி யன்றோ கங்காதேவியின் சமுத்திர சங்கமம்! இத்தகைய வேகமும் ஓட்டமும் பொலிவும் இருக்கிறது கம்பராமாயணத்தில்.

அயோத்தியாகாண்ட ஆரம்பத்தில் சக்ரவர்த்தி ராமனுக்குத் தன் கையாலேயே முடி சூட்ட வேண்டும் என்ற கருத்துடன் மந்திரக் கிழவரை அழைத்து அனுமதி கேட்கிறான்.

ஊருணி நிறையவும், உதவு மாடு உயர்
பார் கெழு பழு மரம் பழுத்தற்று ஆகவும்,
கார் மழை பொழியவும், கழனி பாய் நதி
வார் புனல் பெருகவும், மறுக்கின்றார்கள் யார்?

ஆகையால் மந்திரக் கிழவர்களின் பிரதிநிதிகளாக நின்று வசிஷ்டனும் சுமந்திரனும் ராமனுக்கு முடிசூட்ட அரசனுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். எல்லாம் செவ்வனே நடந்தேறிப் பட்டாபிஷேகமும் அழகுபெற நிறைவேறும் என்று படிப்போருக்குத் தோன்றுகிறது. ஆனால் இல்லை.

இன்னல் செய் இராவணன் இழைத்த
தீமை போல்
தூன் அருங்கொடு மனக் கூனி

தோன்றிவிட்டாள். ராமனிடம் பரம பிரேமை செலுத்துவதாக நினைத்துவந்த கைகேயியின் மனத்தையும் கலைத்து விட்டாள். ஆகவே

தீய மந்தரை இவ் உரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின்!
ராவண வதத்தின் பீஜம் விதைத்தாகிவிட்டது.

விதை விழுந்ததும் என்ன வேகமாக வளரத் துவக்குகிறது! தசரதன் உயிருக்கே ஹானி வந்துவிடும் என்பதை அறிந்தும் கைகேயி அவனுடைய மனத்தை உடைத்துவிட்டு, தான் சொல்லி அனுப்பியதற்கு வந்த தாயென நினைவானை, ராமன் முன்னே கூற்றெனத் தமியளாய்த் தோன்றி,

'ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இருஞ் சடைகள் தாங்கித்
தாங்கு அருந் தவம் மேற்கொண்டு
பூழி வெங் கானம் நண்ணி,
புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழு இரண்டு ஆண்டின் வா என்று
இயம்பினன் அரசன்,'

என்றாள். தீரோதாத்தனான ராமனும் அப் பணியைத் தலைமேற் கொண்டு அப்பொழுதே அரணியம் போகத் தீர்மானித்துவிட்டான்.

ஆனால் ராமன்மாத்திரம் காட்டுக்குத் தனியே சென்றால் ராவண வதம் எவ்வாறு நடக்கும்? ஆகையால் வால்மீகி சீதையையும் ராமனோடுகூடக் காட்டுக்கு அனுப்புகிறான். வில்லாளரானார்க் கெல்லாம் மேலவனான இந்திரஜித்தனைக் கொல்லுவதற்கும் வேறொரு வீரன் இருந்தால்தான் ரசனை சோபிக்கும். ஆகவே லட்சுமணனும் ராமனோடு கூடக் காட்டுக்கு ஏகுகிறான். ஆனால் வால்மீகி கைகேயியினிடத்தில் ராமனுடன் லட்சுமணனையும் சேர்த்து அனுப்பி அவளுடைய கொடுஞ் சொற்களை அவன் உடனிருந்து கேட்கும்படிச் செய்கிறான். ரசனைதந்திர பாரங்கதனான கம்பன் அத்தகைய உடன் போக்கின் இழுக்கை உன்னி ராமனைக் கைகேயியின் முன்னே தனியே நிறுத்துகிறான். ஆகையினால் ராமனுடைய மகுடாபிஷேகம் நடக்கவில்லை என்ற செய்தி அவனுக்கு வெகு நேரம் கழித்தேதான் தெரிகிறது. ஆக, நம் கவி லட்சுமணனை,

கேட்டான் இளையோன்,
கிளர் ஞாலம் வரத்தினாலே
மீட்டாள் அளித்தாள்
வனம் தம்முனின், வெம்மை முற்றித்
தீட்டாத வேற் கண்
சிறு தாய் என, யாவராலும்
மூட்டாத காலக்
கடைத் தீயென மூண்டு எழுந்தான்,

என்று நாடகத்தில் தோற்றுவிப்பது போலத் தோற்றுவித்தல் சாத்திய மாகிவிடுகிறது.

இங்கு வால்மீகியின் ரசனைக்கும் கம்பனுடைய ரசனைக்கும் பேதத்தைச் சற்று ஆழமாகக் கவனித்தல் பயனுடையதாகும். வால்மீகியில் ராமன் தசரதனுடைய சன்னிதிக்கு வந்த பிறகு கஅ- சுலோகங்களால் என்ன நேர்ந்திருக்கலாம் என்று தனக்குள் தானே ஆலோசித்துக்கொண்டு கைகேயியைக் கேட்கிறான். என்ன என்று கேட்டபிறகு கைகேயி பழங்கதை யெல்லாம் சொல்லி விட்டு எட்டு சுலோகங்களால் நீ அரசன் வார்த்தையை நிறைவேற்றுவாயா என்று கேட்கிறாள். பிறகு, தான் வரங்களைப்பெற்ற வரலாற்றைக் கைகேயி சொல்லிக் காட்டுக்குப் போ என்று ஆஞ்ஞாபிக்கிறாள். ராமனுடைய பதிலும் வள வள என்றே யிருக்கிறது. இத் தகைய நீட்சியினால் கதை தொய்ந்துபோய்விடுகிறது. கம்பனிலோ ராமன் வருவதும், கைகேயி ஆணையிடுவதும், ராமன் ஒரு வார்த்தையில் மறுமொழி கூறிவிட்டு விடை பெற்றுக் கோசலை கோயில் போவதும் அதிவேகமாக, மிகக் கெடுபிடியாக, நடப்பதால் கதை நாணேற்றின வில்லைப் போல வன்மை யுடைத்தாய் நடக்கிறது. இன்னும் வால்மீகியில் சீதையையும் லட்சுமணனையும் அழைத்துக்கொண்டு ராமன் மூர்ச்சித்துப் போயிருந்த தசரதனிடம் மறுபடியும் விடை பெற்றுக்கொள்ள வருகிறான். இங்கேயும் அசுவபதி மகாராஜாவின் உபாக்கியானம் பிரவேசித்துக் கதையின் ஓட்டத்தைக் காலமில்லாத காலத்தில்தடுக்கிறது. தவிர, கைகேயியே மரவுரியை ராமனிடம் தருகிறாள். ராமன் சீதைக்கு அதை அணிவிப்பதைக் கண்டு வசிஷ்டர் தாங்கமாட்டாமல், தானும் மற்ற மந்திரிகள் முதலாயினோரும் சீதாராமர்களோடு காட்டுக்குச் செல்லுகிறோம்

என்று சொல்லி விட்டு, பிறகு சீதை ஆபரணங்கள் அணிந்து கொண்டாகிலும் போகட்டும் என்று சொல்லி முடிக்கிறான். இந்த அற்ப விஷயம் பிரவேசிப்பதால் கதை மகா காவிய லட்சணத்தை இழந்து விடுகிறது. தவிர ராமன் தசரதனிடம் கோசலையை ஒப்பிப்பது ஸ்வபாவீகமாக இருந்தாலும் இந்தப் பாகமே வால்மீகியில் சம்பந்தாசம்பந்தமின்றி ஊழற்று இருக்கிறது. கம்பனோ சுமித்திரையின் அரண்மனையில் ராம லட்சுமணர் இருக்கையில் கைகேயி அனுப்பிய சீரை வரும் படி செய்து அதினின்றும், பரிபூரண ரஸத்தைப் பிழிந்தெடுத்துத் தருகிறான். அனுப்பிய மாவுரியைக் கண்டு வெதும்பி,

யாணர்த் திருநாடு இழப்பித்தவர் ஈந்த எல்லாம்
பூணப் பிறந்தானும் நின்றான், அவை போர்வீலோடும்
காணப் பிறந்தேனும் நின்றேன் அவை காட்டு மின்!

என்று லட்சுமணன் கூறும் வாக்கியத்தின் இருதய பேதன துக்கம் படிப்போர் மனதில் சுரீர் என்றுதைக்கிறது. சீதாராம சம்வாதத்தைக் கம்பன் ஒழுங்குபடுத்தி நன்கு அமைத்திருக்கிறான். தவிர,

காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்
ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ?

என்று சொல்லிவிட்டு, தசரதனுடைய அரண்மனை வாயிற்படியைச் சார்ந்து அங்கு கூடியிருந்த தசரதனுடைய பத்தினிகளினிடத்தில் ராமன் விடை கேட்ட காலத்தில்,

எத்தினர் தம் மகனை; மருகியை
வாழ்த்தினர்; இளையோனை வழுத்தினர்;
'காத்து நல்குமின், தெய்வதங்காள்!' என்றார்:
நாத் தழும்ப அரற்றி நடுங்குவார்!

என்று சொல்லி ராமன் அயோத்தி நகர் நீங்கும் தன்மையை வர்ணிக்கும் தோரணை மிகவும் ரஸமாக இருக்கிறது என்று காவிய இலக்கண அறிஞர் கூறத் தக்கதாக இருக்கிறது.

ராமன் காட்டுக்குச் செல்லுகையில் யாத்திராதானம் செய்கிறதை வால்மீகி வெகு விஸ்தாரமாக வர்ணிக்கிறான். இந்த இடத்தில் கதையின் வேகத்தைக் குறைப்பது சரியாகவில்லை. ஆதலால் கம்பன் கதையை இத்தகைய வர்ணனையினால் நிற்கச்செய்யாமல் உரிய வேகத்துடன் செல்லச் செய்கிறான். இங்கே கம்பனுடைய கதை அசுவ கதியில் செல்லுகிறது. அதாவது கம்பீரமாயும் வேகமாயும் ஒரே மூச்சில் வெகுதூரம் செல்லுகிறது. பிறகு சிறிது நேரம் ஆசுவாசம் செய்து கொள்ளுகிறதற்காகக் குதிரை நிற்குமே அதுபோலச் சற்று விளம்பனமான வர்ணனைகளுடன் தேங்குகிறது. ஆனால் உடனே பழைய வேகத்துடனும் உக்ரத்துடனும் கிளம்பி வெகு தூரம் கட்டுக்கு அடங்காது போலச் செல்லுகிறது. இவ்வாறு,

விசையால் அனுங்க வடமேரு, வையம்
ஒளியால் விளங்க, இமையாத்
திசையானை கண்கள் முகிழா ஒடுங்க
நிறைகால் வழங்கு சிறையா

னை பெரிய திருவடியின் கம்பீரமான கமனத்தையும் ஐராவதத்தின் தாட்டியையுமே தனக் குவமையாகக் கொண்டு கம்பனுடைய அயோத்தியாகாண்டமானது ராமனைத் தண்ட காரணியத்தின் எல்லை வரையில் கொணர்ந்து சேர்த்துவிடுகிறது.

பரதனுடைய சம்பந்தம் கதைக்கு — ராமாயண கதை அனைத்துக்குமே என்று பொதுவாகவே சொல்ல வேண்டியது—உபாக்கியான சம்பந்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் உபாக்கியான சம்பந்தமாக இருந்தாலும், சம்பந்தம் எத்தனை நெருங்கியதாக இருக்கிறது! எவ்வளவு அழகாக இருக்கிறது! ராமனுடைய அரணியப் பிரவாசம் அயோத்தியா காண்டத்துக்கு ஓர் முத்தாய்ப்பைக் கொடுத்து விட்டது என்று சொல்லலாம். ஆனால் வால்மீகி பகவான் அம் முத்தாய்ப்புக்கும் ஓர் முத்தாய்ப்பு வைக்கவெண்டும் என்று விரும்பி மகா சாந்தனும் மகா சுத்தனும் பின் பிறந்தோர்களுக் கெல்லாம் பெரிதும் உத்தமனான, ஆதர்ச சகோதரனான, பரதனை அரங்கத்தில் பிரவேசிக்க விட்டிருக்கிறான். கம்பன் கதையையும் போக்கையும் அவனிடம் நின்று வாங்கிக்

கொண்டிருக்கிறான் என்பது உண்மையே. ஆனால் அவன் இந்தப் பரத பிரவேசத்தை வால்மீகியையும் விட மிக மிக அழகாக அமைத்திருக்கிறான். இந்த உபாக்கியானத்தை விஷய ஆராய்ச்சியில் விஸ்தாரமாக ஆராய்ந்தெழுதுவோம். இங்கு இதன் ரசனை அழகைப்பற்றி மாத்திரம்தான் குறிப்பிட வேண்டியது அவசியம்.

அயோத்தியா காண்டத்தில் கூஎ- வது சர்க்கத்தில் தசரதன் இறந்துவிட்டான் என்று கண்டதும் பிரஜைகளெல்லாம் வசிஷ்டனிடத்தில் அரசனில்லாமல் தாங்கள் க்ஷேமமாயிருத்தல் சாத்திய மில்லை என்று முறையிடுகிறார்கள். ஆனால் அம் முறையீடு தர்ம சாஸ்திரத்தில் சொல்லியது போலச் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழியக் காவியத்தில் சொல்லப்பட வேண்டிய ரீதியில் சொல்லப்படவில்லை. அதே மாதிரி கoரு-வது சர்க்கத்தில் ராமன் பரதனை எஎ- சுலோகங்களால் ராஜ்ஜியம் சரிவர நடக்கிறதா என்று விசாரிக்கிறான். இவைகளும் கoஅ, கoகூ-வது சர்க்கங்களில் வரும் ஜாபாலிராம சம்வாதமும் சம்ஹிதைக் குரிய வர்ணனைகளாக்குமேயன்றி காவிய அமைப்புக் கேற்ற வர்ணனைகளாகா. இதை யெல்லாம் பார்க்கும் போது,

நைவ வ்யாகரணஜ்ஞ மேதி பிதரம்,
ந ப்ஹ்ராதரம் தார்கிகம்,
'தூராத் ஸங்குசிதேவ கச்ச்ஹதி புநச்
சாண்டாலவத் ச்ஹாந்தஸாத்;
மீமாம்ஸாநிபுணம் நபும்ஸக மிதி
ஜ்ஞாத்வா நிரஸ்தாதரா
காவ்யாலங்காரணஜ்ஞ மேத்ய கவிதா
காந்தா வ்ரிணீதே ஸ்வயம்!

என்ற சுலோகம் நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் கம்பன் தன் கதையைக் காவிய மாகவே கருதி, சம்ஹிதைக்காரர்கள் சொல்லுவது போலச் சொல்லாமல், சுவைபட வகுத்தலையே தன் தர்மமாகக்கொண்டு தன் காவிய மாளிகையைக் கட்டியுள்ளான். வால்மீகியில் அயோத்தியாகாண்டத்தில் அஉ- வது சர்க்கத்தில் பரதன் சித்திரகூடத்தை நோக்கிப் போவதற்கு வழியெல்லாம் சீர்திருத்தி அமைக்க உத்தரவு செய்த பிறகு வசிஷ்டன் நீ பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினான். இது சம்பாவிதமாக இல்லை. இதிலெல்லாம் கம்பன் மிக மிக ஜாக்கிரதையாக இருந்து கதையைக் கொண்டுபோகிறான். தசரதனுக் காகவேண்டிய கருமங்களெல்லாம் செய்து முடித்தானதும் கம்பன் ஓர் மந்திரசபை கூட்டுவிக்கிறான். அதில் வசிஷ்டன் பரதனைப் பார்த்து நீ ராஜ்ஜிய பாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறான். பரதன் அரணியம் சென்று ராமனை அழைத்து வர வேண்டும் என்கிற தன்னுடைய நிர்ணயத்தை அந்தக் கூட்டத்தில்தான் முதல் முதல் தெரிவிக்கிறான். அங்கே வசிஷ்டனுடைய வாதத்திற்கெல்லாம் சமாதானம் சொல்லித் தன் நிச்சயத்துக்கு அவனையும் உட்படச் செய்த பிறகே வழிகளைத் திருத்த ஆஞ்ஞாபிக்கிறான். பரதனுடைய ராமபக்தியைப்பார்த்துக் கோசலை வருந்துவதாக எழுதுவது வால்மீகியின் கற்பனைத் திறத்தைக் காட்டுகிறது. ஆனால் கம்பன் அதை அங்கு காட்டாமல் யுத்தகாண்ட முடிவில் மீட்சிப் படலத்தில் காட்டுவதற்காக நிறுத்திக்கொண்டு தன் ரசனைத்திறமையை விளக்குகிறான். இன்னும், ராமனுடைய பர்ணசாலையைக் கண்டு பரதன் வேகமாகச் செல்லுகிறான் என்கிற வர்ணனைக்குப் பிறகு சீதையினிடம் ராமன்

---

* [இ—ள்] கவிதை என்னும் அணங்கு இலக்கண வித்துவானைத் தந்தை யென மதித்து அவனை அணுகாள்; தார்க்கிகனைச் சகோதரன் என்று பாவித்து அவனை நெருங்காள்; வேதாத்தியயனம் செய்தவனை(யும், சந்தத்தையே கவனிப்பவனையும்) விட்டுச் சண்டாளர்களிடம் நின்று ஓடுகிறவர்கள் போல ஓடியே போய்விடுகிறாள்; மீமாம்சையை ஆராய்பவனை நபும்ஸகன் என்று நினைத்து அவமதித்து விடுகிறாள்; காவியாலங்கார சாஸ்திரமறிந்தவனைக் கண்டதும் அவனையே தன் கொழுநனாகப் பாவித்து அவனைச் சேருகிறாள். வால்மீகியைச் சாமானிய கவியாக நாம் பாவிக்கவில்லை. உலகத்திலுள்ள முதல் எட்டு மகாகவிகள் என்று கணக்கிட்டு எந்த ஜாதி அறிஞர் எண்ணினாலும் அந்தக் கணக்கில் வால்மீகியின் பெயரைச் சேர்க்காதிருக்க முடியாது. எமது சொந்த அபிப்பிராயத்தில் உலகத்தின் ஒரு தனிக் காவியம் என்று சொல்லத்தகுந்தது கம்பராமாயணம் தான் என்றும், வால்மீகி ராமாயணம் அதற்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கும் என்றும் சொல்லுவோம். ஆனால் இங்கே வால்மீகி காவிய ரீதியை மறந்து சம்ஹிதை ரீதியில் இறங்குகிறான் என்பது எமது அபிப்பிராயம்.

சித்திரகூட பர்வதத்தை வர்ணித்துப் பேசிக்கொண்டிருப்பதாகக் கதையை வால்மீகி கொண்டு போகும் போக்கு சம்பாவித விரோதமாக இருக்கிறது. கதையின் வேகத்தையும் குறைக்கத்தகாத இடத்தில் அவ்வர்ணனை குறைக்கிறது.

இம் மாதிரி கட்டங்களில் கம்பன் அசுவ தாட்டியில் செல்வது வழக்கம். பரதனது சைனியம் வருவதைக் கண்ட லட்சுமணன் ஆவேசத்துடன் ராமனிடம்சென்று பரதனைத் தூஷிக்கிறான். ஆனால்,

> கால்தாக்க நிமிர்ந்து, புகைந்து கனன்று, பொங்கும்
> ஆறாக் கனல் ஆற்றும் ஓர் அஞ்சன மேகம் என்ன
> ராமன்,
> எனைத்து உள மறை, அவை இயம்பற் பாலன,
> பனைத்திரள் கர கரிப் பரதன் செய்கையே!
> அனைத் திறம் அல்லன் அ வல்லவன் : அது
> நினைத்திலை, என்வயின் நேய நெஞ்சினால்,

என்று முதலாய்ச் சொல்லிவிட்டுப் பரதன் ஜடாவல்கல தாரியாய்த் தானே நெருங்கியதும் லட்சுமணனுக்கு,

> தேர்ப் பெருந் தானையால் பரதன் சீறிய
> போர்ப் பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு!

என்று சுத்திக் காட்டிச் சொல்லுகிறான். அதற்குள்ளும் பரதன் வந்து ராமன் பாதத்தில் வீழ்கிறான். சீதைக்கு வனத்தின் அழகுகளைக் காட்டுவது போன்ற அகால விளம்பனங்களின்றிக் கதை ஸ்தாயிக்கு மேல் ஸ்தாயியாக ஆரோகணக் கிரமத்திலேயே செல்லுகிறது. தசரதன் சௌக்கியமா என்று ராமன் கேட்பதும், பரதனுடைய வார்த்தையைக் கேட்டதும் ராமனுடைய பிரலாபமும் மூர்ச்சையும், சக்ரவர்த்தியின் சரமக்கிரியைகள் ஆனதும் ராஜ்ஜியபாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி பரதராமர்கள் பரஸ்பரம் வேண்டிக்கொள்வதும், வசிஷ்டன் ராமனை வற்புறுத்துவதும், ராமன் யாதொன்றுக்கும் இணங்காது நிற்பதும், வீண் விவாதங்களின்றி மிகக் கெடுபிடியாக நடைபெறுகின்றன. ஜாபாலியின் அசந்தர்ப்பமான சம்வாதத்தில் கதையின் போக்குத் தேக்கெறிந்து போய்ச் சுவை கெட்டுப் போய்விடுகிறது. என்று கண்டு கம்பன் அவ் உபாக்கியானத்தை அறவே ஒழித்து விட்டான்.

ஆரணிய காண்டத்திலும் பின் காண்டங்களிலும் கம்பன் ரசனையை எவ்வளவு அழகாகச் செய்திருக்கிறான் என்பது அடுத்த சஞ்சிகையில் காட்டுவோம்.

பதினாயிரம் வருஷம் ஜீவித்திருக்கப் போவதாக எண்ணி நடவாதே. மரணம் உனக்காக எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறது. உடலில் உயிருள்ளபொழுதே நல்வினைசெய். உயிர்போயிலை பிறகு உனக்கு எதும் செய்யச் சாத்திய மிராது.

* * *

பிறர் நினைப்பதையும், சொல்வதையும் செய்வதையும் கருதாமல், தான் செய்வது நீதியும் சுத்தமும் பொருந்தியதா என்று மட்டுங் கருதுபவனை விட்டகலும் துன்பங்கள் பல! பிறருடைய துன்மார்க்கத்தை லக்ஷியம் செய்யாதே. நீ மாத்திரம் நெறியினின்று ஓர் மயிரிழையேனும் பிறழாதே.

மார்க்க ஔரேலியன்.

குவாலியார் கோட்டை

—(०)—

தற்பொழுது காணும் பாரத மக்களின் நரம்புகளுக்கு வீரவுணர்ச்சியைத் தந்து, நமது நாட்டின் பழம்புகழை விளக்கி நிற்கும் பல கட்டடங்களுக்குள், குவாலியார் கோட்டை ஒன்று. இதை எண்ணுவோர் கண் முன், இதில் பேர் பெற்றுவிளங்கிய மராட்டிய, அக்னிகுல, முஹம்மதிய வீரர்களின் படம் தோன்றாதிராது. இக் கோட்டை பல நீதி மன்னரால் அலங்கரிக்கப் பட்டது. இந்து, பௌத்த, ஜைன மதத்தினரால் போற்றப் பெற்றது. இதன்கண் ணுள்ள அற்புதமான சிற்ப வேலைகள் நமது பழைய சிற்பிகள் பெருமையையும், தற்காலத்தில் அந்தக் கலை அருகிய சிறுமையையும் காட்டும். சித்சார்த்தரின் கம்பீரமான சிலைகளும், மஹா வீரரின் திருச் சரிதையை விளக்கும் கல் வெட்டுகளும் நேரில் நின்று பேசுமே யாயினும், இவர்களுக்குள் வீரத்திருவான ராணி லக்ஷ்மீபாயி, நிகரற்ற சமர சிங்கனான தாந்தியாதோபி முதலியோரின் சிலைகளையும் கண்கள் தேடி நிற்கும். இங்கு மான் ஸிங் அரண்மனையில் ௬௦-அடிக்கு மேல் உயரமுள்ள உருவச் சிலைகளுமுள்ளன. பல மன்னர் மாபுகளும், வீரில் மன்னரும் வாழ்ந்த இக் கோட்டையின் சரிதையைச் சற்று ஆராய்வோம்.



குவாலியார் துர்க்கத்தில் ஸஹஸ்ரபாஹு மந்திரம்

இக் கோட்டை கட்டப்பட்ட காலத்தை ஆராய்ச்சி கூற முடியவில்லை. ஆயினும், ஸூரஜஸேனன் என்ற அக்னிகுல மன்னன் முதல் முதல் இதை ஆண்டதாகவும், அம் மன்ன

னின் குஷ்டரோகத்தை காலீபன் என்ற ஒரு சந்நியாசிமந்திரோதகத்தால் தீர்த்ததாயும், அந்தச் சந்நியாசிக்கு நன்றி காட்டவே இது குவாலியார் என்று அழைக்கப்பட்டதாயும், சாரணர் பாடும் ஒரு பாட்டின் மூலம் தெரியவருகிறது. இதன் கல்வெட்டு சாசனங்களினின்று சூரிய குல மன்னர் இதை ஆண்டிருந்ததாகத் தெரிகிறது. இதிலிருக்கும் சதுர்புஜமந்திரத்தில் செதுக்கப் பட்ட சாஸனத்தினின்று இது கன்னோஜி அரசரா

காலத்தில் வட இந்தியாவில் பல சுதந்திர ராஜ்ஜியங்கள் ஏற்பட்டன. வீரசிம்ஹன் என்ற தோமர வம்ச க்ஷத்ரியன் குவாலியாரை ஜயித்தான். அது முதல் கலி சஎ-வது நூற்றாண்டு வரையில் இக் கோட்டை தோமரவம்சகரிடமே யிருந்தது. இந்த வம்சத்தில் ப்ரஸித்தி பெற்றவன் மானஸிம்ஹ மகாராஜன். அவன் இறந்ததும் இக் கோட்டையை இப்ரஹீம் லோடி பிடித்தான் அவனிடமிருந்து முகலாயர் இதை வென்றனர்.



சிறிய ஸஹஸ்ரபாஹு மந்திரம்.

னும் ஓர் காலத்தில் ஆளப்பட்டதாகத் தெரிகிறது. பத்தாவது நூற்றாண்டின் முடிவில் வஜ்ரதமனன் என்ற நரபதி இதை ஆண்டனன். கலி சஙஙச-ம் ஆண்டில் அல்தாமாஸ்என்னும் துருக்கமன்னனின் கையில் பட்டது. தம் கோட்டை முகமதியர் கையில் படவே அதில் ஆண்டுவந்த அக்னி குலத்தரின் கற்பரசிகள் ஜோஹர் என்ற சப்தத்துடன் அக்னிப் பிரவேசம் செய்தனர். சரு00-ம் ஆண்டில் தீமூர் டில்லி ராஜ்ஜியத்தை வீழ்த்திய

பாபர் இதிலுள்ள சில கற்சிலைகளைப் பின்னப் படுத்தினன். ஹுமாயூன், ஷேர்ஷா முதலியோருக்குப் பின் அக்பர் இதனை ஆண்டான். இவன் காலம் முதலுள்ள முகலாயர் இதைக் காராக்கிரகமாக உபயோகித்தனர். ராஜ குமாரனை மூராத் இக் கோட்டையிலேயே சிறைப்பட்டிருந்தான்.

சஅஙகூ-ம் ஆண்டு முதல் இது மாட்டியர் வசமாகிவிட்டது. இதை ஆண்டவர் ஸிந்தியா

வம்சத்தவர். கலி சஅஅஉ-இல் பாப்ஹம் என்ற ஆங்கிலப்படைத் தலைவன் இதை பிடித்துச் சித்ர ஸிம்ஹன் என்ற சிற்றரசனுக்குக் கொடுத்தான். மறுபடி ஸிந்தியா வம்சத்தவர் இதைவென்றனர். இரண்டாவது மராட்டியப் போரில் மறுபடியும் ஆங்கிலர் இதனைப் பிடித்தனர். சகூ0எ-ம் ஆண்டு

செய்கையில் குவாலியார் கோட்டையை சகூருகூ-ஙுப முற்றுகை போட்டாள். அற்புதமான வீரவாழ்வு வாழ்ந்த இருபத்து மூன்றே வயதுள்ள இவ்வணங்கை எண்ணும்போது ரத்தம் துள்ளாத வீரரும் உலகத்தில் இருப்பரோ? நூற்றுக் கணக்கான போர்முனைகளில் வாகை



ஸஹஸ்ரபாஹு மந்திரத்தின் வாயில்

மறுபடியும் இது ஸிந்தியாவினுடைய கையில் கிடைத்தது.

ஜான்ஸி ராணியான், லக்ஷ்மீபாயி தன் ராஜாங்கத்தைப் பிள்ளையில்லாத சொத்தென்று கவர முயன்ற கிழ் இந்திய சங்கத்தோடு கடும்போர்

பெற்று, எதிரிகள் வியக்கும்படி பின்னும் பின்னும் தும்பை சூடி முடிவில் நிசியில் மோசமாக மானசிங் என்பவனால் காட்டிக் கொடுக்கப் பட்டு, தூக்குமரத்தில் ஏற்றப்பட்ட காலத்திலும் புன்னகையுடனேயே தன்உயிரை ஈந்த தாத்தியா தோபியும் குவாலியாரின் சரித்திரத்தோடு

தன் பெயரைப் பிணைந்து வைத்துவிட்டான்.

இத்தகைய பெருமை வாய்ந்த குவாலியாரில் பார்க்கத்தக்க பல சிறந்த சிற்ப வேலைகள் மல்கி இருக்கின்றன. இதற்கு நான்கு கற்களுக் கப்பால் ௬00 அடி உயரமும் சிற்ப கௌசலமு முள்ள மஹம்மது கௌஸின் சமாதி இருக்கிறது. ஜஹாங்கீரின் காலத்தில் கட்டின ஜும்மாமஸூதி யிருக்கிறது. மானஸிம்ஹ மஹாராஜ னென்ப



ஸஹஸ்ரபாஹு மந்திரத்தின் அதிசயமான சிற்றுளி வேலை

வன் தனது பிரியைக்காக கட்டியக் குஜரீமஹால் பார்க்கத்தக்கது. சதுர்புஜமந்திரம் என்பது மலையைக் குடைந்து கட்டப்பட்டிருக்கிறது. கோட்டை பிரவேச வாயிலில் உள்ள கல்வேலை பள் அற்புதமானவை. கல்லில் பெரிய பெரிய யானைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. வானை முட்டும் ஆறு ஸ்தூபிகளுள்ள மானமந்திரத்தின் அழகைச் சொல்ல வாயடங்காது. இன்னும் பல மந்திரங்கள் இக் கோட்டையை அலங்கரித்து நிற்கின்றன.

இவற்றுள் ஸஹஸ்ரபாஹு மந்திரத்தைப் படங்களில் காட்டியிருக்கிறோம். எல்லாவற்றிலும் இதன் வேலைத்திறம் மனத்தை மீளாது கவரக் கூடியது. அதே பெயருடைய சிறிய மந்திரமு மொன்றுண்டு. சிற்ப சாதுரியம் அபாரமாயிருக்கும் தோரண மந்திரம் என்று ஒன்று உண்டு.

இவற்றை மஹிபாலன் என்னும் அரசன் கட்டினான். இவை ௬00 அடி முதல் ௬௨ அடிகள் வரையில் நீளமுள்ளவை. பெரிய ஸஹஸ்ரபாஹு மந்திரத்தையும் அதன் ராஜவாயிலின் அழகையும் உள்ளேயுள்ள சிற்ப வேலையழகையும், தோரண மந்திரத்தையும், ஸஹஸ்ரபாஹு மந்திரத்தையும் படத்தில் காட்டியிருக்கிறோம் நமது முன்னோரின் திறத்தைக் காட்டும் இத் தகைய



தோரண மந்திரத்தில் காணப்படும் சிற்றுளி வேலைகள்.

அழகுருவான கட்டடங்களினின்று நமது பாரத நாட்டு வீரர்களுக்கும், சிற்பகலைஞர்களுக்கும் வேண்டிய ஆவேசம் பிறந்து நம் தேசத்தின் வீரமும் கலைகளும் ஓங்கி வளருமாக!

சங்கீதமும் இசை நூல்களும்

(ஸ்ரீமான் ரா. முத்தையர் எழுதுவது.)

———()———

தெள்விளிப்பாணித் தீந்தேன் செவிமடுத்த செல்வர்காள்!

எவற்றிற்கும் ஆதாரமாயிருக்கிற இவ்வுலகமானது ஐவகையான பகுப்புக்களின் முயற்சிகளுள் அடங்கி யிருக்கிறது. அவை சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பனவாம். இவற்றில் நாதத்தை முதல்காரணமாகக்கொண்ட சப்தத்தின் காரியமே சங்கீதமாகும். இங்கு நாதமென்பது நுட்ப ஒலியையும், சப்தமென்பது நாதத்தை விட கம்பீரமாய் செவிக்குப் புலப்படும் ஓசையையும் குறிப்பிடும். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளானவர் நாத மாத்திரையாய் உலகமெங்கும் பாலின் நெய் போல வியாபித்திருக்கிறார்.

சங்கீதமென்பது—ஸம்யதேநிகீதம், சங்கீதம்—நன்றாய் கானம் செய்யப்படுவது என்ற பொருளைத் தருகிறது. இரைசல், அலைவு, தும்மல், இருமல், ஈளை முதலியன யின்றி இயற்கை

யாக நாத மாத்திரையாய் உண்டாகும் சப்தமாவது சுருதியில் லயிக்கும் பொழுது கேட்போருக்கு தன்னை அறியாத ஆனந்தம் உண்டாகிறது. இப்படி எழுகின்ற ச்ருதி லயித்த தொனியை இராகங்களுக்குத் தகுந்த இசைகளாகச் செய்து அதோடு பக்தி, ச்ருங்காரம், வீரம், சோகம் முதலிய ரஸம் பொருந்திய கீர்த்தனை முதலானவைகளைப் பாடுவார்களானல் பாடுகிறவர்களும் ஆனந்தமடைவதோடு கேட்கிறவர்களும் அதன் வசப்படாதிருப்பார்களா! இந்தகைய சங்கீத வித்தையை ஓர் புலவர்

———இயல்பாய்

சுருதிலய சுரஞான நீதியொடு வீணையின்
தொனியின் நாதப்பிரமமாய்
துய்யதந்திரியோசை மிடறோசை யெனவேறு
தோன்றாமல் இன்ப ரசமாய்
தருமதுர அமுதரச மொழுகு ஸரளிகள் பழகு
சங்கீத வித்தை யென்றால்
சகலர்க்கும் ஆனந்தம் ———

என்றும் பிறவும் புகழ்ந்து கூறியுள்ளார். இவ்விதமாகப் பாடுகிறவர்கள் ஆனந்தப்பயன் அடைவதன்றி, கேட்கிறவர்களையும் மெய்மறந்த ஆனந்த சாகரத்தில் அழுந்தச்செய்வது இச் சங்கீதம் ஒன்றேயாகும்.

கர்ணுடக சங்கீதமே! வாழி—தற்கால நிலையில் மேல்நாட்டுக் கருவிகள் வந்தபிறகு உன் இயற்கைக் கருவிகளில் நுட்பமாகப் பழகாமல் நீக்கிவிட்டதுமன்றி, அது போன்ற பாடகர்களும் பெரும்பாலார் இல்லாததனுலும், உன்னை ஆதரிப்பார் இன்மையாலும், உன் சம்பந்தமான நூல்களை ஆராய்ச்சி செய்வார் பெரும்பாலார் இன்மையாலும், உன்னைக் கீழ்ப்படியில் தள்ளிவிட்டார்கள் என்று, நீ சந்தோஷத்தில் குறைவு அடையேல்—பாரதமாதாவானவள் எப்பொழுது தன் பொருளைத் தன்னதாக்கிக்கொண்டாளோ அப்பொழுதே நீயும் முன் நிலைமையை அடைந்துவிட்டாய் என்று எண்ணுவோம். நீநீடு வாழ்க.

பக்தி ரசம் பொருந்திய சங்கீதம் பாடும் பொழுது இதர கிரியைகளில் மனம், கண், முதலிய புலன்கள், நினைவு பார்வை முதலிய தொழில்களில் செல்லாதபடி ஒரே நிலையில் நிற்றலினுல் யோகாப்பியாசத்திற்கும் இதே பொருந்துமென ஆன்றோர் துணிபாகும்—தவிர தர்மார்த்தகாம மோக்ஷங்களுக்கு இஃதொன்றே சாதனமாகுமென்று சங்கீதரத்னுகரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

நால் வகை புருஷார்த்தங்களுள், இம்மையில் முதல் மூன்றையும், புகழையும், மறுமையில் வீட்டுலகத்தையும் நல்கும் உரிமை வாய்ந்த இச் சங்கீதத்தை, நிறைமொழிமாந்தர்களான ப்ருங்கி, நடேசர், ஆஞ்சினேயர், அகத்தியர், மதங்கர், தும்புருநாரதாதி முனிவர் முதலிய இவர்களால் ஓங்கி வளரச்செய்து பயனடைந்து வரப்பட்டது. இவர்கள் உபாசிக்கிறதற்கு முன் சங்கீதம் எங்கிருந்தது, யாவரால் வெளிக்கு வந்தது என்கிற அதன் பெருமையைச் சிறிது எழுதுவோம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் அர்ச்சுனனுக்கு உபதேசம் பண்ணின பகவத் கீதையில் பத்தாவது அத்தியாயம் ௨௨-வது சுலோகத்தில் "வேதாநாம் ஸாம வேதோஸ்மி"—அதாவது நான்கு வேதங்களுள் நான் ஸாமவேதமாயிருக்கிறேன் என்கிறர். இதனுல் தெய்வத் தன்மை பொருந்திய வேதங்களில் வைத்து ஸாமவேதமானது மேன்மையடைகிறது. இதில் சங்கீதமானது "ஸாமவேதாதிதம் கீதம் ஸம்ஜக்ராஹ பிதாமஹ:"—அதாவது ஸாம வேதத்திலிருந்து பிரமதேவன் சங்கீதத்தைக் கிரகித்தார். அச் சங்கீதத்திற்குப் பூர்வாசாரியார்கள் வரமுறையாக, வேதவியாசர் வேதங்களை முதலிடை

கடைகூட்டி ஒழுங்கு படுத்தியது போல, வகுத்து சுலோக சூத்திரங்கள் பூர்வமாக இலக்கண வரையறை செய்தனர். அந்நூற்கள் பெரும்பாலும் வடமொழியிலேயே இருக்கின்றன. ஆனல் தேன் மொழியாகிய தென்மொழியிலும் இசை நூற்கள் விளங்க யிருந்து வந்தன. அவைகள் காலவரையறையில் கையாளுவாரின்றி இம் மண்ணுலகம் நீத்து விண்ணுலகர் ஆராய்ச்சிக்கு சென்றன. அவைகளில் சிதைந்த பல சூத்திரங்களே தற்பொழுது கையாளக் கிடைத்துள்ளவை. அந் நூற்களை (வடமொழியிலும் தென் மொழியிலும் உள்ள நூற்களை) ஒருவாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவோம்.

சங்கீத ரத்னுகரம்— இது சாரங்க தேவரால் செய்யப் பட்டு கல்லி நாதருடைய அரும் பெருமை வாய்ந்த உரையோடுகூடினது. சங்கீத ராஜம்— இது கீத கோவிந்தம் இராக மாறுதலுக்காக கும்பகன்ன மகாராஜாவால் செய்யப்பட்டது. சங்கீத ஸாராம்ருதம்-- இது தஞ்சைமாநகர் துளஜேந்திர மகா ராஜாவினுல் இயற்றப்பட்டது. ஸ்வர மேள கலாநிதி-இது ராமாமாத்யரால் செய்யப்பட்டது. ராக தரங்கிணி— இது லோசனகவியால் செய்யப்பட்டது. ராக விபோதம்— இது சோமனுதரால் செய்யப்பட்டது. சதுர்த்தண்டிப்ரகாசிகா--இது வெங்கடமகியால் இயற்றப்பட்டது. இந்த சதுர்த்தண்டிப்ராசிகைக்கும் சங்கீத ரத்னுகரத்திற்கும் பல வேறுபாடுகளும் பல கடாவிடைகளும் ஏற்படும். இது போலவே ஏனை நூற்களையும் சோதித்தால் ஏற்படும்--அதனுல் விஷயம் முற்றுப்பெறுது விரிதல் பற்றி ஈண்டு சுருக்கி தக்க அமயத்தில் விரிப்பாம். இன்னும் சங்கீத மகரந்தம்--ராகார்ணவம்--சங்கீதபரரிஜாதம்— சங்கீததர்ப்பணம்— முதலிய நூல்களும் பிறவும் வடமொழியில் உளவாகும்.

இனிமேல் இன் மொழியாகிய தென் மொழியில் நின்று உலவியிருந்த இசை நூற்களையும் ஒருவாறு தொகுத்துக் காட்டுதும்.

(௧) அகத்தியம்—இது அகத்திய முனிவரால் இயற்றப் பட்டு கருத்தனுல் அகத்தியமெனப் பெயர் பெற்றது. இந் நூலில் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுக்கும் தொகுத்து இலக்கணம் கூறினர் அகத்தியர் என்பர். (௨) இந்திரகாளியம்—இது யாமளேந்திரரால் செய்யப்பட்டது. (௩) இசை நுணுக்கம்—இது அகத்திய முனிவர் மாணுக்கரான சிகண்டி* என்னும் முனிவரால் சயந்த குமாரன் என்ற சரகுமாரன் இசை அறிதற் பொருட்டு இயற்றப்பெற்றது. (௪) § பஞ்சபாரதீயம்—இது தேவரிஷியாகிய நாரத முனிவரால் செய்யப்பட்டது. (௫) பஞ்சமரபு—இந்நூல் அறிவனுர் என்னும் ஆசிரியரால் இயற்றப்பெற்றது. இன்னும் (௬) பெருநாரை (௭) பெருங்குருகு முதலியவும் பிறவும் நூற்கள் தலைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்ட இசைத் தமிழ் நூல்களாகும்.

இஃதன்றி தாள வகைகளை விரிவாக விளக்கும் தாளவகையோத்து என ஓர் நூல் இருந்ததென அதன் சூத்திரங்களால் தெரியவருகிறது.

கருவிகளும் நாடகமும்,

கீதம் வாத்யம் தத்ஹா ந்ருத்யம்
த்ரயம் ஸங்கீத முச்யதே"

என்கிறபடிக்குச் சங்கீதத்தின் பிரிவுகளாகும். அவைகளின் விஷயங்களைத் தனிமையாக எழுத வேண்டும். கருவி நாடக நூற்களின் ஆராய்ச்சியையும் அதன் விஷயங்களையும் குறித்து விரிவாக எழுதுவோம் என்ற எண்ணத்துடன் ஈண்டு விடலாயிற்று.

---

*. இப்பொழுது அகத்தியனுர் மாணுக்கர் பன்னிருவரின் தொகுதிக்குள் இவர் பெயர் காணப்படவில்லை. ஆராயத்தக்கது.

§ ௪, ௬, ௭, எண்களிட்ட நூற்கள் சிலப் பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முந்தியே காலஞ்சென்று விட்டன எனத்தெரிகிறது. ஏனை இசை நூற்களிலிருந்து ஆங்காங்கு வேண்டும் மேற்கோள்கள் அவரால் எடுத்தாளப்பட்டுள்ளன.

மேலே எடுத்துக் காட்டிய வடமொழி தென்மொழி இலக்கண நூல்கள் நிறையப்பெற்ற நமது சங்கீதத்தின் நிலைமை அக்காலத்தில் எங்ஙனமிருக்கலாம் என்பது எடுத்துச் சொல்லாமலே விளங்கும்.

உதாரணமாக யாழ்ப்பாண நாட்டிற்கு ராமாயணகாலத்திலேயே கந்தருவன் ஒருவனால் வீணை கானபுரம் எனப் பெயர் வைக்கப்பட்டது என்பது புராணக்கூற்றாகும். பிறகு அந் நாட்டை இலங்கைவேந்தன் ஒருவனை இசையால் மகிழ்வித்த கானவல்லோன் ஒருவனால் ஆளப்பட்டது. இராஜ ராஜபாண்டியன் காலத்தில் மதுரை மாது ஒருத்தியுடன் இசை வாது செய்ய ஈழநாட்டுப் பெண் ஒருத்தி வந்ததாகத் திருவிளையாடல் புராணம் கூறும். தவிர, வங்காளத்தில் கொடிய பஞ்சம் நேர்ந்த காலத்தில் ஓர் பெண்மணியானவள் மேகமல்லாரு என்னும் ராகத்தைப் பாடி மழையைப் பொழியச்செய்தாள் என்றும், அக்பர் சக்ரவர்த்தி காலத்தில் மயன்தான்கான் என்னும் சங்கீதவிற்பன்னன் இரவிற் பாடவேண்டிய இராகம் ஒன்றை பகலிற்பாடி அந்த இடமுழுவதும் இருள் மூடச்செய்தான் என்றும், உண்மைக் கதைகளும் பிறவும் கேட்டிருக்கிறோம்.

இந்தப்படி அக்காலத்தில் என்னபயனைக் கருதி அதற்குத்தகுந்த இராகத்தைப்பாடினால் அந்த ராகப்பயனை உடனே கொடுக்கக்கூடிய கற்பக விருக்ஷமான நமது இந்து சங்கீதமானது இக்காலத்தில் வலிகுன்றி வறுமையை அடைந்திருக்கிறது என்பது பிரத்தியேகம் சொல்ல வேண்டியதில்லை.

ஆதலால் அன்பர்கள் அனைவரும் தற்பொழுது கீழ்ப்படியிலிருக்கிற இசை நூற்களை ஆராய்ந்து நுட்பங்களை ஏனையோர் எளிதில் அறியும் வண்ணம் வெளியிடுவதோடுகூட சங்கீதத்திலும் பழகிக் கானஞ் செய்து ஆனந்தமடைவார்கள் என வேண்டுகிறேன்.

ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா எழுதுவது)

———()———

இரண்டாம் அத்தியாயம்

இந்திரடவன குஹை

இந்திரபவன குஹை குடையப் பெற்றிருந்த பர்வதம் இப்பொழுது இன்ன பெயரால் வழங்கி வருகிறதென்பதையேனும், ஒரு வேளை அப்பர்வதம் தன் மனோஹரமான கொத்துவேலையுடன் காலத்தின் கொடுமைக்குட்பட்டுப் பூமியின் கர்ப்பத்தில் விழுங்குண்டுதான் போய்விட்டதோ என்பதையேனும் அறிந்துகொள்ள இக்காலத்தே எவ்வகை ஸாதனமும் கிடைத்திலது. ஆனால் இந்திரபுரத்தின் வட புறத்தே ஒரு மலை இருந்ததென்பது உண்மை. அதன் கற்கள் மழமழப்பான கருநிறங் கொண்டவைகளாயிருந்தமையால், அதை இந்திர நீல பர்வதம் என்று சொல்வதுண்டு. அப் பர்வதத்தின் உதரத்தே பாரத வர்ஷத்தின் சிற்ப கலைக்காட்சி போலும் அவ் இந்திர பவனகுஹை விளங்கியது. புதிதாய்ப் பார்க்கிற ஒருவனுக்கு இவ் இந்திர நீல பர்வதம்

ஓரே பாறையால் அமைந்ததெனத் தோன்றும்; அவன் சற்று ஸமீபத்திற் சென்று பார்த்தால், அவ் வெண்ணம் உறுதியாகாமலிராது. விருக்ஷங்கள் இல்லாவிடில் பர்வதங்களுக்கு வனப்பில்லை என்று கூறுகிறவர்கள் இந்திர நீல பர்வதத்தைத் தரிசனம் செய்யும் பக்ஷத்தில், தங்கள் கூற்று பிழைபட்டதென ஒப்புக்கொள்ள வேண்டிவரும். இந்திர நீலகிரியின் மேல் வான்தோய் விருக்ஷங்களுமில்லை, சிறு செடிகளும் புதர்களேனும் இல்லை. ஆனால் இந்திர நீல பர்வதத்தின் கருமை தவழும் பிரதேசத்தை ஆங்காங்கு பசும்புல்லாகிய இரத்தின கம்பளத்தால் இயற்கை பிராட்டி அலங்கரித்திருந்தாள். விருக்ஷங்களின் குளிர்ந்த நிழல் சிறிது நேரம் வரையில்தான் இருக்கும்; ஆனால் இந்திர நீல பர்வதத்தில் குடைந்திருந்த இந்த குஹையிலே ஸதாகாலமும் நிழல் குடி கொண்டிருந்தது. இந்திர பவன குஹையானது இந்திர நீல பர்வதத்துக்கேயன்றி, அக்கம்பக்கத்திலுள்ள ஸமஸ்த பிரதேசத்துக்கும் ஒரு பெரும் அலங்காரமாய் இருந்தது. பர்வதத்தின் கீழ் நின்றுகொண்டு பர்வதமும் குகையுமாகிய இரண்டினதும் பக்கமாய் ஏக காலத்தில் பார்வையைச் செலுத்தினால், கருநிறக் கட்டழகியான 'பில்ல' யுவதியொருவள் கனத்த பச்சை நிறச்சேலையுடுத்து நாணமின்றி நகை புரிந்து நிற்பதுபோல் தோற்றும். பாரத நாட்டின் சிற்ப கலையானது எக்காலத்தில் உச்ச சிகரத்தை ஏறியிருந்ததோ அக்காலத்தை உணர்த்தும் ஒரு நிதர்சனமாயிருந்தது அவ் இந்திர பவன குஹை. குஹையின் பிரதான துவாரம் தெற்கு நோக்கி நின்றது. அதன் இருமருங்கிலும் கௌதம புத்தபிரானது தியானத்தில் அமர்ந்ததும் ஆஸனத்தில் அமர்ந்ததும் ஆகிய இரண்டு படிவங்கள் விளங்கின. அப் படிவங்களின் அடியில் நிர்மலமான நீர் சுரக்கும் சுனைகள் இருந்தன. கிழக்குப் பாரிசத்துச் சுனையிலிருந்து இந்திராயணி என்னும் நதி உற்பத்தியாகிறது. அச்சுனைகளினின்று சுரக்கும் நிறை நீரைக் கண்டு, இத்துணைத் தெளிந்த ஜலம் இந்தப் பாறைக்குள் எங்கிருந்து வந்ததென்று ஆச்சரியம் உண்டாகாமலிராது. படைப்பின் அற்புதங்களை உற்றுநோக்கி—அவற்றைப் பார்மார்த்திகமான உபதேசத்தின் பொருட்டுப் பயன் படுத்தி-அக்காலத்து பௌத்த ஜனங்கள், "இந்திர புரத்து தர்ம சூன்யமான ஜனஸமூகத்தைக் கண்டபோது பகவான் புத்தனுக்குத் துக்கமுண்டாயிற்று; அதனால் அவரது கண்களினின்றும் நீர் பெருகிற்று; அதினின்றும் இவ்விமல ஜலம் உற்பத்தியாயிற்று," என்று விசுவாச பூர்வகமாய்க் கூறுவர். குஹையின் குறுகிய வாயிலைக் கண்டவர் எவர்க்கும் அதன் பின்புறத்தே இவ்வளவு விசாலமும் அழகியதுமான ஸபாமண்டபம் இருக்குமென்னும் எண்ணம் உண்டாகாது. அவ் வாயிலை ஆயுதபாணிகளான துவாரபாலகர் காவல் செய்திருந்தனர். இந்திர பவனகுஹையின் பிரதான ஸபாமண்டபம் இன்று வெகு சிறப்பாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் மையத்தில் ஓர் உந்நதமான வியாஸ பீடம் போடப் பட்டிருந்தது. அதன் கண்ணே இராஜா அசோகனும், குமார வீதசோகனும், மந்திரி இராதாகுப்தனும் தம் தம் ஆஸனங்களில் வீற்றிருந்தனர். அசோகனது விசுவாசத்துக்குரியவரான நால்வரைவர் மெய்காப்பாளர் அசோகனுக்கருகே வியாஸ பீடத்தின் கீழ் உட்கார்ந்திருந்தனர். எஞ்சிய ஸபாமண்டபம் முழுவதும் வெறுமையாய்க் காணப்பட்டது. வியாஸ பீடத்தின்மேல் மற்றும் சில ஆஸனங்கள் வெறுமையாயிருந்தன. இராஜா அசோகன் யாருடைய வரவையோ எதிர்பார்த்திருந்தான். இதற்குள் அசோகன், "மோஹனா" என்று விளித்த சப்தம் ஸபாமண்டபத்தினூடே எதிரொலியிட்டுப் புறத்தேயுள்ள துவாரபாலகனது செவியில் நுழைந்தது. உடனே "என்ன உத்தரவு, மஹாராஜா?" என்று கேட்டுக்கொண்டே தலைகுனிந்து அஞ்ஜலிஹஸ்தனாய் மோஹனன் நின்றதைக் கண்டான் அசோகன்.

"கடிகாயந்திரத்தில் எவ்வளவு நேரம் ஆயிற்றென்று போய்ப் பார்த்துவா"

மோஹனன் போய்த் திரும்பிவந்து விடைபகர்ந்தான்— "மஹாராஜா, நாம் இங்கே வந்த பொழுது இரவு எட்டு நாழிகை ஆயிருந்தது அதன் பின் இரண்டு நாழிகை கழித்து இப்பொழுதுதான் மூன்றும் நாழிகை ஆரம்பமாயிருக்கிறது."

"இரவு பத்து நாழிகை ஆய்விட்டது; இது வரையிலும் அவர்கள் வரவில்லையே. ஏன்? மாதா புத்திமதிதேவியோ—" இதற்குள் சிறிய வாயினின்று "ராஜமாதா புத்திமதி தேவிக்கு ஜயம்" என்று காவற்காரர் உரத்த குரலில் கட்டியங் கூறும் துவனி கேட்டது. உடனே வெண்துகில் உடுத்த வயது சென்ற ஸ்திரீ ஒருத்தி தன் தீக்ஷண திருஷ்டியை நாற்புறத்தும் செலுத்திப் புன்னகையோடு மந்தகதியில் நடந்து, வியாஸ பீடத்தை நோக்கிவரலானாள். அவளது கம்பீரமான முகமண்டலம் நெஞ்சைப் பிளப்பதாயிருந்தது. அவளது முகத் தோற்றத்தின் அமைதி உள்ளுயிரை உருவிச் செல்வதாயிருந்தது. அவளது இதழ்களில் தவழும் புன்முறுவல் மிகக் கடோரமாயிருந்தது. அவளது அங்கங்களையும் தேகக் கட்டையும் உற்றுநோக்கினால், யௌவனப் பருவத்தில் அவள் ரூபவதியாய் இருந்திருப்பாள் என்று தோற்றும். ஆனால் கூடவே அவளது ஸௌந்தரியம் மோஹிக்கச்செய்யும் தன்மையை காட்டிலும் கடோரத்தன்மையையே அதிகமாய் வளர்ப்பதாகவிருந்தது. அவளது அதிகார தோரணையோடு கூடிய ஆண்தன்மை கொண்ட முகவிலாஸத்தை அவளது வெண்ணிறப் பல்வரிசையும், அவளது வெண்கூந்தல் கற்றையும், அவளது வெண்துகிலும் இன்னும் அதிகப்பயங்கரமாய்த் தோற்றச் செய்தன. அவளது வெண்கேசபாசத்தைத் தவிர்த்து, அவளை அதிக வயது சென்றவள் என்று தீர்மானிப்பதற்கு வேறு யாதொரு லக்ஷணமும் அவளிடத்தில் காணப்படவில்லை. மற்று இராஜமாதா புத்திமதி அப்படி அதிக வயதானவளுமல்ல. இராஜா பிந்துஸாரன் மரித்த நாள் தொடங்கி புத்திமதி தேவி ஆபரணங்களைத் தொடுவதுதானும் செய்திலள். அவள் ஸந்நியாஸினியின் கோலமே பூண்டிருந்தாள். ஆயினும் மாதர்களின் மென்மைக்குச் சோபை அளிக்கத் தகுதியற்றதாகிய அவளது தேஜஸ்ஸைக் கண்டால், அவள் ஸாதாரண ஸ்திரீ அல்ல வென்றே கூறவேண்டிவரும். இராஜமாதா புத்திமதியோடு கூடத் திடகாத்திரமுள்ள ஆயுதபாணிகளான பில்ல யுவதியர் நால்வர் வெண்துகில் உடுத்து ஸபாமண்டபத்தில் பிரவேசித்தனர். அவர்களுள் ஒருத்தியின் தோள் மேல் ஒரு கையை அமர்த்திக் கொண்டும், இன்னொருத்தியின் கையை மற்றக்கையால் பிடித்துக் கொண்டும் இராஜமாதா மந்த கமனத்துடன் ஸபாமண்டபத்து வியாஸ பீடத்தை நோக்கி நடந்துவந்தாள். அவளைக் காணலும் அசோகனும், வீதசோகனும், இராதாகுப்தனும் எழுந்து நின்று வழிபாடு செய்தனர். புத்திமதி தேவி கழுத்தை அசைத்து கர்வத்துடன் அவ்வழிபாடுகளை ஏற்று, தனக்கெனக் குறிப்பிட்டிருந்த ஆஸனத்தை நோக்கிச் சென்றாள்.

புத்திமதிதேவி ஆஸனத்தில் அமர்ந்த வண்ணமாய், "பெண்களா, இப்பொழுது ஆயுதம் தாங்கி நின்று கொண்டிருக்க வேண்டிய ஆவசியகம் இல்லை. இன்னும் இரண்டு நாழிகை வரை உங்களால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நீங்கள் இஷ்டம்போல் சுகமாய் உலாவித்திரியலாம். இரண்டு நாழிகை கழிந்ததும் நீங்கள் இங்கே தவறாமல் வந்திருக்க வேண்டும்; ஜாக்கிரதை," என்று கட்டளையிட்டாள். இவ்வார்த்தைகள் புத்திமதிதேவி வாயினின்று புறப்பட்டனவோ இல்லையோ, அந்தக்ஷணமே அவ்யுவதியர் மின்னற் கொடிகளைப்போல் சரேலெனப் பாய்ந்து ஸபா மண்டபத்திலிருந்து மறைந்தனர்.

ஆனால் அவர்களுள் ஒரு தருணி தன் கண்ணொடிப்பினால் மோஹனனை மயக்கித் தன்னோடு கூட்டிச்சென்றாள்.

அப்பொழுது போலியன்பை நடித்து புத்திமதி தேவி கூறினாள், "குழந்தாய் அசோக,நீ நிரம்ப இளைத்துப்போயிருக்கிறாய். யுத்தவியாபாரம் தன் பிரபாவத்தை உன் சரீரத்தின் மேல் காட்டிவிட்டதுபோல் தோற்றுகிறது."

"அம்மா, யுத்தத்தினால் என் சரீரத்துக்கு நன்மையே விளைந்திருக்கிறது. யுத்தம் எனக்கு அநுகூலமாகவே இருக்கிறது—"

இடையே தடுத்து இராதாகுப்தன்—" இவ்வுடம்பிளைப்பு யுத்தத்தினாலன்று, சிந்தையினால் உண்டானது," என்றான்.

இராஜமாதாவின் கண்களிலிருந்து தீப்பொறி பறக்க இராதாகுப்தன் மேல் துவேஷத்தைப் பொழிந்துகொண்டு கூறலானாள்— "என்ன சொன்னீர் சிந்தையினால் உண்டானதா! அசோகனைப் போன்ற பாலகனுக்குச் சிந்தை எப்படி உண்டாகும்? அவன் சிந்தைப்படுவதற்கு ஆவசியகம் என்ன? விருத்தராகிய நாம் இருக்கும் போது எதைப்பற்றி அவனுக்குச் சிந்தை உண்டாகவேண்டும்? மந்திரியாரே போர் நடக்கும் காலத்தில் நீர் பாசறையில் இருந்துகொண்டே போஜனம் அவ்வளவையும் கைகொண்ட மட்டும் வாரி வாரி விழுங்கி ஏப்பமிட்டு வருகிறீரே. வெறும் போஜன பட்டராய்த் தீர்ந்து விட்டிருக்கிற நீரல்லவோ சிந்தயை குத்தகை எடுக்க வேண்டும்?"

பிரதான மந்திரியின் மேல் இராஜமாதாவின் குரோதம் இவ்வாறு கொழுந்துவிட்டெறிந்து கொண்டிருக்கையில்,குஹையின் வாயிலண்டை "பிக்ஷு ச்ரேஷ்ட ஸம்புஷ்டாசார்ய மஹாதேசிகேந்திரன் வெல்க! போற்றி! போற்றி!" என்று கோலாஹலம் எழவே, மந்திரியின் மேல் பொழிய விருந்த புஷ்பவர்ஷம் நின்றுபோய் விட்டது. அரை நாழிகை வரையில் குஹாத் துவாரத்திலிருந்து ஸபாமண்டபத்துக்கு ஜனங்கள் வந்த வண்ணமாயிருந்தனர். முதலில் வெறுமையாகக் காணப்பட்ட ஸபாமண்டபம் இப்பொழுது ஜனக்கூட்டத்தினால் நிறைந்துவிட்டது. அரை நாழிகை வரையிலும் ஜனங்கள் அந்த நுழைவாயிலிலிருந்து ஸபாமண்டபத்துக்குள் வந்து கொண்டிருந்தபோதிலும்,வந்த ஜனங்களே மீண்டும் வந்து கொண்டிருப்பதாகப் புதிதாய்ப் பார்ப்பவர்க்குத் தோற்றும். அதே ஜனங்கள் மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருந்தபோதிலும், ஸபா மண்டபத்தில் மனிதரின் தொகை வளர்ந்து கொண்டு வந்தமை ஆச்சரியமே. தாடியும் மீசையுமற்ற அதே முகங்களும், மழுங்கச் சிரைத்துச் செழித்த மணற்காடு போல் ஒளிரும் அதே தலைகளும், அதே கைகளின் எலும்புக்கூடுகளும் அடிக்கடி நுழைவாயிலிருந்து ஸபாமண்டபத்துக்கு வந்து கொண்டிருப்பது போல் தோற்றியது. அவர்கள் அணிந்திருந்த மிதியடிகள் ஒரே மாதிரியாக இருந்தது மாத்திரமல்லாமல் அவற்றினின்றெழுந்த சடசட வென்னும் சத்தமும் ஒரே தாளவொத்துக்கு இசைந்திருந்தன. ஒருவர் தப்பாமல் எல்லோரும் காவியாடை அணிந்திருந்ததன்றி, எல்லோருடைய கைகளிலும் ஒரே விதமான கமண்டலங்கள் இருந்தன. புதிய ஆள் எவனாவது இவர்களது உருவங்களை ஒப்புநோக்குவானாயின், அவர்களுக்குள்ள பரஸ்பரபேதத்தை சீக்கிரத்தில் கண்டுகொள்ள முடியாது; ஒரே ஆள் அடிக்கடியும் வந்து கொண்டிருப்பதாகவே அவனுக்குத் தோற்றும். வாசகர்களே, இதுதான் பௌத்த பிக்ஷுக்களின் ஸங்கம். ஒவ்வொரு பிக்ஷுவும் கணக்கிட்டாற் போல் அடிமேல் அடியெடுத்து வைத்து வியாஸ பீடத்துக்கு எதிரில் வந்து நின்று, "அசோக மஹாராஜன் தர்மவிருத்தி காரியத்தில் வெற்றி பெறுக," என்று உரத்த குரலில் ஸ்பஷ்டமான

உச்சாரணத்துடன் ஆசி கூறித் திரும்பித் தனது ஆஸனத்தில் அமர்ந்தான். வெகு நேரம் வரையில் இதே கிரமம் நடைபெற்றது. கடைசியில் பிக்ஷுவர ஸம்புஷ்டாசாரியன் ஸபாமண்டபத்தில் பிரவேசித்தான். அவனது கரத்தில் ஒரு ஸ்வர்ணதண்டம் இலங்கியது. கேவலம் அவ்வொரு அடையாளத்தைக் கொண்டுதான் அவனை ஏனைய பிக்ஷுகளினின்றும் பிரித்தறிதல் கூடும். ஸம்புஷ்டாசாரியன் ஸபாமண்டபத்துக்குள் தனியே வரவில்லை. அவனோடு கூட அவகுண்டநம் (முக மூடி) அணிந்த ஒரு கோமளாங்கியான மங்கையும் இருந்தாள். ஸம்புஷ்டாசாரியனும் அக் கோமளாங்கியும் அந்யோந்யம் அளாவளாவுதலைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஆனால் இவள் யார்? இவள் இங்கே ஏன் வந்தாள்? ஸம்புஷ்டாசாரியன் இவளைத் தன்னுடன் ஏன் வைத்திருக்கிறார்? இத் தகைய கேள்விகளைக் கேட்க எவருக்கும் துணிவு உண்டாகவில்லையெனத் தோற்றியது. பௌத்த பிக்ஷுக்கள் ஜய ஜய வென்று விருது கூற, அசோகபூபதி நல் வரவாக ஏற்க, ஸம்புஷ்டாசாரியன் வியாஸ பீடத்தின் அருகே சென்றான். அவன் கம்பீரமான குரலில் அசோகன் மேல் ஆசீர்வாத மாரியை இடைவிடாமல் பொழிந்து, அசோகனால் காட்டப்பட்ட ஆஸனத்தில் அமரப்போகும் சமயத்தில், அங்கு பிரதான மந்திரி ராதாகுப்தன் உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடனே, வியாஸ பீடத்திலிருந்து கீழே இறங்கிவிட்டான். ஆசிமொழிகள் முழங்கிக் கொண்டிருக்கையில் இராஜமாதாவின் அருகில் போய் உட்கார்ந்திருந்த அக் கோமளாங்கியும் ஆசாரியனுடைய இச் செய்கையின் கருத்தை அறியாதவளாய்க் கீழே இறங்கலானாள். அவளுக்கும் அங்கே உட்கார்தல் இஷ்ட மெனத் தோற்றவில்லை.

தனது இவ் வாச்சரியகரமான நடத்தையினால் உண்டான திகைப்பைப் பிளந்துகொண்டு ஸம்புஷ்டாசாரியன் பேசலாயினான்— "மஹாராஜ, எம்போலியரான ஸம்ஸார விரக்தர்களைத் தாங்கள் இத்தகைய யுக்தாயுக்த விவேகமற்ற அதிவேசனத்து (கூட்ட நிகழ்ச்சி) க்கு அழையாமலிருப்பதே உத்தமம். அதர்ம மார்க்கத்திலே நடக்கும் நரபசுக்களின் நிழல்கூடப் படக்கூடாதென்னும் எண்ணத்தினால் நாம் மனிதர் வாழும் இடங்களிலிருந்து நீங்கி தூரத்தேயுள்ள வனங்களுக்குச் சென்று வஸிக்கிறோம். தாங்களோ எமக்கு இத்தகைய அதார்மிகரான மக்களின் கூட்டுறவாகிய மோஹத்தை உண்டாக்கி வைக்கிறீர்கள்."

அசோகனுக்குப் பேச இடங்கொடாமல் இராஜமாதா முன்னேறி மொழியலானாள்— "மஹாராஜ, எங்களால் என்ன பிழை நேர்ந்துவிட்டது? அதைத் தயவு செய்து கூறுங்கள். அதை இந்த க்ஷணமே நிவர்த்தி செய்கிறோம்."

ஸம்புஷ்டாசாரியன் இன்னும் அதிக ஆவேசத்துடன் பேசலுற்றான்—"ராஜமாதா, பகவான் கௌதமபுத்தன் எந்த வேதங்களைப் பழித்து எந்த வைதிக தர்மத்தையும் பொய் ஆடம்பரமென்று கடிந்துரைத்தாரோ, அவ் வேதங்களை ஓதுகின்றவனும், அவ் வைதிக தர்மத்தின்படி ஒழுகுகின்றவனும், எமது நிர்வாணப் பேற்றின் நெறியினை இகழ்கின்றவனும், தங்கள் மந்திரியுமாகிய இவன், பாடலிபுத்திர நகரத்தின் இக் களங்கம், மகத நாட்டு ராஜஸிம்ஹாஸனத்தைப் பிடித்த இந்த சனி, எமது தர்மபிரசாரத்துக்கு இடையூறு விளைக்கும் இந்த இராகு இங்கே என் பக்கத்தில் என் தோளோடு தோள் சேர்த்துச் சரிசமானமாய் உட்காருகிற பக்ஷத்தில், நாளை ஸம்புஷ்டாசாரியனது அதிகாரத்தின் மேல் விபரீதமான வியாக்கியானம் பாஷ்யம் முதலியனவும் தாராளமாய்ச் செய்வானல்லவா?" இதைக் கேட்டு ராதாகுப்தன், அசோகன் தடுத்ததையும் பாராட்டாமல் ஆத்திரத்தோடு மொழியலானான்-

"குருமஹாராஜ, நும்போலியரான காமக்குரோதாதி அரிஷட் வாக்கத்தை (அறுவகைப் பகைவரை) வென்ற முனிவர்களுக்கு இவ்வளவு வீண் கோபம் உண்டாவது அழகல்லவே!"

இராஜமாதா கடுகடுத்த குரலில் கொக்கரித்துக்கொண்டு, "மந்திரியாரே, பௌத்தர்களின் கூட்ட நிகழ்ச்சிக்கு வந்தது மல்லாமல், அவர்களால் உயிரினும் அருமையாய்க் கருதப்படும் * பிரதி-புத்த தேவனாகிய ஸம்புஷ்டாசாரியன் விஷயத்திலும் நீர் இப்படி பேசுவதைப் பார்த்தால், உம்முடைய உயிரை நீர் துரும்புக்கு நிகராய்க் கருதினீர் போல் தோற்றுகிறது, தெரிந்ததா?" என்றாள். பிக்ஷு சிரேஷ்டன்—

"உம்மிடத்தில் தூரதிருஷ்டியும், அடக்கமும், விவேகமும் சிறிதேனும் இருக்கும் பக்ஷத்தில், இந்த க்ஷணமே இந்த உச்ச ஆஸனத்திலிருந்து இழிந்து ஸபாமண்டபத்தில் மற்றையோருக்குச் சரியாக போய் உட்காரும்."

இடையிலே நிகழ்ந்த இந்த விவாதத்தை நிறுத்த வேண்டி அசோகன்—"இப்படி அக்கிரமமாகப் பேசி சிற்றப்பாவுக்கு மானஹானி உண்டாக்கவேண்டாம்; அவர் இந்த ஸ்தானத்தில் வீற்றிருப்பதற்கு எவ்விதத்திலும் தகுதியுடையவரே. ஆகையால் நானே அவரை இவ்விடத்தில் உட்காரவைத்தேன்" என்றான்.

இராஜமாதா—"அசோக, இந்த மயக்கம் உனக்கு எப்படி உண்டாயிற்று? புத்த தேவனுடைய பிரத்தியக்ஷ அவதாரமாகிய உன் குருமஹாராஜன் இவ் விதர்மியை ஸ்தான பிரஷ்டனாகும்படி ஆஜ்ஞாபிக்கிறார்; நீயோ அவனை பிரமாதமாய்க் கொண்டாடுகிறாய்."

அசோகன் "அம்மா, பிக்ஷுவரன் தன்னுடைய ஸித்தாந்தங்களையே ஸாரமற்றவைகளாகச் செய்யக்கூடிய ஆஜ்ஞையை ஒருகாலும் செய்யமாட்டான். நடுவுநிலைமை, நட்பு, ஜீவகாருண்யம் என்னும் உத்தம தத்துவங்களைப் போதிக்கும் புத்தபிரானிடம் அளவுகடந்த பக்தி பூண்ட எந்த பிக்ஷுவும் சிற்றப்பாவைப் போன்ற புண்ய புருஷனைப் பகைக்கமாட்டான். தர்மப்பிரசாரம் செய்வதையே லக்ஷ்யமாகவும் பிருதாகவும், தர்மத்தின் இனிய கனிகளது சுவை எல்லோருக்கும் ஒரே ஸமானமாய்க் கிடைக்கவேண்டு மென்பதையே பரம உத்தேசியமாயும் உறுதியான நிச்சயமாயும் கொண்ட பௌத்தராகிய நமக்குத் துன்பம் நிறைந்து துர்க்கந்தம் வீசும் தேகத்தைத் தாங்கிய மனிதன் கூட அத்தியந்தப் பிரியனாவான். அப்படியிருக்க, சிற்றப்பாவைப் போல் ஸாதுசீலனான ஸத்புருஷனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?"

அதன் மேல் ஸம்புஷ்டாசாரியன் அதிகாரத்தோடுகூடிய குரலில் பேசலுற்றான்—"மஹாராஜா, தங்களைவிட அதிகநாள் இவ்வுலகத்தில் நான் வாழ்ந்திருக்கிறேன். பௌத்த தர்மத்தின் தத்துவமும் அதன் ரகஸ்யமும் தங்களை விட அதிகமாய் எனக்குத் தெரியும். அவற்றின் ஞானத்தைத் தங்களிடத்திலிருந்து கிரஹிக்க வேண்டிய ஆவசியகம் எனக்கில்லை. என்னிடத்தில் தங்களுக்கு கௌரவம் இருக்கும் பக்ஷத்தில் கௌதம புத்தபிரானது தர்மபீடத்தினிடத்தே தங்களுக்கு மதிப்பு இருக்கும் பக்ஷத்தில், தங்கள் தர்மகுருவின் ஆஜ்ஞையை மிதித்துத் தேய்த்து விடலாகாதென்னும் எண்ணம் தங்களுக்கிருக்கும் பக்ஷத்தில் தங்களுக்கு மந்திரியினிடத்துள்ள இம் மயக்கத்தை ஒழித்துவிடுங்கள். அவனைக் கீழே ஸபாமண்டபத்தில் உட்காரும்படி கட்டளையிட்டு, இந்த வியாஸபீடத்தை நாம் வீற்றிருப்பதற்குத் தகுதியுள்ள தாக்குங்கள். பௌத்த ஸமாஜத்தில் உச்சஸ்தானத்தில் வீற்றிருப்பதற்குரிய அதிகாரம்—கௌரவம்—எம்போலியரான துறவிகளுக்கு அல்லது எமது

* பிரதிபுத்ததேவன்—புத்ததேவனுக்கு பிரதிநிதி.

மதத்தை அநுஸரித்துச் செங்கோலோச்சும் நம் போலியரான ராஜகுலோத் பந்நரான புருஷர்களுக்குத்தான் உண்டு. இந்த விஷயத்தை இராதாகுப்தனுக்கு நன்ருய் அறிவுறுத்தல் வேண்டும்."

ஸம்புஷ்டாசாரியனது பிரஸங்கம் முடிவதற்குள்ளாகவே, ஸபாமண்டபத்தில் நிரம்ப உச்சசப்தத்தில்—"மந்திரியாரைக் கீழே இறக்குங்கள்—இராதாகுப்தனைக் கீழே உட்கார வையுங்கள்." என்று கூக்குரல் கிளம்பிற்று. விருத்தனுகிய இராதாகுப்தன் சாந்த சித்தத்துடன் தன் ஆஸனத்தில் அமர்ந்தவாறே மேலே என்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டிருந்தான். அவனது சாந்தத்தைக்கண்டு பௌத்த பிக்ஷுக்களுக்குக் கோபம் இன்னும் அதிகமாய்ப் பற்றிக்கொண்டது. பௌத்த பிக்ஷுக்களுக்குள்ளே பலமாய்க் குழப்பம் உண்டாகலாயிற்று. க்ஷணத்துக்குக்ஷணம் அவர்களது கூக்குரல் மேன்மேலும் கடுமையாயிற்று. மந்திரியின் மேல் நாற்புறத்திலிருந்தும் வசை மொழிகளும் உறுக்குதலுமாகிய பெருமழை விடாமல் பெய்துகொண்டிருந்தது. ஸம்புஷ்டாசாரியன் இரௌத்திராகாரமாய் இராதாகுப்தனை அந்த க்ஷணமே தன் குரோதத்தீயினுல் சாம்பராக்கிவிடக் கருதினன் போலும் அவனை ஏறிட்டுப் பார்த்தவண்ணமாய் இருந்தான். விருத்த மந்திரி தன் ஆஸனத்தில் அமர்ந்தவாறே அறுவகைப் பகைவரை வெல்வோனுகிய இந்தச் சிறு பிள்ளையின் திருவிளையாடலைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இராஜமாதா பொங்கி யெழும் ஆவேசத்தோடு மந்திரியின் மேல் சீறி விழுந்து—"என்ன நடக்கிறதென்று உமக்குத் தெரியவில்லையா? ஸம்புஷ்டாசாரியன் மட்டும் உம்மைக் கீழே இறங்கிவரும்படி ஆஜ்ஞை செய்யவில்லை; ஸமஸ்த மகதராஜ்யமும் உமக்கு ஆஜ்ஞை யிடுகிறது," என்று கர்ஜித்தாள்.

மந்திரி இராதாகுப்தன் சாந்த பாவத்தோடு உத்தரம் சொல்லலானுன்-"அம்மா, மகதராஜ்யம் எது வரையில் பௌத்த பிக்ஷுக்களின் அதீநமாய்விடாமல் இருக்கிறதோ, மகததேசத்தின் இராஜமகுடம் மௌர்ய குலத்தினின்றும் அபஹரிக்கப்பட்டு பௌத்த பிக்ஷுக்களின் மொட்டைத் தலைகளின்மேல் எது வரையில் தரிக்கப்படாமலிருக்கிறதோ, மற்றும் மகதராஜ்யத்தின் ஸிம்ஹாஸனத்தில் பௌத்த பிக்ஷுக்களின் பாதுகைகள் எதுவரையில் மதிக்கப்படாமல் இருக்கின்றனவோ, அது வரையில் இந்த இராதாகுப்தன் எந்த பௌத்த பிக்ஷுவின் ஆணைக்கும் தலை குனிய வேண்டிய காரணமில்லை. அந்த பிக்ஷு ஸம்புஷ்டாசாரியனே ஆகுக, மற்றவராயினும் ஆகுக, மஹாராஜரே கட்டளையிடுகிற வரையில் நான் ஆஸனத்திலிருந்து விலகக் காரணமில்லை யென்றே யெண்ணுகிறேன்."

மீண்டும் ஸபாமண்டபத்திலே-"மந்திரியாரைக் கீழே இறக்குங்கள்," என்று பயங்கரமான இரைச்சல் உண்டாகவும், அக் காரியத்தை நிறைவேற்ற வேண்டி, நாலைந்துபேர் எழுந்து வந்தனர்.

அப் பாய்ந்துவரும் பிக்ஷுக்களை நோக்கி அசோகன் ஆஜ்ஞை செய்வானுயினன்—"ஜாக்கிரதை, ஓர் அடியாயினும் முன்னே எடுத்து வைக்கப் போகிறீர்கள்! மந்திரியாரை இந்த ஸ்தானத்தில் உட்கார வைத்தது நானே—ஆகையால் அவரை அங்கிருந்து இறக்கி அவமானப்படுத்த எனக்கிஷ்டமில்லை. அஸப்பியர்களைப் போல் கொக்கரிப்பதை நிறுத்திவிட்டு, அமைதியாய்ப்போய் உட்காரும்படி உங்களுக்கு நான் ஆஜ்ஞையிடுகிறேன். ஆசாரிய ஸ்வாமிகளே, இந்த ஆஸனத்தில் சிற்றப்பாவுடன் உட்காருவது தங்களுக்கு அவமான முண்டாக்கக் கூடியதென்று தோற்றினுல், அதன் பொருட்டு அவரை இவ் வாஸனத்தினின்று எழுப்புவதற்கு

யாதோர் ஆவசியகமும் இல்லை. தங்களுக்காக வேருேர் உச்ச ஆஸனம் இந்த வியாஸபீடத்துக்குப் பக்கத்திலேயே ஆயத்தம் செய்விக்கிறேன்.'

இனி அதிகமாய் இழுத்துப் பரித்துக் கொண்டு நிற்பதில் பயனில்லை யென்று இப்பொழுது ஸம்புஷ்டாசாரியனுக்கு நன்கு விளங்கிவிட்டது. அல்லாக்கால் அவனுக்குத்தான் பஹிரங்கமாய் கௌரவ ஹானி உண்டாகும். ஆகவே அவன் தன் இரௌத்திராகாரத்தை மாற்றிக்கொண்டான். முகத்தில் போலி மலர்ச்சியை உண்டாக்கிக் கொண்டு ஸம்புஷ்டாசாரியன் அசோகன் சொல்லிய யோசனை தனக்கு ஸம்மதமெனக்காட்டினுன். அந்த க்ஷணமே வியாஸபீடத்தின் பக்கத்தில் ஓர் உச்சாஸனம் ஆயத்தம் செய்யப்படவும், அதில் ஸம்புஷ்டாசாரியன் எழுந்தருளினுன். அவனோடு வந்திருந்த அக் கோமளாங்கியும் அதுவரையில் தான் எங்கே உட்கார்வதென்ற விசாரத்தோடு நின்றிருந்தாள்.

அசோகன் ஸம்புஷ்டாசாரியனை நோக்கி "ஆசாரியரே, தங்களுடன் கூட வந்திருக்கும் பிக்ஷுக்களின் திருக்கூட்டமும் அவ்யுவதியும் நம்பிக்கைக் குரியவர்கள்தானே? இங்கே நாம் மிக முக்கியமான ஒரு அரசியல் விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க வேண்டியதாயிருக்கிறது. அவ் விஷயம் மிக ரஹஸ்யமாய் இருக்கவேண்டுமென்பது என் விருப்பம்," என்றுன்.

ஸம்புஷ்டாசாரியன் கழுத்தை அசைத்துக் கொண்டே, "எவ்வித ஸம்சயமும் கொள்ள வேண்டியதில்லை. ஸந்தோஷமாய் ஆலோசனை நடத்தலாம்," என்று சொல்லிவிட்டு முகமூடி போர்த்த அக் கோமளாங்கிக்கு இராஜமாதாவின் பக்கியுள்ள ஆஸனத்தில் உட்காருமாறு ஸங்கேதம் செய்தான். நாலுபக்கத்திலும் நிச்சப்தம் நிறைந்திருந்தது. இராஜா அசோகன் இராஜமாதாவுக்கும் ஸம்புஷ்டா சாரியனுக்கும் அன்றைய அதிவேசனத்தின் (கூட்ட நிகழ்ச்சியின்) உத்தேசியத்தை எடுத்துக் கூறலாயினுன்:—

"நாம் கலிங்க ராஜ்யத்தை நமது அதீநம் செய்துகொள்ளும் பொருட்டு, பௌத்த மதத்தை ஆங்கு ராஷ்ட்ர தர்மமாகச் செய்யும் பொருட்டும், மகதநாட்டு ராஜகுடும்பத்தோடு கலிங்கநாட்டு ராஜகுடும்பத்தை விவாஹ ஸம்பந்தத்தால் ஒன்றுபடுத்தும் பொருட்டும், மற்றும் இம் முயற்சியில் உண்டான மானஹானிக்காகத் தண்டிக்கும் பொருட்டும் கலிங்கதேசத்துடன் போர் தொடங்கினேம். இன்றைக்கு மூன்று வருஷங்களாகின்றன இந்த வியவஹாரம் ஆரம்பித்து. மற்ற விடங்களில் நம் அதிகாரத்தை ஸ்தாபிக்காவிட்டாலும், கலிங்கநாட்டின் முகமாகிய இந்திரபுரத்தையே முதலில் கைபற்றுவோம்; பிறகு மற்றப் பிரதேசத்தை எளிதில் நம் அதிகாரத்துக்குள் கொண்டுவரலாமென்று கருதி, இந்திரபுரத்தை வீழ்த்தும்பொருட்டு அதைச் சுற்றிலும் முற்றுகையிட்டோம். கிட்டத்தட்ட நாலு மாஸகாலமாய் இக்காரியத்தில் முயன்று வருகிறோம். வெற்றி உண்டாகும் என்னும் ஆசை நாளுக்கு நாள் தூரப்போய்க் கொண்டிருக்கிறது. முதலில் அஸ்பஷ்டமாகவாவது அது தெரிந்துகொண்டிருந்தது; இப்பொழுதோ அது அடியோடு காணப்படுவதேயில்லை. முற்றுகையிட்ட ஸமயத்தில் எவ்வளவு சேனை இருந்ததோ அதில் காற்பங்குகூட இப்பொழுது போர்க்களத்தில் இல்லை. இந்த ஸைனிகர் அனைவரும் வீரர்களைப் போல் போர்க்களத்தில் உயிரைவிட்டாலும் பரவாயில்லை. ஆனுல் நமது பாசறையில் கொடிய கொள்ளைநோய் பிரவேசித்து, தினந்தோறும் ஆயிரக்கணக்கான வீரர்களைச் சூறையாடிவருகிறது. இங்கே யுத்தத்திலும் ஓர் அங்குல பூமியேனும் நமது அதிகாரத்துக்குள் வந்தபாடில்லை. அங்கே நமது அழிவு உண்டாக உண்டாகக் கலிங்கதேசத்து வைதிக சமயத்

இராஜமாதா—"மிருகேந்திரன் ஒரு அவமானமும் இழைக்கவில்லையென்பதே அசோகனுடைய எண்ணமானால், தர்மப்பிரசாரத்தின் பொருட்டு யுத்தம் செய்யலாகாது என்பதே அசோகனது தீர்மானமானால், அசோகன் இந்த யுத்தத்தைத் தானும் ஏன் ஆரம்பித்திருக்கவேண்டும்?"

"யுத்தத்தை ஆரம்பிக்கையில், அசோகன் தன் சொந்தக் கண்களைக்கொண்டு பார்க்கவில்லை. இது வரையில் அசோகன் இராஜமாதாவின் கண்களைக் கொண்டும், உபத்திரவிகளாகிய பிக்ஷுக்களின் கண்களைக்கொண்டும் பார்த்துவந்தான். இன்று வரையிலும், அசோகன் தன் சொந்தமாகிய கண்களிலிருந்து சிறிதேனும் பயனடையவில்லை. இக் காரணத்தினால் தான்; புத்தபிரானது பரம பவித்திரதத்துவங்களைக் களங்கப்படுத்துவனவும், மநுஷ்யத்தன்மைக்கே அடாதனவும், 'புல்லும் கல்லும் கண்டுருக'ச் செய்வனவுமாகிய குடில நீதிகள் அசோகன் வாயிலாக நடைபெற்று வந்திருக்கின்றன, இதன் பொருட்டு அவனுக்கு அத்தியந்தம் பச்சாத்தாபம் உண்டாயிருக்கிறது.'

இவ்வாறு மொழிந்து அசோகன் சிறிது அமர்ந்தான். மற்றும் அவனது உத்வேகம் இன்னமும் அடங்கவில்லை. மீண்டும் அவன் மொழியலுற்ருன்.— "வெறும் ஸந்தேஹத்தின் வசப்பட்டு நான் எத்தனையோ இராஜகுமாரரை வதம்செய்திருக்கிறேன். மானஹானி உண்டாய்விட்டதென்னும் புரளியைக்கிளப்பி அநேக ஜீவர்களைக் கோரமான யாதனைகளுக்கு உட்படுத்தினேன். தர்மப்பிரசாரமென்னும் போலிக்காரணங் கூறி எத்தனையோ இராஜ்யங்களைப் பாதாளத்தில் அமிழ்த்தினேன். பகவானே, இந்தப் பாதகங்களினின்றும் விடுபடுவதற்கு என்னென்ன யாதனைகளை நான் அநுபவிக்க வேண்டுமோ, அறிகிலேன்."

அசோகன் சற்று நேரம் விசாரத்தில் அமிழ்ந்திருந்தான். இராஜமாதாவின் கொந்தளிப்பு அப்படியே அடங்கிவிட்டது. பிக்ஷுக்களின் குழாம் "சாந்தம் பாபம்" என்று சொல்லப்போவதாயிருந்தது. ஆனால் ஸம்புஷ்டாசாரியனது மனதுக்கு மிக்க துர்த்தசை உண்டாகிவிட்டது. இப்படி எல்லோரும் நிச்சப்தமாயிருக்கையில், அவகுண்டனவதியாகிய (முகத்திரை அணிந்திருந்த) யுவதி இதுதான் ஏற்ற ஸமயமென்று கருதி ஸம்புஷ்டாசாரியனது செவியில் ஏதோ ஓதினாள்; ஆனால் வெகு சிலரே அதைக் கவனித்தார்கள்.

அசோகன் மறுபடியும் பேசலானான்--"அம்மா, தங்களுடைய தவிர்க்க வொண்ணாத அதிகார ஆசைக்கு இரையாகியும், ஆசாரியரே, தேவரீரது துராக்ரஹக் கோட்பாடுகளைக் கண்மூடித்தனமாய் நம்பியும், உத்தம பௌத்தர்களுக்குக் களங்கமுண்டாக்கத்தக்க காரியங்களை இதுகாறும் செய்துவந்திருக்கிறேன். இத்தனை நாளாக நான் கேவலம் உங்கள் திருஷ்டியைக் கொண்டே பார்த்துவந்தேன். ஆகையால் நான் என் பொறுப்பை முற்றிலும் மறந்தவனானேன். உங்கள் கட்டளையையே நிறைவேற்றிவந்தேன். ஆனால் இப்பொழுது அந்நாட்கள் போய்விட்டனவென்பதை நன்ருய் அறிந்துகொள்ளுங்கள். இந்த யுத்தத்திலே அற்பப்புழுக்களைப் போல் லக்ஷக்கணக்கான மனிதர் சங்கரிக்கப்படுவதைக் கண்டு அவர்களது இறுதிகாலத்து நெஞ்சைப் பிளக்கும்படியான கதறுதல்களைக் கேட்டுக் கேட்டு, இந்த நிஷ்காரணமான யுத்தத்தினால் வீரசூரரான என் ஸைனிகர்களின் அந்தியகாலத்து வேதனைகளையும் பார்த்துப்பார்த்து, இந்த கன்னெஞ்சனை கொடும்பாவியின் உள்ளமும் உருகிவிட்டது. என் அறிவில் ஸத்திய தர்மத்தின் ஒளி உதயமாய்விட்டது. அஹிம்ஸையே பரமதர்மமென்னும் தத்துவம் எனக்கு நன்ருய் விளங்கிவிட்டது. இனி இன்று முதல் தர்மத்தின் பவித்திரமான பெயரைச் சொல்லித்

தன் ஸஹோதரரை ஸர்வ நாசம் செய்யும் பொருட்டு அசோகனது வாள் உறையினின்றும் ஒருகாலும் வெளிப்படாது. நல்லது, நாளைக்கே மிருகேந்திரனுடன் ஸந்தி செய்துகொண்டு, பாடலிபுத்திரத்துக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன்."

இராஜமாதா இதைக்கேட்டு ஒன்றும் தோன்ருமல் சும்மா உட்கார்ந்திருந்தாள். அசோகன் பேசியது அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால் இன்று அசோகனுக்கு வந்த ஆவேசமே ஆச்சரியகரமாயிருந்தது. இன்று அசோகனுடைய தேஜஸ்ஸும் அத்புதமாகவே இருந்தது. அவனது ஜாஜ்வல்யமான தேஜஸினால் ஸ்வயம் ராஜமாதா கூடக் கணப்பொழுது திடுக்கிட்டுப் போனாள். என்ன சொல்லலாம், என்ன செய்யலாம், என்று நினைக்கக்கூட அவளால் முடியவில்லை. ஸபாமண்டபத்திலிருந்த பிக்ஷுக்கள் சித்திரம்போல் ஸ்தம்பித்துப்போய், அசோகனது தேதீப்யமான முகத்தை மிகுந்த ஆதரத்துடன் நோக்கியவண்ணமாய் இருந்தனர். ஸம்புஷ்டாசாரியனது இருதயத்திலோ உள்ளபடியே பெருங்கொந்தளிப்பு கூத்தாடத் தலைப்பட்டது. ஆனால் அவன்கூட அசோகனை எதிர்த்து மூச்சுவிடவும் துணியவில்லை.

வெகுநேரம் வரையில் ஒருவரும் ஒன்றும் பேசாதிருத்தலைக் கண்டு, அசோகன் பேசலுற்று —"என் வார்த்தை எல்லோருக்கும் ஸம்மதமாயிருக்கிறதென்று நான் இதிலிருந்து தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டபொழுது ஸபை முழுவதும் நிச்சப்தமாயிருந்தது. முக்காடிட்டிருந்த மங்கை ஸம்புஷ்டாசாரியனது செவியின் பக்கமாய் மறைந்து உதடுகளை அசைத்தாள். இப்பொழுது ஸம்புஷ்டாசாரியனுக்கு அதிகமான தென்பும் தெளிவும் உண்டாய்விட்டது. அவன் அத்தியந்த வினயத்தோடு அசோகனை நோக்கி—"மஹாராஜா, நான் கூறிய மார்க்கமே ஸத்திய தர்மத்துக்கொத்ததா, அல்லது தாங்கள் காட்டியவழியே சரியானதா என்பதைப்பற்றி வீண் வாய்விதண்டாவாதம் செய்ய வேண்டிய ஆவசியகமில்லை," என்று சொல்லி மிக்க காம்பீர்யத்துடன் மீண்டும் பேசத்தொடங்கி,—"இதுவரையில் எப்படி யுத்தம் நடந்து வந்ததோ, அப்படியே இன்னும் இரண்டு நாள்வரை நடக்கட்டும்; இன்னும் இரண்டுநாள் வரையிலும் ஸந்தியைப்பற்றிச் சிந்தியாமல் இருங்கள்: இன்னமும் அறுபது நாழிகைக்கு இந்திரபுரத்துப் போர்களத்தைவிட்டு அகலவேண்டாம். இந்தத் தவணைக்குள் தங்களுக்கு வெற்றி உண்டாய்விட்டால், நிரம்ப நல்லது; இல்லாவிட்டால் ஸந்தோஷமாய்த் தங்கள் இஷ்டப்படி ஸந்தி செய்துகொள்ளுங்கள்," என்ருன்.

"நான் இப்பொழுதுதான் தேவரீரோடு சொன்னேனே, இத்தகைய நிஷ்காரணமான நரஹத்தியின் பொருட்டு அசோகனது வாள் உறையினின்று வெளிப்படப்போவதில்லையென்று. இன்னும் அந்த வார்த்தைகளில் தங்களுக்கு விசுவாஸம் உண்டாகாதிருக்கும் பக்ஷத்தில்,—" அசோகனது வாயினின்றும் கம்பீரமும் நிச்சயமுமான வார்த்தைகள் புறப்படலாயின—"தங்களுக்கு அந்த வார்த்தைகளில் விசுவாஸம் உண்டாகாத பக்ஷத்தில், கௌதமபுத்தபிரானது விமலமான கீர்த்தியின் மேல் நான் சபதம் செய்து சொல்லுகிறேன், இனி தர்மப் பிரசாரத்தின் பொருட்டு இந்த அசோகனது வாள் மரணபரியந்தம் உறையினின்று வெளியே கிளம்பாது. தர்மப்பிரசாரத்தின் நிமித்தம் அசோகன் மரணபரியந்தம் யுத்தம் செய்யமாட்டான். இன்றோடு அசோகனது தர்மவெறியின் அவதாரம் முற்றிற்று என்று அறிந்துகொள்ளுங்கள்; தர்மப்பிரசாரயுத்தம் நின்று போய்விட்டதென்றும், தர்மத்தின் பொருட்டு விளையா நின்ற மாநுஷத்தன்மைக்கடாத பிராணவதம் முற்றுப் பெற்றதென்றும் அறிந்துகொள்ளுங்கள். ஆசாரியஸ்வாமி

களே, இன்னமுங்கூடத் தேவரீர் சண்டைச் செய்திகளை ஏன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? அசோகன் இப்பொழுது கேவலம் தன் சித்த சுத்தியின்பொருட்டே தர்மநிமித்தம் நிகழாநின்ற இந்த யுத்தத்தின் சென்றகாலத்து அபவித்ர மான இதிஹாஸத்தைப் படிப்பான்."

முகத்தை மூடியிருக்கும் திரையினின்று கூட ஆந்தரிகமான மனக்கிடக்கையை அறிந்து கொள்ளும் ஆற்றல்கொண்ட பார்வையை அவ குண்டனவதியான அணங்கின் மீது செலுத்திக் கொண்டே ஆர்வத்தோடு ஸம்புஷ்டாசாரியன் —"கேவலம் இரண்டே நாள் மட்டும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன்," என்றான்.

அதிக வைஷம்யம் வளராதிருக்கும் பொருட் டும், ஐகமத்யம் உண்டாக்கவேண்டியும் மந்திரி இராதாகுப்தன் கூறலுற்றான்,— "மஹாராஜ, ஆசாரியஸ்வாமிகள் சொல்வதைத் தாங்கள் ஆத ரத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்று முதல் யுத்தத்தில் சேர்ந்திருக்கத் தங்களுக்குப் பிடிக்கவில்லையானால், ஸேநாபதியின் பதத்தை ஸம்புஷ்டாசாரியரே அலங்கரிக்கட்டும். அல்லது வேறெவருக்காவது அளிக்கட்டும். இன்னும் இரண்டு நாளைக்கு ஸந்தி செய்யவேண்டாம். ஸம்புஷ்டாசாரியர் இந்த நாட்களிலே எப்படி வெற்றிப்பெறுகிறார் பார்ப்போம். யுத்த விஷயம் மிக ரம்யமானது. அதில் சிறிதேனும் இந்த பிக்ஷுஜனங்கள் கற்றுக்கொள்வது நிரம்ப நல்லதேயாம்."

அசோகன்— "நாளை காலை முதல் மறு நாள் மாலை வரையில் என் ஸைந்யம் முழுதும் ஸம் புஷ்டாசாரியாது ஆணைக்கடங்கி நடக்கவேண்டி யது. நாளைக்கடுத்த நாள் சூரியாஸ்தமன மான வுடனே யுத்தம் முற்றுப்பெறவேண்டும்."

ஸம்புஷ்டாசாரியன் அதிக இறுமாப்புடன் கூறினான்,—"அப்படி முற்றுப்பெற்றதும் இந்திர ப்ரத்தின் மதிற்சுவரின்மேல் பாடலிபுத்திரத்தின் வெண்பதாகை ஸந்தேஹமின்றிப் பறந்து கொண்டிருக்கும்."

அசோகன் ஆஸனத்தினின்று எழுந்து ஸம் புஷ்டாசாரியன் பக்கம் பரிதாப சூசகமான பார் வையைச் செலுத்திக்கொண்டே நாலு மாதங் களில் எம்மால் ஆகாத காரியத்தைக் கேவலம் இரண்டே தினங்களில் செய்து விடுவதாகப் பெருமை கூறுவது இராஜ வீரர்களின் வேலை யன்று. தேவரீரைப் போன்ற ஆசாரிய புருஷர் களுக்கே அது தகும்," என்றான்.

அவகுண்டனவதியான அங்கனையின் பக்கம் ஆனந்தமாய்ப் பார்த்துக்கொண்டே ஸம்புஷ்டா சாரியன் கூறினான்— "மூன்று வருஷம் நாலு மாஸம் இரவும் பகலும் தலைகீழாய் முயன்றும் முடியாத அக் காரியத்தை—கலிங்க நாட்டை வெற்றிக்கொள்ளும் காரியத்தை— இந்த ஸம் புஷ்டாசாரியன் இரண்டே நாளில் முடித்துக் காட்டுவான்! அதிக தடபுடல் செய்வது வீண்! மஹாராஜாவுக்குச் சீக்கிரத்திலேயே என்னுடைய வார்த்தைகளில் விசுவாஸம் உண்டாகும்."

ஸம்புஷ்டாசாரியன் பேசிய தவ்வளவும் ஸார மற்றதாய் இருந்தபடியால், அதற்கு உத்தரம் அளிப்பது அநாவசியமெனக் கருதி அசோகன் இராதாகுப்தனது கையைப்பற்றிக்கொண்டு பரி வாரஸஹிதமாய்த் தன் பாசறையை நோக்கிப் புறப்பட்டான்.

ஸம்புஷ்டாசாரியனது வார்த்தையைக் கேட்ட திலிருந்து பிக்ஷுஸங்கத்தில் தோன்றிய ஆச்சரி யம் இன்னும் அடங்காமலே இருந்தது. இராஜ மாதாவும் ஆசாரியனது ஆச்சரியம் விளைக்கும் வார்த்தைகளைத் தனக்குள்ளேயே ஆராய்ந்து கொண்டிருந்தாள். இளங்கோ வீதசோகனும் இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு பிர மித்துப்போய் உட்கார்ந்திருந்தான்; இந்த விடு

கதைகளின் அர்த்தம் ஒன்றுமே அவனுக்கு விளங்கவில்லை போலும். ஆனால் ஸம்புஷ்டா சாரியன் என்ன திறமை தனக்கிருக்கிற தென்று நம்பி இவ்வளவு ஆர்ப்பாட்டமாய்ப் பேசினான் என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. இராஜமாதா அதைக் கேட்டுத் தெளியவேண்டியது இன்றி யமையாததாய் விட்டது. அவள் தாமஸிபாமல் உடனே ஸம்புஷ்டாசாரியனைக் கேட்டாள்—

"நாளை ஸேநாதிபத்யத்தைத் தேவரீர்தான் வஹிக்கப்போகிறதோ?"

"ஓம்."

"இன்னும் இரண்டு தினத்தில் வெற்றியும் அடையப்போகிறீர்கள்?."

"ஓம்."

இராஜமாதாவுக்கு ஆச்சரியம் பன் மடங்கு அதிகமாயிற்று. இப்பொழுது ஆசாரியன் என்ன முடிவு பண்ணப் போகிறார் என்பது தெரிய வேண்டி, பிக்ஷுக்கள் கூட்டங் கூட்டமாய் ஸம் புஷ்டாசாரியன் பக்கத்தில் வந்து சேர்ந்தனர். ஆசாரியனது மௌன விரதம் அப்பொழுதும் குலையவில்லை.

"இரண்டு நாளைக்குள் நிச்சயமாய் வெற்றி கிடைக்கு மென்று தேவரீருக்கு விசுவாஸம் இருக்கிறதா?."

"ஓம்."

"யுத்தஞ்செய்தே வெற்றி பெறுவீர்களோ?."

"சூழ்ச்சியும் யுத்தமும் ஆகிய இரண்டின் சகா யத்தையுங் கொண்டு வெற்றியடைவோம்."

"ஆசார்ய,எம்மை எவ்வளவு காலம் வரையில் சந்தேகத்திலும் ஆச்சரியத்திலும் வைத்திருக்கப் போகிறீர்கள்? தேவரீர் வெற்றியின் பொருட்டுக் கைக்கொள்ளப் போகும் ஸாதனம் எங்களுக்குத் தெரியவரும் பக்ஷத்தில் — " இராஜமாதா இவ் வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே, அவ் அவ குண்டனவதியாகிய ரமணி தன் முகத்தை மூடி யிருந்த சிலையை விலக்கினாள்.

இராஜமாதாவும் பிக்ஷுக்களின் குழாமும் அவ் யுவதியைக் கண்டு மலைத்துப் போயினர்.

ஸம்புஷ்டாசாரியன் அவ் யுவதியைச் சுட்டிக் காட்டி "நமக்கு உண்டாகப்போகிற வெற்றிக்கு உபாயம் இவளே. இவளே நாம் செய்யப் போகிற சதியாலோசனைக்கு ஆதி பீஜம்."

இதன் பின் ஸம்புஷ்டாசாரியன் கூறிய அனைத் திலும் இராஜமாதாவுக்கு நம்பிக்கை உண்டாய் விட்டது. அவகுண்டனவதியாகிய மாதாள் கலிங்க நாட்டின் மந்திரி விசாகதத்தனது ஏழாம் பத்தினி.

அவளைக் கண்டவுடனே —"வெற்றி எவ்வாறு அடைவீர்கள்?." என்னும் பிரச்ந பரம்பரையி லிருந்து ஸம்புஷ்டாசாரியன் முக்தி யடைந்தான்.

அவ்வமயத்தே ஸம்புஷ்டாசாரியனை அனைவரும் போற்றி ஜய கோஷம் செய்தனர்.

அடிமைகளே! அறியீர்களா? விடுதலை விரும்புபவர் தாமே அதற்கான வேலை செய்ய வேண்டும்.

* * *

தேசபக்தி இல்லாதவனுக்கு வேறெதிலும் பக்தி இருக்க முடியாது.

"பைரன்."

51

ஆலோகன அவலோகனம்

—— (*) ——

தமிழ்க் குருகுலம்

இக் குருகுல சம்பந்தமானச் சில பிரசினைகள் ஸ்ரீமான் ப. வரதராஜுலு நாயுடு அவர்களால் எழுப்பப் பட்டுப் பல சமாசாரப் பத்திரிகைகளில் விவரிக்கப் பட்டுவருகின்றன. நமது 'பாலபாரதி'யானது வாரப் பத்திரிகைகள் தினசரிகளைப் போன்ற சமாசார பத்திரிகையன்று. இதிகாசரீதியாகவும் சித்தாந்தரீதியாகவும் ஹிந்து ஜாதியின் பாகுபாடுகளைப்பற்றி நடுநிலைமையில் நின்று எழுதிவர இருக்கிறோமாலும், எம்மால் முடிந்த அளவிற்கு இப் பத்திரிகையை ஜாதீய வாக்குவாதங்களுக்கு நிலைக்களமாக ஆக்கவேண்டாம் என்று இவ் விவகாரத்தை ஒதுக்கிவைக்கிறோம். ஆகையால் இதில் எம்முடைய கக்ஷியை ஆமோதித்து எழுத விரும்பும் அனேக நண்பர்களின் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாமைபற்றி எம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுடைய அன்புக்கு எமது நன்றியைச் செலுத்துகிறோம். ஒன்று மாத்திரம் பரத்துவாஜ ஆசிரமம் பகிரங்கமாய்த் தெரிவிக்க விரும்புகிறது. இங்கே குருகுல வித்தியாலயத்தில் தமிழ்பேசும் அல்லது தமிழில் கல்வி கற்க விரும்பும் அனைவரும்—ஹிந்துக்கள் முஸல்மான்கள், கிறிஸ்தவர்கள், ஸவர்ணர்கள், அவர்ணர்கள் ('தீண்டாதார்') என்கிற பேதமின்றி—சேர்ந்து சமமான கல்வி கற்கலாம். ஆகாரத்தில் திருஷ்டிதோஷம் பார்க்கப் படுகிறதில்லை. சேர்ந்து உண்ண எல்லோருக்கும் அனுமதி இருக்கிறது. உபாத்யாயருள் யாருக்கும் எந்த வகுப்பினருடனும் உண்ணுவதற்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் எந்தத் தந்தையர் தங்கள் குழந்தைகள் தனியே சாப்பிடவேண்டும் என்று தெரிவிக்கிறார்களோ அந்தத் தந்தையரின் குழந்தைகளுக்குத் தனியே உண்ணக் கூடியவரை வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது. வேதமந்திரங்களை வேதமறிந்தவர் உபநயனம் பெற்ற துவிஜர்களுக்குத் தான் உபதேசிப்பார்களாதலால், ஹரித்துவார குருகுலத்தில்போல மாணவர்களனைவருக்கும் துவிஜன்ம சம்ஸ்காரம் செய்விப்பதைப் பற்றிப் பரத்துவாஜ ஆசிரமம் பெரியோர்களோடு கலந்தும் தானே சிரத்தா பூர்வமாக ஆலோசித்துக் கொண்டும் வருகிறது.

ஒருமைப் பிரயோகங்கள்

கம்பன், வால்மீகி, முதலிய மகனீயர் விஷயத்தில் நாம் ஒருமையைப் பிரயோகிக்கிறோம் என்று சிலர் நம் மீது குறை கூறுகின்றனர்.

குறை கூறுபவருக்கு இம்மகான்களிடத்து எவ்வளவு பக்தியும் மதிப்பும் இருக்கிறதோ அதற்கு நம்முடைய பக்தியும் மதிப்பும் எள்ளளவும் குறைந்ததில்லை என்று கூறுவோம். இவ்வுலகத்தை வெகு காலங்களுக்கு முன் நீத்த அனைவரையும் ஒரே ரீதியாக ஒருமைப் பிரயோகம் செய்து குறித்தல் தவறாகாது, அவமதிப்பும் ஆகாது என்பது எமது அபிப்பிராயம். செய்யுள் நூல்களில் ஒருமைப் பிரயோகமாகிறது அவமதிப்பாகாதபோது வசன நூல்களில் பிரயோகமாவது மாத்திரம் எவ்வாறு அவமதிப்பாகும் என்று நாம் கேட்கிறோம். இப் பிரயோகத்தை வழக்குக்குக் கொண்டுவர முயலுகிற நம்முடைய காதுக்குக்கூட இவ் வொருமைப் பிரயோகம் இன்னும் பழகவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அனுமார், இராமர், லட்சுமணர் என்கிற பிரயோகங்கள் பேச்சிலும் இலக்கியத்திலும் புகுந்து விரசப்படுவதை எம்மால் முடிந்த அளவுக்கு நிறுத்துவதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்று நினைத்தும், கவிகள் ஆசிரியர் முதலியோருக்கு மரியாதையையும் மதிப்பையும் காட்டும்வழி அவர்களுடைய நூல்களை ஆராய்ந்துபார்த்து அவர்களுடைய நூல்களையும் மற்ற கவிவாணர்களுடைய நூல்களையும் சீர்தூக்கி, அவர்களுக்கு உரிய ஸ்தானத்தை நிர்ணயித்து வைத்தலும் தான் என்றும், இப் பிரயோகம் நாளாவட்டத்தில் காதுக்கும் பழகிப்போய்விடும் என்றுமேதான் சில அன்பருக்குத் தற்போது விரசியாகக் காணப்படுமானாலும் இவ்வாறு பிரயோகிக்கத் துணிந்தோம்.

கிரகண விமோசனம்

தமிழ் நாட்டுத் தேசசபைப் பஞ்சாயத்தின் தலைவரும் சிறந்த தேசபக்தருமான ஸ்ரீமான் ஈ. வெ. ராமசுவாமி நாயக்கர் அவர்கள் மீதுள்ள வழக்கையும் இருபது வருஷமாகத் தாய்நாட்டிற்காக உழைத்துவரும் ஸ்ரீமான் சுப்பிரமணியசிவம் அவர்கள் மீதுள்ள வழக்கையும் சென்னை அரசாங்கத்தார் வாபீசு வாங்கிக்கொண்ட செய்கையை மெச்சுகிறோம். தமது தமது ராஜீய அபிப்பிராயங்களை ஒளியாமல் வெளிப்படுத்துகிறவர்கள்மீது குற்றவழக்குத் தொடங்குவது அரசாங்கத்திற்கு என்றைக்கும் அழகன்று.

> செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை
> வேந்தன்
> கவிகைக் கீழ்த் தங்கும் உலகு,

என்பது பொருள் நூல் சூத்திரம். அரசாங்க முறையிலும் ராஜ்ஜிய நிர்வாக முறையிலும் குற்றங்கள் இருக்கின்றனவென்று சான்றோரேயாகட்டும், சாமானியரேயாகட்டும் கூறினால், அரசருக்கு அவ் வார்த்தை கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் தம்முடைய ராஜ்ஜிய முறை பரிபூரணமான நீதி மார்க்கத்தில் செல்ல வேண்டும் என்று பக்தி சிரத்தையோடு இருக்கிற அரசர், மேற்சொன்னவர் கூறும் வார்த்தைகளுக்காக அவர்களை வெகுளாமல், அவர்களுடையகூற்று உண்மையா அல்லது அன்றா என ஆராய்ந்து பார்த்து உண்மையாயின் தமது முறையை மாற்றிக் கொள்ள வேண்டியது. தவறாயின் அவ் வபிப்பிராயம் தவறென்று காரண காரியங்களோடு உலகத்துக்குப் பகிரங்கமாக எடுத்துக் காட்ட வேண்டியது. இதுதான் தமிழ்நாட்டுச் சான்றோர் இவ் விஷயத்தில் அரசருக்கு என்று வகுத்துவைத்த அறமாகும். அவ்வறம் எப்பொழுதுமே கையாளப்பட்டு வந்தால் இப்பொழுது நம் நாட்டில் தோன்றும் கலகங்களும் குழப்பங்களும் தோன்றியே யிரா. இனியாவது சுற்றுள்ள மாகாணங்களில் என்ன முறை கையாளப் பட்டாலும் சென்னை அரசாங்கம் பரபரக்காமல் இருக்குமென்று நம்புகிறோம்.

வங்காள அடக்குமுறை

சென்னை அரசாங்கம் தற்பொழுது நடந்துகொண்டிருக்கிற ரீதிக்கு முற்றிலும் மாறாக வங்காள அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. ஜனங்கள் சுதந்திரம், சுதந்திரம் என்று இடைவிடாது கதறிக்கொண்டிருக்கிற இந்நாளில் ராஜப்பிரதிநிதியின் அனுமதியோடு வங்காள அரசாங்கம் கி. பி. கஅகஅ-ம் வருஷத்திய மூன்றாவது விசேஷ ஆக்கினைப்படியும், இவ் வருஷத்திய புதிய விசேஷ ஆக்கினைப்படியும் எஉ-பேர்களைச் சிறைசெய்திருக்கிறது. பழைய துருப்பிடித்த ஆணையை மறுபடி வெளியில் எடுத்துப் பிரயோகிப்பதற்கும், புதிய ஆணையாகிற ஆயுதத்தை இன்றைக்கு வார்த்துப் பிரயோகிப்பதற்கும் காரணம், வங்காளத்தில் பெரியதொரு ராஜ்ஜிய புரட்சிக்கு ஆயத்தம் செய்துகொண்டு அனேகர் உலவுவதே, ' என்று லிட்டன் பிரபுவும், ரெடிங்பிரபுவும் கூறுகிறார்கள். நாகரீக அரசாங்கங்களில் இத்தகைய விசேஷ ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு ஓர் பெரிய யுத்தமோ அல்லது யுத்தத்தைப்போன்ற சம்பவங்களோ அவசியமாகக் கருதப்படும். தங்களது விளக்கத்தில் இப் பிரபுக்கள் காட்டுகிற சம்பவங்கள் இத்தகைய அதீதமான ஆணையைப் பிறப்பிக்கப் போதிய காரணமாகா என்பது எமது தாழ்ந்த அபிப்பிராயம். நாட்டில் கலகங்களும் குழப்பங்களும் இருக்கக்கூடாது என்கிற கக்ஷிக்கு நாம் விரோதிகளல்லோம்.

> பல் குழுவும் பாழ் செய்யு முட்பகையும்
> வேந்தலைக்குங்
> கொல்குறும்பு மில்லது

தான் நாடு என்பது எமது மதம். நாட்டில் குழப்பக்காரர்களும், கலகக்காரர்களும் இருப்பின் அவர்களை முறைப்படி தண்டிக்கவேண்டியது அரசாங்கத்துக்கு உரிமை மாத்திரமில்லை கடமையேயாகும். ஆனால் கலகக்காரர்களைத் தண்டிப்பது வேறு, ராஜாங்கத்தில் வேர்வரையில் மாறுபாடு ஏற்படவேண்டும் என்று நினைத்து அதற்காக நியாயமான முறைகளில் உழைப்பவர்களைச் சிறைப்பிடித்துத் தண்டிப்பது வேறு. இப்பொழுது செய்திருக்கும் ஆணைகள் பின் சொல்லப்பட்ட குணமுடையவர்களைத் தாக்கக்கூடியவைகளாக மாத்திரமில்லை, அவை அவர்களைத் தாக்கியே இருக்கின்றன. ஸுபவாஸசந்திரவஸு கல்கத்தா நகரசபையின் முக்கிய நிர்வாக உத்தியோகஸ்தர். ஸ்ரீ சித்த ரஞ்சன தாஸுக்கு வலதுகை போன்றவர். அனிலராய் என்பவர் வங்காள தேசசபைப் பஞ்சாயத்தின் காரியதரிசி. இந்த ஆணைகளின்படி சிறைசெய்யப் பட்டிருப்பவர்களில் நான்கு சட்டசபை அங்கத்தினரும் ஸ்வராஜ்ஜிய கக்ஷியைச் சேர்ந்த பல பிரமுகர்களும் இருக்கிறார்கள். ஸ்வராஜ்ஜிய கக்ஷியைச்சேர்ந்த சட்டசபை அங்கத்தினர் சென்ற சட்டசபைக் கூட்டத்தில் லிட்டன் பிரபுவின் தன்னரசு அரசாங்க முறையைத் தாக்கி, அதை நடக்க

வொட்டாமல் செய்ய முயன்றதற்குப் பழி தீர்த்துக் கொள்ளுவதற்காகவேதான் இந்த ஆணைகள் பிரதானமாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று ராஜீய ஸ்தலங்களில் கூறும் கூற்றை மறுப்பது கடினமாக இருக்கும். ஏனெனில் வங்காள போலீஸாரில் ஒரு வகுப்பாரின் குணத்தைத் தெரிந்த எவரும் இந்த ஆணைக்குப் பிறகு ஸ்வாராஜ்ஜிய கக்ஷியினர்மீது அபாண்டமான அறிக்கைகள் அடைமழை பொழிவதுபோலப் பொழிய ஆரம்பிக்கும் என்று உறுதியாய்ச் சொல்லிவிடமுடியும். ஸ்வாராஜ்ஜிய கக்ஷியினரைப் போலீஸார் அலுக்கிற வரையில் எதேச்சையாய் வேட்டையாடுவார்கள், எதேச்சாதிகாரம் என்கிற மதுவை உண்ண உண்ண அதை இன்னுங்கொஞ்சம் சாப்பிடவேண்டும் என்கிற தாகமே சாப்பிடுபவருக்கு மேலிடும். குற்றமற்றவர்கள் அநியாயமாகப் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப் படுங்காலத்தில் ராஜீய விவகாரங்களில் தலையிடாதவர்கள்கூட அரசாங்கத்தை வெறுக்க ஆரம்பிப்பார்கள். வெறுப்பு வளர்ந்தால் அமைதிக் குறைவுகளும் கலகங்களும் ஜனங்கள் புறமும், அநீதியான பலாத்கார முறைகள் அரசாங்கத்தின் புறமும் தோன்றுவது இயற்கைவிதி. இந்த அனர்த்த பரம்பரை எங்கு போய் நிற்குமோ என்று எண்ணிப்பார்க்க எமது மனம் நடுங்குகிறது.

சரித்திரத்தை ஆராய்க

நபோலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு பூர்போன் அரசர் மறுபடி பிரெஞ்சு சிங்காதனத்தில் ஏறி ஆட்சி செலுத்திவந்த காலத்தில், முப்பது வருஷங்களாக ஓர் யுக்ப்புரட்சி நடைபெற்றுவந்தது என்பதையும், சுதந்திரம் என்கிற வீரமந்திரம் கோடிக்கணக்கான மனிதரால் உருவேற்றப்பட்டுச் சர்வாந்தரியாமியான ஓர் தேவ சரீரத்தைப் பெற்றுவிட்டது என்பதையும், அதை அழிப்பது இனி மனித சக்திக்கு அசாத்தியம் என்பதையும் மறந்து ௧௯-வது (கி.பி. ௧அ-வது) நூற்றாண்டைய மார்க்கங்களையே மீண்டும் அனுஷ்டிக்கத் தலைப்பட்டார்கள். அதைக் கண்டு பிரெஞ்சு தேசபக்தர்கள் அவர்களைப்பற்றி, பூர்போனியர் எதும் கற்கவும் இல்லை, ஏதும் மறக்கவும் இல்லை, என்று கூறினார்கள். ஆங்கில அதிகாரிகள் இந்தச் சூத்திரத்துக்குத் தாங்கள் இலக்கியமாக இருப்பதை உணராதிருப்பது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் பலாத்காரம் பரிகாரமாகாது. பலாத்காரத்தினால் ஒரு மனிதனுடைய, அல்லது ஒரு ஜாதியினுடைய சரீரத்தை வெல்லலாம்; சிறிது காலத்திற்கு அவர்களுடைய அந்தக் கரணத்தையும் வென்று நிற்கலாம். ஆனால் மனிதனுடைய ஆத்மாவானது, ஜாதியினது உயிரானது சரீரத்துக்கும் அந்தக் கரணத்துக்கும் மீறியது. தன்னைத்தானே உணர்ந்து கொண்டுவிட்ட ஓர் ஜாதியைப் பலாத்காரத்தினால் அமிழ்த்தி வைக்கப் போதிய சக்தி இப்பூவுலகத்தில் இல்லை. பாரதஜாதி தன்னைத்தான் உணர்ந்துகொண்டுவிட்டது. அதைச் சூழ்ந்திருந்த ஆவரணங்களெல்லாம்;பர்வகாலத்தில் கிருஷ்ண சர்ப்பம் உரித்துப்போடும் தோலைப்போலக் கீழே வீழ்ந்துவிட்டன. சில பிரிவினைகளும் கலக்கங்களும் மாத்திரம் அதன் மண்டலங்களில் சிக்கிக்கொண்டு அதன் எதேச்சா கமனத்தை விக்ஷேபங்களைப் போல நின்று தடுத்து நிற்கின்றன. இந்தச் சமயத்தில் ஆங்கில சிங்கமானது பெருந்தன்மையுடன் முன்வந்து பாரத ஜாதியாகிற ஆதிசேஷனுக்குத் துணைபுரிந்து அதன் மண்டலங்களைப் பீடித்திருக்கிற களைகளைக் களைந்தெறிந்ததானால் அது ஸத்திய யுகத்தை இவ்வுலகில் மறுபடியும் நிலவச் செய்யும். அப்பொழுது அது பாரத நாட்டின் நன்றிக்கு என்றைக்கும் பாத்திரமுள்ளதாகயிருக்கும். அப்பொழுது இவ்விரு நாடுகளும் சேர்ந்து, தங்களுக்குள்ளே இருக்கிற தோஷங்களை நிவர்த்திசெய்துகொண்டு அறக்கொடி உயர்த்தி, இப்பொழுது போலியாகப் போய்விட்ட ராஷ்டிர சங்கத்துக்கு (லீக் ஆப் நேஷன்ஸுக்கு) உயிர் தந்து, உலகெல்லாம் தர்மம் தழைத்தோங்கும்படி பார்த்துக் கொள்ளும்.

ஆங்கில தேர்தல்கள்

ஆனால் இந்தக் கனவுகளெல்லாம் சீக்கிரத்தில் நனவாகும் என்று சொல்லுவதற்கே இடமில்லாமலிருக்கிறது. எழெட்டு மாதங்களுக்கு முன் தொழிற் கக்ஷியின் கையில் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் சூத்திரக் கயிறு வந்தபோது, பெரிய மனக் கோட்டைகள் கட்டாமற் போனாலும் இந்தியாவின் ஆட்சி முறையில் கணிக்கத்தக்க ஓர் நல்ல மாறுபாடு பிறக்கலாம் என்று பல அறிஞர் நம்பத் தலைப்பட்டனர். ஆனால் நாளாக ஆக, தொழிற் கக்ஷியினர் தாங்கள் படாடோபமாக

வெளியிட்டிருந்த தர்மங்களை ஒவ்வொன்றாகத் தூக்கிக் கடலில் போட்டுக் கடைசியில் ரெடிங் பிரபுவுக்குப் பாரத நாட்டின் கிளர்ச்சியை அடக்குவதற்கு எதேச்சாதிகாரமும் கொடுத்துவிட்டனர். இதெல்லாம் தேர்தல் தந்திரமே. பாரத நாட்டில் கலகங்களை வளரச்செய்கிறார்கள் என்று யதாபூர்வ (கன்ஸெர்வதிவ்) கக்ஷியார் தங்கள் மீது சுமத்தின பழியினால் தங்களுக்கு இத் தேர்தலில் தோல்வி ஏற்படலாம் என்று பயந்துதான் ஸ்ரீ மக்தோனல்து இச் சமயத்தில் ரெடிங் பிரபுவுக்கு இந்த அதிகாரம் கொடுத்தார் என்பது ராஜதந்திரத்தின் நெடுங்கணக்கு மாத்திரம் கற்றவருக்குக்கூட வெளிப்படை. அதனால் இந்தியருக்குக் கஷ்டம் நேர்ந்துவிட்டால் என்ன? உலகத்தின் வருங்கால இதிகாசத்தின் ஏடுகளில் தன் பெயர் கரி பூசப்பட்டு நிற்குமே, அதனால் என்ன? இன்றைக்கு வெற்றிவேண்டும். கைக் கெட்டியும் வாய்க்கெட்டாமல் வெகுநாள் இருந்த அதிகாரம் வாய்க்கெட்டிய பிறகு நழுவி விழுந்துவிடக்கூடாது! ஆகையால் யதாபூர்விகள் கிளப்பிவிட்ட பூதத்துக்கு இந்தியரைப் பலி கொடுத்துவிடலாம் என்று தொழிற் கக்ஷித்தலைவர் நிச்சயித்து அவசர அவசரமாய் ரெடிங் பிரபுவுக்குச் சர்வாதிகாரமும் கொடுத்து எங்களை எப்படி நீங்கள் சாதுக்கள் என்று சொல்லலாகும் என்று தங்கள் சத்துருக்களை வினவினர். ஆனால் இந்தத் தந்திரம் பலிக்கவில்லை—தொழிற் கக்ஷித்தலைவர்,

> நல்லாரும் பொல்லாரும், நரகத்தார் துறக்கத்தூர்
> நம்பி! நம்மோடு
> எல்லோரும் பகைஞரே! யார் முகத்தே விழிக்கின் [றாய்
> எளியை யானாய்?

என்று சொல்லும்படி, தங்களைக்கண்டு இரங்க யாருமின்றி இந்தத் தேர்தலில் அதப் பாதாளத்தில் வீழ்ந்துவிட்டனர்.

யதா பூர்வி (கன்ஸேர்வதிவ்) ஆட்சி

இந்தத் தேர்தலில் இங்கிலாந்தின் உண்மையான வர்ணம் வெளியாகிவிட்டது. யதாபூர்விகளில் ௪௦௭ பேர் ஆங்கில ஜனசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டனர். போவர் சண்டை முடிந்த உடனாகட்டும் மகாயுத்தம் முடிந்து "காகி தேர்தல்" என்று சொல்லப்பட்ட லாயிது ஜியார்ஜின் ஜாலவித்தைத் தேர்தலிலாகட்டும், கிளாதுஸ்தன் இங்கிலாந்தின் செல்வக் குழந்தையாக பாவிக்கப்பட்ட நாட்களிலாகட்டும் ராஜ்ஜிய ரதத்தின் சாரத்தியத்தை வகித்த எந்தக் கக்ஷியினருக்கும் இவ்வளவு பெரிய வெற்றி கிடைத்ததில்லை. ௪௦௭ அங்கத்தினர் அடங்கிய இந்த யதாபூர்வ கக்ஷியானது, தாராள கக்ஷியினர் என்ற போலிப்பெயர் பூண்ட நாற்பத்துச் சொச்சத்தாரையும், "மானிப்பாரின்றி, தூக்கிப்பாரின்றி, பாடுவாரின்றி," வீழ்ந்து கிடக்கும் நூற்றைம்பதின்மர் கொண்ட தொழிற்கக்ஷியையும் எறிட்டுக்கூடப் பாராமல் யதேச்சாதிகாரம் செலுத்தப்போகிறது. இதற்குத் தூபம் காட்டிச் சாந்தப்படுத்துவதற்காகத்தான் ஸ்ரீ மக்தோனல்து வங்காளத்துக்குச் சவுக்கடி தர உத்தரவு கொடுத்தார் என்றால் இதன் பெருமைகளைப் பேசவும் ஒண்ணுமோ? கர்ஜன் பிரபுவும், அவரைப் போன்றோரும் அலங்கரிக்கும் இந்த கக்ஷியினர் இந்தியாவையும் மற்றுமுள்ள அடிமை நாடுகளையும் அடக்கி ஆளுவதில் பேர் பெற்றவர்கள். அடிக்க ஓங்கிய கையை நிறுத்தக்கூடாது என்பது அவர்களுடைய மதம். தாக்ஷிணியம் காட்டினால் கீழ் நாட்டவர் தங்களை அலக்ஷியம் செய்துவிடுவார்கள் என்பது அவர்களுடைய நம்பிக்கை. இத்தகைய கியாதி பெற்ற கக்ஷியானது இன்னும் மூன்று வருஷங்களுக்காவது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செங்கோலைத் தாங்கி நிற்கப்போகிறது.

பிரிட்டிஷ் மந்திரசபை

மந்திர சபையின் முக்கியமான அங்கத்தினர் பின் வருபவர் ஆவர்:—

பிரதம மந்திரியும் ஜனசபைத் தலைவனும்: பால்துவின்.
இந்தியா காரியதரிசி: பர்கென்ஹெத் பிரபு.
வரவு செலவு மந்திரி: உவின்ஸ்தன் சர்ச்ஹில்.
வெளிநாட்டு மந்திரி: ஆஸதின் சேம்பர்லெயின்.
முத்திரை மந்திரி: ஸால்ஸ்பரி பிரபு.
மந்திரி சபைத்தலைவனும் பிரபு சபைத்தலைவனும்: [கர்ஜன் பிரபு.
நீதி பிரபு: கேவ் பிரபு.
சுதேச மந்திரி: ஸர்ஜாயின்ஸன் ஹிக்ஸ்.
யுத்த மந்திரி: ஸர் லாமிங் வொர்திங்தன் இவான்ஸ்.
சுகாதார மந்திரி: நெவில் சேம்பர்லெயின்.
கல்வி இலாகா தலைவன்: யூஸ்தேஸ் பெர்ஸி பிரபு.
தொழில் மந்திரி: ஸர் ஆர்தர் ஸ்தீல்-மெயித்லாந்து.

ஆகாயப்படை மந்திரி: ஸர் ஸாமுவல் ஹோர்.
கடற்படை மந்திரி: பிரிட்ஜ்மன்.
வியாபார பஞ்சாயத்து அக்கிராசனர்:
ஸர் பிலிப் லாய்த் க்ரீம்.
அட்டர்னி ஜெனரல்: ஸர் டக்ளாஸ் ஹாக்.
லங்காஸ்டர் டச்சி: ஸெஸில் பிரபு.
தொழில் இலாகா: பீல் பிரபு.
குடியேற்ற நாட்டு மந்திரி: கர்னல் அமெரி.
ஸ்காத்துலாந்து மந்திரி: ஸர் ஜான் கில்மோர்.

பர்கேன்ஹெத் பிரபு

இவர்களுள் பர்கென்ஹெத் பிரபு மிகவும் சாமர்த்திய சாலி என்றும், வன்கண்மை வாய்ந்தவர் என்றும் பெயர் எடுத்திருக்கிறார். பத்து வருஷங்களுக்குமுன் ஸ்ரீ ஆஸ்குவித் ஐர்லாந்துக்குச் சிறியதோர் சுதந்திரம் கொடுக்க ஓர் சட்டம் ஏற்படுத்திய காலத்தில் கார்ஸன் பிரபுவுக்குத் துணையாக நின்றுகொண்டு, அல்ஸ்தெர் ஜனங்களை அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பும்படி செய்வோம் என்று அரசாங்கத்தைப் பயமுறுத்தினவர்களில் இவர் முக்கியஸ்தர் என்று நாம் படித்ததாக ஞாபகமிருக்கிறது. இவருடைய காரிய நிர்வாகத்தில் பாரத நாடு ஸ்வராஜ்ஜியத்தை அடைகிற மார்க்கத்தில் முன்னுக்குச் செல்லும் என்றாவது, சுகமாகச் செல்லும் என்றாவது சொல்லுவதற்கில்லை. ஆனால் பெரிய ஆசை காட்டுகிறவர்களின் காலத்தில் தீமை நிகழ்வதும், நம்பிக்கையின்மை உண்டாக்குகிறவர்களின் காலத்தில் சில நன்மைகள் ஏற்படுவதும் சில வேளைகளில் நேருகிறது. ஆகையால் இவருடைய உதவியினாலில்லாமற் போனால், இவரது எதிர்க்கத் தகுந்த அரசாட்சி முறைகளை எதிர்ப்பதனாலாவது பாரததேசம் அதிசீக்கிரத்தில் சுயராஜ்ஜியத்தை அடையும் என நம்புவோம்.

தேசசபை ஐக்கியம்

வங்காள அடக்குமுறைகள் என்ன பயனைத்தரினும் தராமலிருப்பினும், தேச சபையில் ஏற்பட்டுள்ள பிளவை அவை பெரிதும் நீக்கிவிட்டன என்று கூறலாகும். இந்த ஐப்பிசிமீ ௨௧-௳ முதல் கல்கத்தாவில் கூடிய ராஜிக் கூட்டத்தில் மாறுதல் வேண்டா உதவி மறுத்தற் கக்ஷியாரும் ஸ்வராஜ்ஜிய கக்ஷியாரும் ஒன்று பட்டுச் சில தீர்மானங்கள் செய்துகொண்டிருக்கின்றனர். இவை நாம் விரும்பியவண்ணமே இல்லை என்பது வாஸ்தவம். ஸ்ரீமான்கள் ராமஸ்வாமி நாயக்கர், கலியாண சுந்தர முதலியார், ச. ராஜகோபாலாசாரியார் முதலிய தலைவருக்கு இம் மத்தியஸ்தம் மிகக் கசப்பாயிருக்கும் என்று நினைக்கிறோம். சேலம் மகா நாட்டில் நாம் கொண்டுவந்த மத்தியஸ்த தீர்மானம் அங்கீகரிக்கப் பட்டிருந்தால் ஸ்வராஜ்ஜிய கக்ஷியினர் தற்பொழுது பெற்றிருக்கிற அனுகூலங்களைவிடக் குறைந்த அனுகூலங்களையே எதிர்பார்த்திருப்பார்கள். மகாத்மா இப்பொழுது தள்ளிக் கொடுத்திருக்கிற அளவுக்குத் தள்ளிக்கொடுக்கும்படி வந்திராது. ஆனால் சென்றதைக்குறித்து வருந்துவதில் பயனில்லை. பிரிந்து நிற்றல் பலவீனம் என்பதையும், சேர்ந்துகொண்டு, தோளொடுதோள் இணைந்துகொண்டு நின்றால் நாம் நிமிஷத்துக்கு நிமிஷம் மேலே சென்றுகொண்டே போய்ச் சீக்கிரத்தில் நம்முடைய லக்ஷியமான ஸ்வராஜ்ஜியப் பேறை பெற்று விடுவோம் என்பதையும் இரு கக்ஷியினரும் நன்கு உணர்ந்துகொண்டு, பரஸ்பரம் குற்றம் கூறுவதில் விரயமாகி வந்த நமது சக்திகளைச் சேமித்துவைத்து, கைநூலாடைகளை விருத்தி செய்து அன்னிய உடைகளை நாட்டைவிட்டு ஓடும்படி செய்வதிலும், தேசபக்தி வளர்க்கும் கல்வியைப் பரப்புவதிலும், தீண்டாமையையும் ஹிந்து—முஸல்மான் வேற்றுமையையும் ஒழிப்பதிலும், அந்தந்தப் பகுதிகளுக்குள்ளே பிளவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதிலும் அச்சக்திகளைப் பிரயோகம் செய்யத் தலைப்பட்டோமானால் நமக்குச் சுயராஜ்ஜியம் வந்து சேருகிற வழியை யாரால் அடைக்கமுடியும்?

மதுரை திண்டுக்கல் மகா நாடு

இது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் அக்கிராசனத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. தில்லி ஒற்றுமை மகாநாட்டின் தீர்மானங்களை முற்றும் அங்கீகரித்தும், ஹிந்து-முஸ்லீம் சச்சரவுகளை ஒழிக்க மகாத்மா கோஹத்துக்குச்செல்லுவதை ராஜப்பிரதிநிதி தடுத்திருப்பதையும், வங்காள அடக்கு முறைகளையும் கண்டித்தும், இன்னும் பல முக்கியமான விஷயங்களைப்பற்றியும் இம்மகாநாடு அனேக தீர்மானங்கள் செய்திருக்கிறது.

ஸவர்ணஜதா

ஜாதி ஹிந்துக்கள் நூறு பேர்களடங்கிய இந்த ஜதாவானது ஸ்ரீமான் பத்மநாப பிள்ளையின் தலைமையின்கீழ்த் திருவனந்தபுரத்திற்குச்சென்று, மகா ராணியைத் "தீண்டாதா"ரின் உரிமைகளைத் திருப்பியளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதற்காக வைக்கத்திலிருந்து புறப்பட்டுப் போயிருக்கிறது. அதன் உத்தேசம் நிறைவேறுக! இது சம்பந்தமாக ஐம்பதுவருஷங்களுக்குமுன் ஸர் தஞ்சாவூர் மாதவராவ் திருவனந்தபுரம் திவானாக இருந்த காலத்தில் எழுதியனுப்பிய குறிப்பு ஒன்றை இங்கு மொழி பெயர்த்து எழுதுகிறோம்:—

ஐம்பது வருஷங்களுக்கு முன் திவான்
ஸர். த. மாதவராயர், பேஷ்கார் நாணுப்பிள்ளைக்கு
எழுதிய கடிதத்தின் சாராம்சம்.

"இல. ௧௪௯௧ / ௩௭௩ திருவனந்தபுரம்
ஏப்ரில் ௨௩, ௧௮௭௦

அன்பார்ந்த ஐயா,

தாழ்ந்த வகுப்பினர் யாதொரு தடையுமின்றி பொது ரஸ்தாக்களில் போய்வரும்படி விட வேண்டிய விஷயத்தைக் குறித்து, ஏற்கனவே தங்களிடம் பேசியிருக்கிறேன். அவ் விஷயத்தை இன்னும் வெகு பலமாய்த் தங்களுக்கு வற்புறுத்துவே இக் கடிதம் வரைகின்றேன்.

தாழ்ந்த வகுப்பினர் பொது ரஸ்தாக்கள் மார்க்கம் செல்லும்போது ஒரு உயர் வகுப்பைச் சார்ந்தவன் பக்கத்தில் வந்துவிட்டால் அவர்களைத் தூரமாக ஒதுங்கிப் போகவேண்டுமெனக் கட்டாயப் படுத்தல் கூடாது. சர்க்கார் உத்தியோகஸ்தர் எல்லோரும்—சாதாரண சேவகர்களுட்பட—ஒருவராவது, தாழ்ந்த வகுப்பினரை ரஸ்தாக்களைவிட்டுப் போகும்படிக் கட்டாயப் படுத்தக்கூடாதென்று நன்கு தெளிவாய் அறியும்படி செய்தல் வேண்டும்.

உயர்ந்த வகுப்பைச்சார்ந்த எவராகிலும் தாழ்ந்த வகுப்பினரை அவ்விதம் ஒதுங்கிப் போகும்படிச் செய்ததாக புகார் வரின் அதைக் குறித்து உடனே திரவிசாரணை செய்து உயர் வகுப்பானுக்கு நல்ல தகுந்த சிட்சை யளிக்க வேண்டும்.

ஒரு விதமான அறிக்கையும் இது விஷயமாகத் தங்களை வெளியிடும்படி நான் கூறவில்லை. திவானிடமிருந்து அதிகாரம் பெறுமல் ஒருவரும் எவ்வித அறிக்கையும் வெளியிடுதல் கூடாது. ஆனால் மேற்கூறிய கொள்கைகளை மனதில் வைத்துக் கொண்டு அவற்றின் படி நடக்கில், ஒரு வித ஹிம்ஸையுமில்லாமல், வெகு திருப்திகரமான முடிவுக்கு வரக்கூடும்.

புலையர்கள் இங்கு ஓர் ரஸ்தா வழியாய் சில குறிப்பிட்ட நேரங்களில் போகக்கூடாதென்று ஓர் அதிகாரி தடுத்திருந்தார். இது காரணம் பற்றி அவரை இப்பொழுது வேலையிலிருந்து நீக்கிவிட்டதோடு, அவருடைய நடத்தைக்கு உடைந்தையாய் இருந்த தாசில்தாரைப்பற்றியும் மஹாராஜாவிடம் தகுந்த தண்டனை விதிக்கும்படி புகார் செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்ந்த வகுப்பினரைப்பற்றி இச் சீர்திருத்தம் படாடோபமில்லாமலும் சீக்கிரமாயும் பூரணமாயும் நிறைவேறுமாறு செய்வதற்கான பிரயத்தனங்கள் தாங்கள் வேண்டியவை செய்வீர்களென நம்பியிருக்கிறேன்."

தமிழ்நாடு மகாநாடு

௩௦-வது தமிழ் மாகாண மகாநாடு ஐப்பசி ௩௦-௳ திருவண்ணாமலையில் தேசபக்தர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமிநாயக்கரின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. காவ்ய கண்ட ஸ்ரீமத் கணபதிசாஸ்திரிகள் உடசாணைக்கூட்டத்

தாரின் தலைவராயிருப்பதால் பிரதிநிதிகளுக்கு வேண்டிய வசதிகள் யாவும் சிறப்பாகவே செய்துதரப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. நாம் அச்சுக்குப்போகும் தருவாயில்தான் மகாநாடு கூடுவதால், கல்கத்தாவில் தேசீய ஒற்றுமையை வளர்ப்பதற்காக ஸ்வராஜ்ஜியகக்ஷியினரும், மாறுதல் வேண்டாத ஒத்துழையாதார்களின் சார்பாக மகாத்மா காந்தியும் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தை அனுசரித்து காங்கிரஸுக்குள் பிளவுகளின்றி சமரசம் ஏற்பட்டு நாட்டில் தீவிர உணர்ச்சி அதிகரித்து தேசீய இயக்கம் செவ்வனே வளரத்தகுந்த முயற்சிகளும் தீர்மானங்களும் இம் மகாநாட்டில் செய்யப்படும் என்று நாம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம் என்று கூறுவதைத் தவிர வேறு ஒருவித அபிப்பிராயமும் இத்தருணத்தில் இதையொட்டி நாம் வெளியிடுவதற்கில்லை.

வீரத்தாய்

இம் மாதத்திய சஞ்சிகையை வெளியிடுந் தருவாயில் ஐப்பிசீ ௩௦-ம்தேதி யன்று மௌலானு சவுகத்அலி முகமதலி இவர்களின் வீரத்தாய் பீகம் பீ அம்மன் அவர்கள் மண்ணுலகு நீத்து விண்ணுலகேகினர் என்ற செய்தி எமக்கு எட்டியது. இத் துக்க சமாசாரத்தைக் கேட்டதும் எம்மைப் போலவே இந் நாட்டினர் அனைவரும் பொதுவாகவும், நமது முஸ்லீம் சகோதரர் சிறப்பாகவும் துயரக் கடலில் ஆழ்ந்துவிட்டனர் என்று கூறத் தேவையில்லை. தள்ளாத வயதில், இக் கிழவியார் தாய்நாட்டிற்காகவும், இஸ்லாம் மதத்திற்காகவும், ஊரூராய்ச் சென்று பிரசங்கங்கள் புரிந்தும் தமது சகோதர சகோதரிகளைக் கண்டு பேசியும் செய்துவந்த தேச சேவை அளவிடற்பாலதன்று. ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையை வளர்ப்பதற்காக எமதன்னை வெகுவாகப் பிரயாசைப்பட்டு வந்தார் என்றுங் கூறவேண்டுவதில்லை.

அப்படிப்பட்ட புண்ணியவதி ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை வளர்ப்பதற்கான பெரு முயற்சிகள் செய்துவரும் இந்நாளில் அதற்கு அருந்துணை புரிவதற்கில்லாமல் இறைவன் நம்மை விட்டு அகலும்படி ஆணையிட்டு விட்டார்! அதுவும் நமது துர்ப் பாக்கியமே யன்றி வேறென்னென்று கூறுவது! தம் கணவன், சவுகத், முகமது இருவரையும் வெகு பால்யத்திலேயே விட்டு இறந்துவிடவே, அப் பாலர்களைத் தகுந்த முறைகளில் வளர்த்து வரும் பொறுப்பு பீ அம்மன் ஏற்கவேண்டி வந்தது. வீர சுதந்திர புருஷர்களாய் தற்போது இந்தியாவிற்கும் முஸ்லீம் உலகத்திற்கும் சிம்மங்களாய் அலி சகோதரர்கள் விளங்கா நிற்பது, பீ அம்மன் அவர்கள் அவர்களுக்கு ஊட்டிய வீர அமுதினுல்தானென்று கூறல் வேண்டும்.

ஒருகால் அலி சகோதரர்கள் இருவரும் உலகப் பெரும் போர் நடந்தபோது சிந்த்வாராவில் சிறைப் பட்டிருந்தகாலை, சில நண்பர்களின் முயற்சியினுல் அவர்கள் சர்க்காரால் தயாரிக்கப்பட்ட ஒரு வாக்குமூலத்தில் கையொப்பமிட்டுக் கொடுப்பின் விடுதலை பெறலாமென்று ஏற்பாடு செய்யப்பட்ட பொழுது, பீ அம்மன் கூறிய வார்த்தைகள், பண்டைக் காலத்தில் இந்தியாவிலிருந்ததாகக் கூறப்படும் வீரத்தாய்களின் வமிசாவளி இன்னும் சாகவில்லை, உயிருடனிருந்து வருகிறது என்பதை நிரூபிக்கும்—"முகமதும், சவுகதும் தங்களுடைய மதத்திற்காகவாவது, தேசத்திற்காகவாவது துரோகமானபடி எத்தகைய வாக்குமூலத்திலேனும் கையொப்பமிட்டு விடுதலை பெறுவாராயின், அவர்களுக்கு அமுதூட்டி வளர்த்த இக் கரங்களினுலேயே வாள் கொண்டு அவர்களை வீழ்த்துவதுடன், அன்னவர்களை ஈன்ற இவ்வுதரத்தையும் கிழித் தெறிவேன்," என்றனளெனக் கூறப்படுகிறது. அப்பேர்ப்பட்ட தாயை இழந்த அலி சகோதரர்களின் துக்கத்தில் நாமும் கலந்து கொள்ளுகிறோம்.

புஸ்தக விமரிசனம்

—o—

நீதி தர்மம்:- மகாத்மா காந்தி இயற்றியது. பிரசுரச்சாலை ஸ்ரீ. கணேசன், உ௬-பைகிராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணு ௩.

கடைசி ரிஷி மகா சமாதி அடைகிறவரையில் சுருதியின் மந்திரங்கள் முடிவடைய மாட்டா, மற்றும் புதிய மந்திரங்கள் தோன்றிக்கொண்டே வரும் என்று ஸ்வாமி விவேகாநந்தர் மிக அழகாகக் கூறியுள்ளார். இன்று பாம்பொருள் மகாத்மா காந்தியின் திருவாக்கின் துவாரா புதிய உபநிஷத்துக்களை மனிதனுக்குத் தந்துகொண்டு வருகிறது. ஆகையால் அவ் வாக்குக்களைத் தமிழ் செய்து வெளிப்படுத்தி வருவதற்காக நாம் பிரசுரக்காரருக்கு வந்தனம் செலுத்த வேண்டியது அவசியம்.

ஆரோக்கிய வழி:- பிரசுரித்தவர் ஸ்ரீ. கணேசன் திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணு ௧௨.

மகாத்மா காந்தி எழுதிய அருமையான நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. வியாதிகள் வந்த பின் கஷ்டப்படுவதோடு வைத்திய முறைகளைக் கையாளமுயலுவதைவிட நோய் வராமல் தடுத்துக்கொள்ளப் பிரயாசை எடுத்து உழைப்பதே மேலானது. நம்முடைய அறியாமையினுலும், அஜாக்கிரதையினுலும் தான் வியாதிகள் நம்மை தொத்துகின்றன. ஆகவே நாம் நோய்கள் நம்மை அண்டாமற் காத்துக்கொள்ளவேண்டிய தவசியமாகும். ஆனுல் வியாதிகள் வந்த பின் அவைகளை நிவர்த்திசெய்துகொள்ள வேண்டுமல்லவா? இதற்கு மருந்துகளினுல் ஓர் வித உபயோகமில்லை யென்பதோடல்லாமல், அவைகளினுல் தீமையும் விளைகின்றதென்று மகாத்மாஜீயின் கொள்கை. வியாதி யென்பது நம் தேகத்தில் ஏற்பட்டுள்ள அசுத்தங்களை வெளிப்படுத்தும்படி நமக்கு எச்சரிக்கை செய்கிறது.

அவ் வெச்சரிக்கையை நாம் ஏற்றுக்கொண்டு அந் நோயின் மூலமாகவே சரீரத்திலுள்ள அசுத்தங்களை யெல்லாம் வெளிப்படுத்தி விடுதல் நன்ருகும். அஃதன்றி மருந்துகளைச் சாப்பிட்டு அத்தகைய அசுத்தங்களை தேகத்திலேயே அமுக்கி வைத்து அவைகள் பின்னும் வேறு ரூபங்களெடுத்துத் தலைகாட்டும்படி செய்கிறோம். வியாதிகளால் சாகிறவர்களைவிட, மருந்துகளால் சாகிறவர்கள் அதிகமென பேக்கர், பிராங்கு என்ற பெரிய வைத்திய நிபுணர்கள் இருவர் கூறியுள்ளார். வைத்தியர் மேஸன் குட் என்பவர் சொல்லியிருப்பது என்னவெனில் "பஞ்சம், யுத்தம், கொள்ளைநோய் இவைகளை விட மருந்து அதிகம் பேரைக் கொன்றிருக்கிறது."

ஆகவே மகாத்மாஜீ கூறியுள்ள சாதனங்களை அனுசரித்து அதன் வழி நடப்பின் நாம் வியாதிகளை ஒருவாறு ஜயித்தவர்களாவோம். ஒவ்வொருவரும் இந்நூலில் காணப்படும் அரிய விஷயங்களை ஊன்றி கவனித்தல் வேண்டும்.

பாணபுரத்து வீரன்:- வெங்களத்தூர் சாமிநாத சர்மா எழுதியது. பிரசுரித்தவர் ஸ்ரீ. ராதா முதலியோர், தங்கசாலை கட்டடம், சென்னை.

விலை ரூபா ஒன்று.

இஃது தேசபக்தியை வளர்க்கக்கூடிய ஓர் சிறு நாடகம். தமிழ்மொழியில் நாடகநூல்கள் அருகிக் கிடக்கும் இந் நாளில் ஸ்ரீமான் சாமிநாத சர்மா இந் நூலை எழுதி தமிழ்த் தாயின் அடியிணைக்கு

அர்ப்பணஞ்செய்ய முன்வந்தது மிகவும் போற்றத்தக்கது. இதன் முன்னுரையில் பண்டிதை அசலாம்பிகை அம்மாள் கூறியிருப்பது போல், "சுதந்திரப்போராறு பெருக்கெடுத்தோடும் இந்நாளில் இத்தகைய தேசபற்றினை வளர்க்க வல்ல நூல்கள் இன்றியமையாதென் வென்பதை மறுப்பாரெவர்?"

பாலபோதினி:--'ஞானபோதினி பிரசுராலயம்' ௩௩, இருளப்பன் வீதி, சௌகார் பேட்டை, சென்னை. விலை அணு இரண்டு.

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மாவை அவருடைய நூல்கள்மூலம் தமிழுலகு நன்கறியும். அவர் தற்பொழுது பாலர்களுக்குப் புகட்டவேண்டிய கல்விக்காக, தேசியப் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்குமாறு பாடப் புஸ்தகங்கள் எழுதுவதில் இறங்கியுள்ளார். இப்புஸ்தகவரிசைகளில் முதலாவதான 'பாலபோதினி' என்னும் சிறிய புத்தகம் எமது பார்வைக்கு வரப்பெற்றோம். தற்போது ஆங்கில முறைகள் நமது கல்வித்துறைகளில் கையாளப்பட்டு வருவதின் நிமித்தம் ஹரி ஓம் நமோ நாராயணாய: என்ற பழைய சூத்திரங்களை விடுத்து இம்மாதிரி கோணலெழுத்துக்களை பிள்ளைகள் எளிதில் கற்க முடியாதெனவும் அவர்களுக்கு நேர் கோடுள்ள எழுத்துக்களே கற்பிக்கப்படவேண்டுமென்றும், ப, ட, ம, ய, ர, என எழுத்துக்களை முதலில் அப்பியசித்து படம், மரம், டயர் என்று, தமிழ் வார்த்தைகள் ஆங்கில மொழிகள் என்று பேதமின்றி அவ்வெழுத்துக்களை வைத்து வாயில் வந்தபடியெல்லாம் வார்த்தைகளை அமைத்து இள மனதில் புகுத்தி விடுகின்றனர். ஸ்ரீமான் சர்மாவின் புத்தகத்தில் இத்தகைய கோணல்களின்றி முதலில் கிரமமாக உயிரெழுத்துக்களும், பின்னர் ஓரெழுத்துச் சொற்களும், அதன்பின் குழந்தைகள் நன்கறிந்த இரண்டெழுத்துச் சொற்களும், இவ்வாறே மூன்று நான்கு எழுத்துச் சொற்களும், வரிசையாய் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இதுவன்றி ஸ்ரீ சர்மா தேர்ந்தெடுத்திருக்கும் சொற்கள் சிறுவர், சிறுமிகளிக்கு இளமையிலேயே தெய்வ பக்தியும் தேசபக்தியும் புகட்டக் கூடியவாறாக இருக்கின்றன. கொடி, தேர், இயேசு, காந்தி, புத்தர், கோயில், சிவன், இந்தியா, ராட்டினம், நந்தனார், ஸரஸ்வதி, ஹனுமான், சிவாஜி, கரிகாலன் என்ற சொற்கள் நாட்டின்கண் பற்றும், படைத்தவன் மீது தியானமும் வளர்க்கக்கூடியவாறாக உள்ளன.

நமது நகரசபைகள், ஸ்தலஸ்தாபன ஆட்சியுள்ள பஞ்சாயத்துக்கள் இவைகளின் கீழுள்ள பள்ளிக்கூடங்களில் இத்தகைய புஸ்தகங்களை பாடப்புத்தகங்களாக அமைத்தல் வேண்டுமென நாம் வற்புறுத்துவோம்.

இராஜபுத்திர விஜயம்

ஆசிரியர்: ஸ்ரீமான் ம. ஸா. சுப்பிரமணிய ஐயர். பிரசுரித்தவர்: மயில்வாகனன் கம்பெனி, ௩௨, அப்பப்பசெட்டி வீதி, சென்னை. விலை ரூ. ௧--௪--0.

இவ்வரிய புத்தகம் தெள்ளிய நடையில் உள்ளங்கவருமாறு எழுதப்பட்டிருக்கிறது. நிகரற்ற வீர வாழ்வு வாழ்ந்து, இன்னும் கவிமகளால் பூடப்பெறும் அக்னி குலத்தவரின் அறிய வரலாற்றைக் குறித்து வெகு சிறப்பாகக் கூறுகிறது. தமது வீரத்தாலும், பொறுமையாலும், நாட்டன்பாலும் உலகைத் திகைப்பித்த, மஹாராணா பிரதாப ஸிம்ஹன், அமரஸிம்ஹன் முதலியோரின் திருக் கதைகளை உருக்கமுடன் புகட்டும் இந்நூல் படிப்போருக்கு வீர உணவை அளிக்கிறது. இந்நூல் எழுதிய நண்பர் நம் நாட்டிற்காக அரும் பாடுபட்டவர். தமிழரின் முன்னேற்றத்திற்காக பல அரிய நூல்களைச் செய்திருக்கிறார். நாட்டன்பையும், அறவுணர்ச்சியையும், எழுப்பக்கூடிய இந்நூலை ஆதரிப்பது தமிழர் கடன். இத்தகைய நூல்களைப் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்தால் நமது வருங்காலத் தமிழ்நாடு வீரசக்தி பெற்று விளங்குமென்பது எமது எண்ணம்.

பாய் பரமானந்தன்— ஓர் நவீனம்

(ஸ்ரீ சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது)

தமிழ் நாட்டின் காரியஸ்தரான தேசபக்தர் ஸ்ரீ சொக்கலிங்கம்பிள்ளை எழுதிய பாய் பரமானந்தன் என்னும் நவீனம் இளந் தமிழில் நன்கு எழுதப்பட்டுத் தேசீய ஊக்கம் அளிக்கத்தகுந்த விஷயங்களடங்கியுள்ளதா யிருக்கிறது. இது படிப்போருக்கு தேச பக்தியை ஊட்டி வளர்க்கக் கூடியது. தமிழர் போற்றத்தக்க இனிய நவீனம். விலை ரூ ஒன்று. சேலம் பராசக்தி பிரசுராலயத்தில் கிடைக்கும்.

அறவழி—ஆசிரியர் ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

வெளியிட்டோர்: ஸ்ரீ ராமகிருஷ்ண பிரசுரசாலையார், தேவகோட்டை. விலை பன்னிரெண்டுக்கு அணு ௬.

இந் நூல் ஔவைப் பிராட்டியின் ஆத்திசூடியின் போக்கில் அகாதியாய் ௧௦௮ சூத்திரங்களடங்கியதாக விளங்குகிறது. இதன் முகவுரையில் ஸ்ரீமான் கோவிந்தராஜ அய்யங்கார் கூறுவது போல இச் சூத்திரங்கள் ராஜீய தேசீய வேலைகளுக் கேற்ற பல அறங்களையும் வற்புறுத்துகின்றன. இது பள்ளிக்கூடங்களில் மனப்பாடம் செய்யும்படி வைக்கக்கூடிய நூலாகும். நூல், ஆசிரியரிடமும் பிரசுரசாலையாரிடமும் கிடைக்கும்.

குடிநூல்—ஆசிரியர் தமிழ் நாட்டு கதர் இலாகா காரியதரிசி ஸ்ரீமான் க. சந்தானம். ஆரணி வ. நா. ரங்கசாமிஐயங்காரால் அச்சிட்டு பிரசுரிக்கப்படுவது.—சந்தா-மூன்று மாதத்திற்கு நான்கணு அல்லது ௨௦௦௦-கஜம் கைராட்டை நூல்.

கதர் அபிவிர்த்தி விஷயமாய் பொது ஜனங்கள் அறியவேண்டிய விஷயங்களைத் தொகுத்து எளிய நடையில் மாதம் இருமுறை அமாவாசை பௌர்ணமி தினங்களில் பிரசுரிக்கப்பட்டு இப்பத்திரிகை வெளிவரும். அக்டோபர் ௩௰ உக்குள் சந்தா அனுப்பிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் அகில இந்திய காங்கிரஸ் அங்கத்தினர் ௨௫ ல் ௩௫ ம், மாகாண அங்கத்தினர் ௬௨ ல் ௪௭ ம், ஜில்லா அங்கத்தினர் ௭௬ ல், ௫௬-பேருந்தான் அனுப்பியதாகத் தெரியவருகிறது. ஸ்ரீமான் தி.வெ. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை ௩௫௧-ம் இலக்கமுள்ள மிக இலேசான நூல் அனுப்பியிருக்கிறார். ஆந்திர நாட்டுக் கமலமணியம்மைப் போன்றவர் இங்கும் அனேகர் ஏற்படவேண்டுமென்று விரும்புவோம். நூல் அனுப்பியவர்களில் காங்கிரஸில் சம்பந்தப்படாதவர்கள் தொகை ௪௨௭-மொத்தம் ௫௭௨-ல் ௪௨௭-பேர் காங்கிரஸ் அங்கத்தினர்களல்லாதவர் என்றால் காங்கிரஸ் அங்கத்தினர் என்று சொல்லிக்கொண்டு ஆடம்பரம் செய்பவர்களைக் காட்டிலும் சாதாரண மனிதர்கள் கதரில் விசேஷ பக்தி பாராட்டுகிறார்களெனக் கூறலாம். இனியாவது காங்கிரஸ் பதவிகளை நாடுவோர் காங்கிரஸ் பெயரை கெடுக்காமலிருப்பதற்காகவாவது, நூல்நூற்பதை விடாமலிருப்பார்களாக!

Reviews of Books

[Telugu, Malayalam, Samskrit, and Hindi books will be reviewed in these columns. The reviews will be written in English and, if required, in Tamil also. When publishers desire their books to be reviewed in two languages, they should send us two copies of their books. ED. B. B.]

—O—

The COMRADE:- A WEEKLY REVIEW. Edited & Published by Moulana Mohamed Ali at Kucha--i-- chelan, Delhi. Annual subscription Inland Rs 12. Foreign 1 Sovereign.

After ten years of enforced silence Moulana Mohamed Ali's "Comrade" has begun to speak again. We shall not call its revival a second birth for we do not at all consider the 'Comrade' was ever dead to be born again. During the short period of four years dating from 1911 to 1914 it had lived intensively enough for its influence and spirit to permeate among its readers so deep as to continue down to the present day. Though bodily it had ceased to exist by a fiat of the Bureacracy its spirit had been kept alive by the noble sacrifices, its editor had to undergo during all these years. Therefore we hold its temporary disappearance as only somewhat of an eclipse but not death.

Its reappearance we are confident will mark a new era of unity among the two great communities of India and of political progress for the nation in general.

Current Thought, A MONTHLY MAGAZINE. Published by S. Ganesan 29- Pycrofts Road Triplicane. Annual subscription Inland Rs. 5. Foreign Rs. 7.

We have received the first two issues of "Current Thought" an English monthly, edited and published by Mr. S. Ganesan, Madras. It counts amoung its contributors such well-known litterateurs as C. F. Andrews, Harindranath Chattopadyaya, Rabindranath Tagore, such Journalists as Bernard Houghton and Upton Sinclair and such scholars as Prof. Sundararaman and Mr. S. V. Ramamoorthy. Judging from the excellence of the articles, it promises to be a magazine of great literary merit and if the two issues are a foretaste of what is yet to follow, we have no doubt that the journal will hold its own among the ranks of Indian periodicals. We have got a special interest in watching its progress in as much as it has made its appearance about the same time as ourselves.

An Echo from Andamans:-

Letters written by Br. Savarkar to his brother Dr. Savarkar.

Published by Vishwanath Vinayak Kelkar B.A.L.L.B Nagpore. Price Re One.

This is a collection of letters written by Vinayak Damodar Savarkar to his brother Dr. N. D. Savarkar from his exile in the Andaman isles. Being written at intervals of one year, each one of them carries with it the thoughts and emotions that have been surging in the writer's mind and heart seeking for an out-let for expression through twelve long months. Every year the day of letter-wrriting was hailed with over-whelming joy by the prisoner—'a year has rolled by and the happy day has come back again!'—says Vinayak in one of his letters. It is only those who had been themselves prisoners who can fully appreciate what Savarkar calls "the soul entrancing blessing"— that a letter from Home carries with it.

These letters are full of that longing for home and knowledge of affairs without. They are not anyhow politically interesting in as much as they had to pass through the vigilant scrutiny of the jail officials who had to certify that there was nothing objectionable in them. In the prison how the mind "shut up from new impressions feeds only upon the old ones" and lingers upon them is illtsurated in each one of these letters. The brave and silent manner, in which Savarkar endured the pangs of separation from family and friends, home and country will prove that he is made of the mettle of which heroes are made. At the same time it is the soft tender love of a brother which says, "The only thing that we feel still individually attaches us to this world is thy health and safety. So if you guarantee these two we shall be happiest." In the midst of the miseries of a prison they will be happiest if their brother at home is healthy and safe— that is the one thing that attaches them still to this world—We wonder if there would be anyone who would not be moved to tears when they read these few lines full of pathos. His love to his sister was no less—'Oh! I saw her for the last time in the Dongri jail. A sister is one of the richest gifts that a man can possess." Then his love and respect for his dearest elder sister-in-law are boundless. At every corner that his mind takes in its aimless rambles, her dear

160199

Reviews of Books

image is sure to be met and then his mind is sure to stop and build a new temple of a sweet and sad tear and hold her there a while and worship her. The letters as could be seen from the few stray pieces we have given above abound in that "milk of human kindness," of which we hear so much but taste little indeed. The interest which these letters evoke centres round the human element—the elements of love and pathos; homesickness and companionship which the heart of the writer seeks after.

Further these letters must be read for their literary excellence. They can well rank with any of those epistles and letters which all students of English literature are familiar with. For their personal touches, pathetic notes, and easy style one can well compare them to any of Charles Lambs' writings. As for their diction one should call it what has been familiarly called by literary critics of XIX Century "Prose Poetry" or "Poetic Prose." The sweet melody and rythmic movement of these letters can well stand by any of Ruskin's writings.

Having pointed out their literary, human and other aspects we would commend these letters entitled "An Echo from Andamans" not only to every patriotic Indian but to every student of literature and every student of human nature. The book is priced at only a Rupee.

72
271, 824 BB
824.1-2

"பாலபாரதி"

தமிழ் ஜாதி புத்துயிர் பெற்று ஆச்சரியமான சக்தியுடன் விளங்கத் துவக்கும் இந்நாளில் அதன் மறுமலர்ச்சியாகிற கோடி சூரியப் பிரகாசத்தில் ஓர் லேசா லேசத்தின் பலத்தினால் தோன்றியுள்ள பாரத்துவாஜ ஆசிரமத்தின் ஆதரவில் இப் "பாலபாரதி" உதித்துளாள். நிமிஷத்துக்கொரு மனோகரமான வர்ணத்துடன் விரிந்து கொண்டு வருகிற இம் மறுமலர்ச்சித் திருவிழாவில் ஓர் பிரதானமான ஸ்தானத்தைப் பெறவேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டு "பாலபாரதி" அதற்குத் தன்னைத் தகுதியுள்ளவளாக ஆக்கிக் கொள்ளப் பல்லாற்றிலும் முயலுவள்.

ஸ்ரீமான்கள் சுத்தாநந்த பாரதி, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, மஹேச குமார சர்மா, வையாபுரிப் பிள்ளை, ப. ஸ்ரீனிவாஸாசாரியர்

முதலிய கலைஞர் தமது உயரிய வாக்குகளாலும் சிறிய நடையினாலும் "பாரதி"யை அலங்கரிக்க இருக்கையில் அவள் விரும்பும் ஸ்தானத்தைப் பெறுதல் அவளுக்கு அசாத்தியமில்லை. அரிய வியாசங்கள், இலக்கிய ஆராய்ச்சிகள், நவரஸங்களும் ஒழுகும் கதைகள், ஆத்தியாத்ம உபதேசங்கள் முதலிய பலவகைப்பட்ட சுவையுள்ள விஷயங்கள் "பாரதி"யில் மாதாமாதம் வெளிவந்து தமிழ் நாட்டு மக்களுக்குக் கலைப் பயிற்சி தரும்—ரஸானுபவத்தைக் கொடுக்கும்.

தமிழின் நறுமணத்தை அனுபவிக்க விரும்புவோர் "பாலபாரதி"க்குச் சந்தாதாராகச் சேர்ந்தே தீரவேண்டும்.

சந்தா விகிதம்

இந்தியா பர்மா லங்கைகளுக்கு	வருஷம்	ரூ. ௫.
	ஆறு மாதம்	ரூ. ௩.
	மூன்று மாதம்	ரூ. ௧-௧௨
வெளி நாடுகளுக்கு	வருஷம்	ரூ. ௬-௮
	ஆறு மாதம்	ரூ. ௪-0

விளம்பர விகிதம்

ஒரு பக்கம்	ரூ. ௧௨.	அரைப் பத்தி	ரூ. ௩-௧௨
அரைப் பக்கம் அல்லது ஒரு பத்தி	ரூ. ௭-௮.	கால் பத்தி	ரூ. ௨-0

சந்தாதார்கள் ஏற ஏற விளம்பர விகிதம் ஏறிச்செல்லுமாதலால் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்கள் இப்பொழுதே ஒரு வருஷத்துக் கென ஒப்பந்தம் பேசிக் கொள்ளுதல் நலமென்று யோசனை சொல்லுவோம். ஒப்பந்த விளம்பர விகிதங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்க.

காரியஸ்தன்,
"பாலபாரதி,"
சேரமாதேவி (திருநெல்வேலி ஜில்லா.)

THE KURAL

OR

The Maxims of Tiruvalluvar

Translated by

Acharya V. V. Subrahmanya Aiyar.

Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.

—(o)—

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition will be ready by the 15th of December, 1924, and will be beautifully bound in cloth.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

The Bala Bharati Bookshop,

Sheramadevi.

சேரமாதேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, ரா. அனந்தகிருஷ்ணனால் பிரசுரிக்கப்பெற்றது.